பக்கங்கள்: இருபத்துநான்கு

Registered as a Newspaper

# சஞ்சீவி

விலை ரூபா 10-00

மலை:9 வள்ளுவர் ஆண்டு 2031 சித்திரை 17 சனிக்கிழமை (29-04-2000) SANJEAVY - Regenerative Tamil Weekly சிகரம்:48

# நெருக்கடி குறித்து நேரில் பேச ரணிலுக்கு ஜனாதிபதி அழைப்பு!

## செவ்வாயன்று சந்திப்பு

கொழும்பு.ஏப்ரல்29

**ஆனையிறவு வீழ்ச்சியை அடுத்து நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை குறித்து நேரில் பேசுவதற்கு வருகை தருமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே. கட்சிக் குழுவுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று அழைப்பு விடுத்துள்ளார்.**

**அலரிமாளிகையில் எதிர்வரும் செவ்வாய் பிற்பகல் 3.00 மணிக்கு இச்சந்திப்பை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.**

ஐ.தே.கவின் தவிசாளர் கரு ஜெயசூரியாவுடன் நேற்று தொடர்பு கொண்டே ஜனாதிபதி இந்த அழைப்பை விடுத்ததாக தெரிவிக்கப்பட்டது.

இந்த அழைப்பை ரணில் விக்கிரமசிங்க ஏற்கும் பட்சத்தில் சந்திப்பு செவ்வாயன்று இடம்பெறும்.

இந்தச் சந்திப்புக்கு வருமாறு

(8ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் படையினர் கட்டாய சேவைக்கு!

கொழும்பு,ஏப்.29

முப்படைகளிலிருந்து ஓய்வு பெற்ற - 50 வயதுக்கு குறைந்த - அனைவரையும் மீண்டும் சேவைக்கு வருமாறு கோரும் அறிவிப்பை ஜனாதிபதி சந்திரிகா நேற்று விடுத்தார்.

★ முப்படைகளில் ஏதேனும் ஒன்றில் 5 முதல் 12 வருடங்கள் சேவையாற்றி ஓய்வுபெற்றோர் இந்த Regular Reserve சேவையில் இணைய வேண்டும்.

★ இத்தகையோரை வேலைக்கு வைத்திருப்போர் அவர்கள் சேவைக்கு திரும்புவதற்கு அனுமதிக்காவிட்டால் அத்தகையோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

★ இதன்படி அடுத்த பத்து நாள்களுக்கள் சேவைக்குத் திரும்பாதோருக்கு கடும் தண்டனை வழங்கப்படும்.

★ இவ்வாறு சேவைக்கு சேர்க்கப்படுவோர் வடக்கு - கிழக்கில் யுத்தம் தீவிரம் குறைந்த பகுதிகளில் பணியாற்றும்படி பணிக்கப்படுவர்.

- இவ்வாறு ஜனாதிபதியின் அறிவிப்பு கூறிகின்றது. (உ-3-7-4)

## சமாதானத்துக்காகவே யுத்தம் ஜனாதிபதி மீண்டும் வலியுறுத்து

கொழும்பு,ஏப்.29

"வடபகுதித் தமிழர்களும், தென்பகுதிச் சிங்களவர்களும் சமாதானமாக வாழ வழிவகுப்பதற்கே யுத்தத்தை நடத்துகிறோம்".

நேற்று தொலைக்காட்சியில் தோன்றி நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் ஜனாதிபதி குமாரதுங்க இவ்வாறு தெரிவித்தார்.

"தமிழ் மக்களுக்கு நாம் எதிரானவர்கள் அல்லர். நாட்டு மக்களின் சமாதான வாழ்க்கையைப் பாதிக்கும் பயங்கிரவாதத்துக்கு எதிராகவேநாம் யுத்தத்தைத் தொடுத்துள்ளோம்.

சகலருக்கும் பாதுகாப்பு வழங்குவதில் அரசு உறுதியாக உள்ளது. பாதுகாப்புப் படையினருக்குத் தேவையான ஆயுதங்கள் உள்ளிட்ட சகல வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன; தேவையானவை தொடர்ந்து வழங்கப்படும். - இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (உ-3-7)

## இந்தியாவிடம் உதவி கோரும் கருத்து தெற்கில் தீவிரம்

கொழும்பு,ஏப்.29

தற்சமயம் நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையை எதிர்கொள்ள இந்தியாவிடம் உதவி கோரி, அதற்குப் பிரதியுபகாரமாக திருமலைத் துறைமுகத்தை இந்தியாவுக்குக் குத்தகைக்கு வழங்கலாம் என கொழும்பிலுள்ள அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

"இன்று உருவாகியுள்ள நிலை

(8ஆம் பக்கம் பார்க்க)

## விமானத்தைக் கடத்தப் புலிகள் திட்டம்?

கொழும்பு,ஏப்.29

கொழும்பு சர்வதேச விமான நிலையத்தில் இருந்து பயணிகள் விமானம் ஒன்றை கடத்துவதற்கு சிலர் திட்டமிட்டு வருவதாக தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாக இந்திய அதிகாரிகள் இலங்கைக்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.

இந்தியப் பத்திரிகை ஒன்று இவ்வாறு தகவல் வெளியிட்டுள்ளது.

தமது உரிமைப் போராட்டத்தின்பால் சர்வதேசக் கவனத்தை ஈர்ப்பதை நேக்கமாகக் கொண்டு புலிகளின் ஆதரவாளர்கள் இந்த கடத்தலின் பின்னணியில் இருந்து செயற்படக் கூடும் எனச் சந்தேகிக்கப்படுவதாகவும் அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (உ-3)

## ஐ.தே.கவினர் ஆர்ப்பாட்டம்

யுத்தச் செய்திகளை வெளியிடுவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கக் கோரி ஐ.தே.கட்சி எம்.பிக்கள் உட்பட அக்கட்சியினர் சுமார் அறுநூறு பேர் நேற்று முற்பகல் நாரஹென்பிட்டியில் உள்ள தகவல் திணைக்களத்தின் முன் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

தகவல் திணைக்கள பணிப்பாளருக்கும்,விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தொடர்பு இருப்பதாகக் கூறிய ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆனையிறவு யுத்தம் குறித்து அரசு உண்மையான தகவல்களை மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டுமெனக் கோரிக்கையும் விடுத்தனர்.

## பிணை அனுமதி

குருநகர் சிறுத்தீவுக் கடலில் வைத்து நேற்று முன்தினம் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட ஆறு மீனவர்களும் ஊர்காவற்றுறை நீதிவான் ஆர்.ரி. விக்னராஜா முன்னிலையில் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர். அவர்களை சரீரப் பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்தார்.

## 50தமிழர் கைது

கொழும்பு,ஏப்.29

கொட்டாஞ்சேனை, வத்தளை போன்ற இடங்களை நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்திய பொலீசார் 50 தமிழ் இளைஞர்களைக் கைது செய்துள்ளனர். (உ-7)

## சிங்கள உறுமய கட்சியில் அர்ஜுனா

கொழும்பு,ஏப்.29

கடந்த புதன்கிழமை கொழும்பில் 'சிங்கள உறுமய' என்ற பேரினவாதக் கட்சி அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட வைபவத்தில் பிரபல கிரிக்கெட் வீரரும், முன்னாள் இலங்கை அணியின் கட்டனுமான அர்ஜுனா ரணதுங்கா முக்கிய பிரமுகராகப் பங்குபற்றியுள்ளார்.

சிங்களவரையும்,சிங்கள தேசத்தையும் பாதுகாக்கும் நோக்குடன் இந்தக் கட்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-3)

## இப்படியும் இரத்தம் கறக்கப்படுகிறது!

வவுனியா,ஏப்.29

தேடுதலின் போது கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து ஆனையிறவில் காயமடைந்த படையினருக்காக இரத்தம் பெற்ற சம்பவம் வவுனியா நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது

சாஸ்திரிகூழாங்குளம், புதுக்குளம் பகுதிகளில் நேற்று முன்தினம் தேடுதல் நடத்திய படையினர் 11 தமிழ் இளைஞர்களை கைது செய்திருந்தனர் எனவும் -

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் வவுனியா ஆஸ்பத்திரிக்கு அழைத்து வரபட்டு இரத்ததானத்துக்கு உட்படுத்தபட்டனர் எனவும்-

வவுனியாச் செய்திகள் தெரிவித்தன. (உ-7)

## பளையை நோக்கி புலிகள் நகர்வு!

யாழ்ப்பாணம்,ஏப்.29

ஆனையிறவைக் கைப்பற்றியுள்ள புலிகள், அங்கிருந்து வடக்கே பளையைநோக்கி நகரும் உத்தியுடன் புதிய தாக்குதல்களை ஆரம்பித்திருப்பதாக செய்திகள் கூறுகின்றன.

ஆனையிறவை கைப்பற்றிய பின்னர் வடமுனையில் தாம் நிலைகொண்டிருந்த பிரதேசங்களிலிருந்து சுமார் ஒன்றரை கிலோமீற்றர் தூரத்துக்கு நேற்று புலிகள் முன்னேறியுள்ளனர் என்று இராணுவ விமர்சகர் இக்பால் அத்தாஸ் நேற்று மாலை தெரிவித்தார்.

ஆனால் இராணுவப் பேச்சாளர் அதனை மறுத்துள்ளார்.

பளைக்கு சுமார் மூன்று கிலோமீற்றர் தொலைவில் உள்ள புதுக்காட்டுச் சந்திப்பிரதேசத்தைப் புலிகள் தமது முழுக்கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தள்ளனர் எனவும்-

பளை வரைவில் புலிகள் வசம் வீழும் நிலைகாணப்படுவதாகவும்-

செய்தி ஏஜென்சி ஒன்று அறிவித்தது. (உ-7)

## மிருசுவில், உசன், தவசிக்குளம் மக்கள் நேற்று இடம்பெயர்வு

எழுதுமட்டுவாழ்,மிருசுவில்,உசன் ஆகிய பகுதிகளில் நேற்று ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததை அடுத்து-

அந்தப் பகுதியிலுள்ள மக்கள் கையில் எடுத்த உடைமைகளுடன் கண்டிவீதி வழியாக யாழ்ப்பாணம் நோக்கியும், பருத்தித்துறை வீதி வழியாக வரணி நோக்கியும் நேற்று இடம் பெயர்ந்த வண்ணமிருந்தனர்.

மிருசுவில் திருக்குடும்ப மடத்தில் தங்கியிருந்த அநாதைப் பிள்ளைகள் பாதுகாப்பான இடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அந்தத் தேவாலயத்தில் தங்கியுள்ள திருத்தந்தைகளும், கன்னியாஸ்திரிகளும் யாழ்ப்பாணம் ஆயர் இல்லத்துக்கு வருவர் எனக் கூறப்பட்டது. (உ-3-133-173-139)

## கல்லுண்டாய் வீதியில் எலும்புக்கூடு மீட்பு!

வலி.தென்மேற்கு,ஏப்.29

நவாலிதெற்கு - கல்லுண்டாய் வீதியில் ஆண் ஒருவரின் எலும்புக்கூடு ஒன்று நேற்றுக் காலை தோண்டி எடுக்கப்பட்டுள்ளது.

வீதித்திருத்த வேலைக்கு ஊரிமண் அள்ளும் பணியில் ஈடுபட்டிருந்த ஊழியர்கள் இந்த எலும்புக்கூட்டைக் கண்டு, பின்னர் அந்தப் புதை குழியைத் தோண்டி அதனை மீட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வெள்ளை நிறச்சாரம், வெள்ளை நிறச்சேட்டுடன் அந்த எலும்புக்கூடு இருந்ததாகக் கூறப்பட்டது.

எலும்புக்கூட்டின் தலைப்பாகம், முன்பக்கம் ஆகியவற்றில் அடிகாயங்களுக்கான அடையாளங்கள் காணப்பட்டதாகவும் கூறப்பட்டது. இந்த எலும்புக்கூட்டுக்குரிய சடலம் சுமார் ஆறு, ஏழு மாதங்களுக்கு முன் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இந்தப் பகுதியில் வேறும் பல எலும்புக்கூடுகள் புதைக்கப்பட்டிருக்கலாம் என இப்பிரதேச மக்கள் சந்தேகம் தெரிவிக்கின்றனர். (உ-185)

### ஆனையிறவு தாக்கப்பட்ட சமயம்

## பிரிகேடியர் இரட்ணசபாபதி புலிகளுக்குத் தகவல் தந்தாரா?

### புதிய சர்ச்சை கிளப்பப்படுகிறது

கொழும்பு,ஏப்.29

ஆனையிறவுப் பெரும்தளம் விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டபோது அங்கு கடமையில் இருந்த சிறிலங்கா இராணுவத்தின் மூத்த அதிகாரியான பிரிகேடியர் இரட்ணசபாபதி புலிகளுக்குத் தகவல் வழங்கியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டு குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் விசாரிக்கப்பட்டுவருவதாக சில செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டுள்ளன. ஆனால் அதனை பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை

(8ஆம் பக்கம் பார்க்க)

## நான்கு புதிய செயலாளர்கள் மாகாண சபையில் நியமனம்

திருகோணமலை,ஏப்.29

வடக்கு-கிழக்கு மாகாணசபையில் நான்கு அமைச்சுகளுக்கு புதிய செயலாளர்கள் நியமிக்கப்பட்டிருப்பதாக அறியவருகின்றது.

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் பதில் செயலாளராக நியமிக்கப்பட்ட க.பரமேஸ்வரன் செயலாளராகப் பதவியேற்றுள்ளார்.

பொதுச் சேவைகள் ஆணைக்

(8ஆம் பக்கம் பார்க்க)

## அதிரடி அரங்கு

யாழ். ஆஸ்பத்திரியில் நோயாளர்களுக்கு வழங்கப்படும் உணவின் தரம் குறித்துப் புகார் கூறப்படுகின்றது.

முன்னர் வர்த்தகத் திணைக்களத்தினால் மரக்கறி வகைகள் மற்றும் பொருள்கள் வழங்கப்பட்டு வந்தன. இது நிறுத்தப்பட்டு தற்சமயம் தனியார் நிறுவனம் மூலம் சமையலுக்கான உணவுப் பொருள்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன.

சந்தையில் மலிவான விலையில் உள்ள மரக்கறி வகைகளே பெரும்பாலும் உணவுக்காக வழங்கப்படுகின்றன. தற்சமயம் கறணைக் கிழங்கு கிலோ 3 ரூபா முதல் 5 ரூபா வரை விற்பனையாகின்றது. தொடர்ந்து பத்து நாள்களுக்கு மேல் தினமும் கறணைக்கிழங்குக் கறியே உணவாக வழங்கப்பட்டுவருகின்றதாம்.

இதேபோன்று "சீசனுக்குச் சீசன்" சந்தையில் விலை குறைந்த விலையில் விற்கும் மரக்கறிகளே உணவுக்கு வழங்கப்படுவதாகவும் கூறப்பட்டது.

நோயாளர்களுக்கு மட்டும் அல்லாமல் இந்த உணவே ஆஸ்பத்திரி சிற்றூழியர்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றது. அவர்களும் கூட தற்போது விநியோகிக்கப்படும் உணவு குறித்துத் தமது கவலையை வெளியிட்டுள்ளனர்.

* * *

சுகாதாரத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட - பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கான - பயிற்சிக் காலத்தில் இடம்பெற்ற சில சம்பவங்கள் குறித்துப் பயிற்சி பெற்றவர்களில் ஒரு சிலர் வேதனையோடு சுட்டிக்காட்டும் விடயம் இது:-

பயிற்சிக் காலத்தில் "பயிலுநர்கள் நலன்புரிச் சங்கம்" என்ற அமைப்பு உருவாக்கப்பட்டு பயிலுநர்களிடமிருந்து - பல்வேறு வாக்குறுதிகளின் அடிப்படையில் - நிதி திரட்டப்பட்டது. பயிலுநர்கள் பயிற்சி முடிந்து வெளியேறி ஒரு வருடமாகிவிட்டது. ஆனால் கொடுத்த வாக்குறுதிகள் எவையும் நிறைவேறவில்லை. அறவிடப்பட்ட பல்லாயிரக்கணக்கான ரூபா பணம் எங்கு, யார் கையில் உள்ளது என்பதும் தெரியவில்லை.

இது தவிர, பயிற்சியின் முடிவில் ஒரு சஞ்சிகை வெளியிடுவதற்கு என்று கூறி வர்த்தகர்களிடமும் பணம் அறவிடப்பட்டதாகத் தகவல். ஆனால் சஞ்சிகை எதுவும் வெளியாகவில்லை.

சுருட்டப்பட்ட பணம் எங்கே என்பதைச் சுகாதாரப் பகுதியினர்தான் கண்டுபிடித்து அம்பலப்படுத்த வேண்டும் என்கின்றார்கள் பாதிக்கப்பட்டோர்.

அம்பலப்படுத்துவார்களா? உண்மை நிலையைப் பகிரங்கப்படுத்துவார்களா? - உரியவர்களுக்கு இக்கேள்விகள் சமர்ப்பணம்.

* * *

ஆனையிறவைக் கைப்பற்றுதற்காகப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கைகளின் வீச்சு பளை, எழுதுமட்டுவாழ் வரை இருந்ததை நாம் எல்லோரும் அறிவோம்.

பளை உள்ளிட்ட பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் சிக்குண்டிருந்த சில ஆயிரக்கணக்கான மக்கள் சரியான நேரத்தில் அப்பகுதியில் இருந்து வெளியேறியதனால்தான் பெருமளவு உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டன. இந்த மக்கள் தாம் விரும்பிய - பாதுகாப்பான - இடங்களுக்கு வெளியேறுவதற்கான களநிலைமையை ஏற்படுத்திக் கொடுத்ததில் யாழ். பல்கலைக்கழக மாணவரின் பங்கு பணி பெரிதும் பாராட்டப்படுகின்றது. தமது எதிர்காலத்தையும், கல்வி வசதிகளையும் - சில இடங்களில் தமது உயிரையும் கூட - பணயம் வைத்துத்தான் இந்தச் சூழ்நிலையை அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்தார்கள்; மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறினர்; மனித அழிவுகள் தவிர்க்கப்பட்டன.

இந்தப் போராட்டத்தின் மூலம் சமூகத்தில் யாழ். பல்கலைக்கழக மாணவரின் 'இமேஜ்' பெரிதும் உயர்ந்திருக்கின்றது என்பது வாஸ்தவம்தான்.

ஆனால் இந்த 'இமேஜை'த் தொடர்ந்து தக்க வைத்திருப்பதற்கான முயற்சிகளை அவர்கள் தொடர்ந்து ஏன் எடுக்கக் கூடாது? இதற்காக அவர்கள் தொடர்ந்து போராட்டம் நடத்த வேண்டும் என்பதல்ல; ஒழுங்காக - பண்புள்ளவர்களாக - சமூகம் மதிக்கத்தக்கவர்களாக - அவர்கள் நடந்துகொண்டாலே போதுமானது.

அதற்கு அவர்கள் முதலில் செய்ய வேண்டியது தம்மத்தியில் - மிகச் சிறிய எண்ணிக்கையினரான - 'கோசப்புக்' கூட்டம் புரியும் 'ராகிங்' என்ற அநாகரிகத்தை ஒழிப்பதுதான்.

"தம் மத்தியில் கேவலமான - மிக அநாகரிகமான - 'ராகிங்' என்ற கொடூரப் பண்பை வளர்த்து, அதை ஒழிக்காமல், அதற்குப் பாதுகாப்பும் உரமும் ஊட்டி வருபவர்கள், சமூக நலன் என்ற பெயரில் போராடக் களத்தில் குதிப்பது கேலிக்குரியது" என்று பலரும் சுட்டிக் காட்ட இடங்கொடுக்கலாமா?

ஹர்த்தாலைச் செயற்படுத்துவதற்காக புதுவருடத்துக்கு முதல்நாள் களத்தில் குதித்த யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு யாழ். ஆஸ்பத்திரி வீதியில் கசப்பான அனுபவம் ஒன்று கிட்டியது நமக்குத் தெரிந்ததுதான். யாரோடு மோதினார்கள், அவர்கள் எப்படி நடந்து கொண்டார்கள், என்ன கேள்விகளை எழுப்பினார்கள், எத்தகைய சந்தர்ப்பத்தில் - என்ன நோக்கத்தோடு அத்தகைய கேள்விகளை எழுப்பினார்கள், அதன் பின்னணி என்ன என்பவையெல்லாவற்றையும் விட்டுவிடுவோம்.

ஆனால் ராகிங்கையும் யாழ். பல்கலைக்கழக மாணவர்களையும் தொடர்புபடுத்தி அவர்கள் கேள்வி எழுப்பிய போதே, ஹர்த்தாலில் ஈடுபடுவதற்குக் காட்டிய வேகத்தை ராகிங்கை ஒழிக்கவும் பயன்படுத்த வேண்டும் என்ற தீர்மானத்துக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் வந்திருக்க வேண்டும். அப்படி வந்திருந்தால்தான் அவர்கள் நியாயமானவர்கள் என்று சமூகம் ஏற்றுக் கொள்ளமுடியும்.

தாங்கள் நியாயமானவர்கள் என்பதைப் போராட்டம் நடத்தியவர்கள் காட்டுவார்களா? அல்லது "ஊருக்கடி உபதேசம்; உனக்கல்ல - எனக்கல்ல" - என்று நடந்து கொள்ளப் போகின்றார்களா?

'கெல்ஃப்' வகுப்புக்கள் ஆரம்பமாகியுள்ளன. வடமராட்சிப் பகுதியில் பகிடிவதை அநாகரிகமும் முழு மூச்சில் தொடங்கிவிட்டதாகத் தகவல்.

யாழ். பல்கலைக்கழகத்தின் போராட்ட சக்திகளின் அறிக்கைகளை அல்ல - உளப்பூர்வமான நடவடிக்கைகளை - சமூகம் எதிர்பார்க்கின்றது. அவர்கள் என்ன செய்யப்போகின்றார்கள்.

– மின்னல் –

## வத்தளையில் 250 தமிழர்கள் கைது

வத்தளையில் நேற்றுமுன்தினம் பொலீஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்புத் தேடுதலின்போது 250க்கும் மேற்பட்ட தமிழர்கள் வயது வேறுபாடு இன்றி கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் வத்தளை பொலீஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். விசாரணைகளின் பின்னர் 21பேர் தடுத்து வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. ஏனையோர் விடுவிக்கப்பட்டனர்.

21 பேரிடமும் வதிவிடப்பத்திரம் மற்றும் அடையாளஅட்டைகள் என்பன இல்லாத காரணத்தினாலேயே தடுத்து வைக்கப்பட்டு மேலதிக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-9-8)

## பாடசாலைகளில் அடுத்த மாதம் தர்ம வாரம்

சுன்னாகம்,ஏப்.29

பாடசாலைகளில் அடுத்த மாதம் ஒருவார காலம் தர்ம வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. எதிர்வரும் மே மாதம் 12 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை இவ்வாரம் நடைமுறைப்படுத்தப்படும்.

கல்வி, சமயம் சார்ந்த தாபனங்கள் மூலம் ஒழுக்க மேம்பாட்டை முன்வைத்து, குணதர்மவிருத்தியில் நாட்டமுள்ளதும், தீய ஒழுக்கங்களைப் புறக்கணிக்கக்கூடியதும், தற்காலத்துக்குப் பொருந்தக்கூடியதுமான நேர்மையான எண்ணங்களைப் பிள்ளைகளிடம் பரப்புவதே இவ்வாரம் கொண்டாடப்படுவதன் நோக்கம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான பல்வேறு நிகழ்ச்சிகளைப் பாடசாலைகள் மூலம் நடத்தவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (ஐ-27)


### இலங்கை மின்சார சபை
### சகல மின்பாவனையாளர்களுக்குமான மின்தடை பற்றிய அறிவித்தல்

காங்கேசன்துறை - சுன்னாகம் மின்மார்க்கங்களில் அவசர வேலைகள் செய்யவிருப்பதனால் நாளை (2000-04-30) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30மணி தொடக்கம் மாலை 2.00 மணிவரை யாழ். குடாநாடு முழுவதற்கும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

இதனால் தங்களுக்கு ஏற்படும் சிரமங்களுக்காக வருந்துகின்றேன்.

பிரதேச மின் பொறியியலாளர்
இலங்கை மின்சார சபை,
யாழ்.பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.

'சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்'
இலங்கை மின்சார சபை. (C/11992)

### விக்னா கல்வி நிறுவனம்
பிரிவு 4
**O/L DAY CLASS**
ஆரம்பம்
03-05-2000 8.30-2.00
பிரிவு 5
வெகுவிரைவில்
(75852)

### ராஜா
யாழ்ப்பாணம்
அஜித், ஷாலினி
நடிப்பில்
**அமர்க்களம்**
காட்சிகள்
10.30, 2.30, 5.00
(C/11604)

### நாகம்ஸ்
சுன்னாகம்
குதூகல ஆரம்பம்
இரண்டு மாதங்களின் முன்
இந்தியாவில் வெளியான
வெற்றிச் சித்திரம்
**விஜய், சாளினி, ரகுவரன்**
நடித்த
**கண்ணுக்குள் நிலவு**
(ரீல்ஸ்)
விஜயின் ஒரு வித்தியாசமான நடிப்பு
காட்சிகள் 11.00, 2.30
(புதிய நேரம்)
(C/1198)

### லிபேட்டி
அச்சுவேலி
கார்த்திக், ரோஜா, கௌசல்யா
நடிப்பில்
**சந்தித்த வேளை**
(புதிய வெளியீடு)
காட்சிகள் :10.30, 2.30
T.P- 070-212223
- 070-212678
FAX No. 0094 -70212223
(75816)

### கண்ணீர் அஞ்சலி
எமது அணி மாணவன் பிரகாஷ்சங்கர் அவர்களின் தந்தையார்
**திரு K. சுந்தரமூர்த்தி**
அவர்கள் 27-04-2000 அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.
அன்னாரின் ஆத்ம சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் எமது கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.
*17ஆம் அணி*
*மருத்துவபீட மாணவர்கள்*
(75859)

### வாழ்த்துகின்றோம்
போற்றுகின்றோம் உங்கள் வரவை
திடம் கொண்ட பேராசிரியர்
**பொன். பாலசுந்தரம்பிள்ளை நாயகனே**
இருபத்தி எட்டில் இருந்து ஏற்றுக் கொண்டீர்
இரண்டாவது முறையாக உபவேந்தர் பதவி
புத்தாயிரமாண்டில் புதுப்பொலிவு கண்டுவிட்டீர்!
காப்பாற்றி வைத்தீர் கல்வி வளத்தை முன்பு.
உயர்த்தி வைத்தீர் உயர்கல்வி அபிவிருத்தியை
கூட்டிடுவீர் உயர்கல்வி வளத்தை மீண்டும்
பேராசிரியர் துரைராஜா காட்டிய வழியில்
பல்கலைக்கழகம் தனித்துவத்துடன் தலைநிமிர்ந்து நிற்குமே.
முன்னாள் தலைவர்
*யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம்*
ச. க. தனேந்திரன்
(75858)

### யூபிலி நாயகனை வாழ்த்துகின்றோம்

**அருட்திரு. பயஸ். இருதயதாஸ்**

இறையருளால் குருநகரில் குருமணியாய் ஆனவனே
மறைபணியை அகமதனில் பெரும்பணியாய் ஏற்றவனே
கறைபடிந்த எம்மனதில் இறைபணியை வளர்த்தவனே
இறைபணியை நல்மனதாய் வளர்த்திடவே வாழ்த்துகின்றோம்.

தேவனவன் தெரிந்தெடுத்த திருக்குலத்தின் தாரே
தேன்சுவையின் திருமறையின் குருகுலத்தின் நேசா
பொங்குஅலை நகர்வாழும் பெருங்குலத்தின் அமலா
பங்கமில்லா குரவர்களை ஈன்றநகர் பாலா

ஐயைந்து ஆண்டு பணி ஆற்றிட்ட மைந்தா
அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம் வானுயரும் உன்பணி

நன்றியுடன்
S.N. **பயஸ் குடும்பத்தினர்.**
13/2, தண்ணீர்த்தாங்கி வீதி,
5ஆம் குறுக்குத்தெரு, குருநகர், யாழ்ப்பாணம்.

இன்று (29-04-2000) சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் நன்றித்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். (75844)

### GOODS FOR SALE
MINE-TECH

The following under - mentioned goods are for sale. Any prospective buyer MUST **first make an appointment** to view the goods. Appointments can be made by phoning 3331, only between the hours of 3pm & 5pm on Monday 1st May.

All goods will have a reserved value. A 50% deposit will sucure a sale. ONLY CASH WILL BE ACCEPTED. (NO cheques!!)

| Item | Reserved Vlaue | New |
|---|---|---|
| 1. New Deep freezer (Singer - 3251ts or 11.8cu.ft) | Rs. 33,600.00 | (38,060) |
| 2. New Rice Cooker, large (Singer - 41ts) | Rs.4,050.00 | (4,580) |
| 3. Wooden Towel Racks x 7 each @ | Rs.530.00 | (600) |
| 4. Table Tennis Table (complete) | Rs. 10,600.00 | 12,000) |
| 5. Wooden Kitchen Table x 2 (1m x 2m) each @ | Rs. 4,400.00 | (5,000) |
| 6. Wooden Table (1m x3m) | Rs. 5,300.00 | (6,000) |
| 7. Plastic Chairs x 8 each @ | Rs. 550.00 | (700) |
| 8. TV Satellite Dish Antenna (large) | Rs. 25,600.00 | (29,000) |
| 9. Sony colour TV 24 ins | Rs. 24,600.00 | (28,000) |
| 10.Sony VCR | Rs. 15,800.00 | (18,000) |

Address:
*No.8, KATPAKA VINAYAKAR VEETHY, NALLUR.*
(75851)

## சின்னஞ்சிறு விளம்பரம்

**உடன் தேவை**

Computer க்குரிய Key Boards, Monitors (புதியது அல்லது பாவிக்கப்பட்டது.) உடனடியாகத் தேவை. வைத்திருப்பவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 1051 மே/பா உதயன் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.(C/1196)


## பாடசாலைபழைய கட்டடத்தில்

கொழும்புத்துறை சென் ஜோசப் வித்தியாலயம் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் மீண்டும் தனது பழைய இடத்தில் ஆரம்பமாகி நடைபெறுகின்றது.ஷெல் வீச்சுக் காரணமாக கடந்த தவணையின் இறுதி நாள்களில் இப்பாடசாலை அங்கிருந்து இடம்மாற்றப்பட்டு சென். பற்றிக்ஸ் கல்லூரியின் வகுப்பறைகளில் இயங்கி வந்தது. (ஜ-51)


# கஜி கொம்பியூட்டர் றோணியோ

- கொம்பியூட்டர் ரைப்பிங்
- கொம்பியூட்டர் ஸ்ரென்சில் கட்டிங்
- கொம்பியூட்டர் றோணியோ

முதலிய அனைத்து வேலைகளும் தரமான முறையில் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.

25, சிவன் புதுவீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(75837)


# வாழ்த்துகின்றோம்

**சேவையிலிருந்து ஓய்வு பெறுதல்**



## திருமதி செல்லமுத்து தம்பு

(கனிஷ்ட அதிபர், யா/மீசாலை வீரசிங்கம் ம.வி.)

28-10-1960 இல் ஆசிரிய சேவையில் இணைந்த திருமதி செல்லமுத்து தம்பு அவர்கள் கிளி/தர்மபுரம் அ.த.க. பாடசாலை, கிளி/உருத்திரபுரம் ம.வி, இ/இரத்தினபுரி வேர்க்குஷன் பெண்கள் உயர்தரப்பாடசாலை ஆகியவற்றில் ஆசிரியராகப் பணியாற்றி 01-01-1967 முதல் யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகவும், பகுதித் தலைவராகவும், கனிஷ்ட அதிபராகவும் 33 ஆண்டுகள் தொடர்ந்து தனது சேவையை சிறப்பாக ஆற்றி இன்றுடன் தனது 60 ஆவது அகவையில் தனது 40 வருட சேவையில் இருந்து ஓய்வு பெறுகிறார்.

இவர் தனது ஓய்வுகாலத்தில் சகல நலன்களும் பெற்று சிறப்புடன் வாழ இறையருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.

(75838) – *பழைய மாணவர்கள*

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 22 - 04 - 1919 |  | 11 - 05 - 1999 |

அமரர்

## பரமு தாமோதரம்பிள்ளை

(இளைப்பாறிய ஆசிரியர்)

*திதி: 29-04-2000*

**எமது அன்புத் தெய்வமே!**
**பாசமுள்ள தந்தையே!**
**நீங்கள் அனைந்து ஆண்டொன்று சென்றாலும்**
**ஆறாது எம் துயர்.**

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை இறைஞ்சுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வாகையடி வீதி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

(75782)

## நாடகங்கள் மேடையேற்றம்

யாழ்ப்பாணம்,ஏப்.29

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் வழங்கும் 'அக்கினிப் பெருமூச்சு' நாடகம், வசாவிளான் மத்திய மகாவித்தியாலய நுண்கலை மன்றம் வழங்கும் 'தாட்சாயனி கல்யாணம்' நாட்டிய நாடகம் என்பன இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இணுவில் லஷ்சுமி திரையரங்கில் மேடையேறவுள்ளன.

சுன்னாகம் லயன்ஸ் கழகச் செயற்பாட்டு நிதிக்காகவே இவ் விரு நாடகங்களும் மேடையேற்றப்படுகின்றன. (க)

## இன்று

சுன்னாகம்,ஏப்.29

ஆறாம் தரத்திற்கான மொழித்திறன் விருத்தி விசேட செயற்திட்டத்திற்கான கருத்தரங்கும் செயலமர்வும் இன்று காலை 8-30மணியிலிருந்து 4-30 மணி வரை மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் பொறுப்பாசிரியர்களை கலந்துகொள்ளுமாறு வலிகாமம் வலய தமிழ் உதவிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.(ஜ-27)

* * *

யாழ்ப்பாணம்,ஏப்.29

உடுப்பிட்டி, இமையாணன் மேற்கு விநாயகர் பாலர் பாடசாலையின் வருடாந்த விளை யாட்டுவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆசிரியை திருமதி இ. மேகலா தலைமையில் நடைபெறவுள்ளது. (க-10)

## நோயாளர் எண்ணிக்கை அதிகரிப்பு

வடமராட்சி,ஏப்.29

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் வெளிநோயாளர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

வடமராட்சி கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்துள்ள மக்கள் பெருமளவில் சிகிச்சை பெறவருவதே நோயாளர் எண்ணிக்கை அதிகரிப்புக்கு காரணமாகும்.

வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறவருவோரில் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டோரே அதிகமானவர்களாவர். (ஜ-173)

## கலந்துரையாடல்

வலி.கிழக்கு,ஏப்.29

நல்லூர்ப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட திருநெல்வேலி வடகிழக்கு (ஜே.113) கிராம உத்தியோகத்தர் பிரிவில் சமுர்த்தி செயலணி அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

18 வயதுக்கும் 35 வயதுக்கும் உட்பட்ட 'அ', 'இ', 'உ' பங்கீட்டு அட்டையுடையவர்கள் அனைவரும் இதில் கலந்துகொள்ள முடியும் என்று அப்பகுதி சமுர்த்தி உத்தியோகத்தர் தெரிவித்தார். (ஜ-180)

## ம. எண்ணெய் விநியோகம்

நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சகல கிளைகளிலும் பங்கீட்டு அட்டைக்கு ஒரு லீற்றர் மண்எண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது.

திருநெல்வேலி காளிகோயிலடிக் கிளை, முடமாவடிக்கிளை மற்றும் நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பிரதான கிளை ஆகியவற்றில் நேற்று முன்தினம் மக்கள் நீண்ட வரிசையில் நின்று மண்எண்ணெயைப் பெற்றதைக் காண முடிந்தது. (ஜ-7)

## கொழும்புத்துறையில் தேடுதல்

கொழும்புத்துறை மேற்கு சுவாமியார் வீதி, பாஷையூர் மேற்கு ஆகிய பகுதிகள் நேற்றுக் காலை படையினரால் சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

வீடு வீடாகச் சென்ற இராணுவத்தினர் வீடுகளைச் சோதனை செய்ததோடு பொதுமக்களின் அடையாள அட்டைகளையும் பரிசோதித்தனர். (ஜ-17-30)

## கோதுமை மா விநியோகம்

கே.கே.எஸ். வீதியில் அமைந்திருக்கும் யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட விற்பனை நிலையத்தில் கோதுமை மா தாராளமாக வழங்கப்பட்டு வருகின்றது.

பாவனையாளர்கள் எதுவித தட்டுப்பாடுமின்றி இந்த நிலையத்தில் மாவைப் பெற்றுக்கொள்ள முடியும்என்று சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (ஜ-17)

# யாழ். கல்விக் கல்லூரிக்கு 17 ஊழியர்கள் நியமனம்

வலி.கிழக்கு,ஏப்.29

யாழ். மாவட்டத்தில் உள்ள சில அரச திணைக்களங்களில் கடமை புரிந்த தற்காலிக அரச ஊழியர்களை யாழ். தேசியக் கல்விக் கல்லூரிக்கு நிரந்தர ஊழியர்களாக நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

தற்காலிகமாகக் கடமையாற்றும் 17 ஊழியர்களை செயலக வேலை வங்கியூடாக கல்விக் கல்லூரிக்கு நிரந்தரமாக நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் பொருட்டு கடந்த 20ஆம், 21ஆம் திகதிகளில் கல்விக் கல்லூரி பீடாதிபதி அலுவலகத்தில் இவர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டது. இவர்களில் உயர் தகுதியின் அடிப்படையில் 17 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் என்றும், -

இவர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்குவது தற்போது ஏற்பட்டுள்ள கொழும்புத் தொடர்பு துண்டிப்பால் தாமதமாகும் எனவும் -

கல்லூரியின் பீடாதிபதி தெரிவித்தார்.

இந்த ஊழியர்கள் கல்விக் கல்லூரியில் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

(ஜ-180)


# விற்பனைக்கு

கனோன் போட்டோப்பிரதி இயந்திரங்கள் எம்மிடம் விற்பனைக்காக உள்ளன.

உடன் தொடர்புகளுக்கு:

**ஒளிக்கதிர், சங்கரத்தைச்சந்தி, வட்டுக்கோட்டை.**

(75843)


யாழ். மாவட்டத்தில் முன்னணி வகிக்கும்
நான்கு கழகங்கள் பங்குபற்றும்

# மாபெரும் காட்சி உதைபந்தாட்டம்

இடம்: யாழ். பல்கலைக்கழக மைதானம

காலம்: 30-04-2000 / 07-05-2000 } ஞாயிறு பிற்பகல் 3.30 மணி

**30-04-2000 பங்குபற்றும் அணிகள்**

1. யாழ். பல்கலைக்கழகம் எதிர் றோயல் வி.க.
2. சென் அன்ரனீஸ் வி.க எதிர் சென்நீக்கிலஸ் வி.க

பிரவேசம்: 10 ருபா

உதைபந்தாட்ட அணி
யாழ். பல்கலைக்கழகம்


விளம்பர அன்பளிப்பு:
தங்க நகை உலகின் தன் நிகரில்லாத ஸ்தாபனம்
**நியூ பிரியங்கா ஜூவலர்ஸ்**
177 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(75840)


# கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன்

**தி. ஹரிகரனின் அன்புத் தந்தை**

## கணபதிப்பிள்ளை திருச்சிற்றம்பலம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

A/L 2000
வர்த்தக மாணவர்கள்
யா/வைத்தீஸ்வராக் கல்லூரி.

(75855)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சொர்ணலிங்கம் சண்முகானந்தி

ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சொர்ணலிங்கம் சண்முகானந்தி நேற்று (28-04-2000) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார், அண்ணாமலை சொர்ணலிங்கத்தின் அன்பு மனைவியும், இரத்தினகுமார் (நோர்வே) அவர்களின் பாசமிகு தாயாரும், சாந்தியின் அருமை மாமியாரும், நடராசாவின் அன்புமிகு அண்ணியும், கண்ணகியின் சகோதரியும் லதாஜினி, பிரபாகரன் ஆகியோரின் பெரியதாயாரும், சண்முகசாமியின் (வவுனியா) சகோதரியும், திருமதி ஆறுமுகம் சீதேவிப்பிள்ளை (கனடா), திருமதி பேரம்பலம் நாகம்மா ( வாழைச்சேனை), திருமதி ஏகாம்பரம் அன்னலச்சுமி (நேரியகுளம்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (28-04.2000) வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணியளவில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
அண்ணாமலை சொர்ணலிங்கம்
(கணவர்)

*74/14, ஆத்திசூடி ஒழுங்கை,*
*கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.*

(75842)

## திருமதி புஸ்பமாலா சத்தியமூர்த்தி

(முன்னாள் திருமணப் பதிவாளர், நாச்சிமார் கோவிலடி)

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பமாலா (புஸ்பா) கனடாவில் 26-04-2000 புதன்கிழமை அன்று அகாலமரணமடைந்து விட்டார்.

அன்னார் சத்தியமூர்த்தியின் (அப்பன்) அன்பு மனைவியும், ஆரணியின் அன்புத் தாயாரும், தையல்பாகர் (கனடா) காலஞ்சென்ற அன்னலட்சுமி (பட்டு) தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஞானமூர்த்தி மற்றும் தங்கமலர் (கனடா) தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற ஆறுமுகம் (நாச்சிமார்கோயிலடி), சரஸ்வதி தம்பதிகளின் பேர்த்தியும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

தகவல்
ஆ. குபேந்திரன் (ப.பி)
(மாமன்.)

*148, சிவப்பிரகாசம் வீதி,*
*நாச்சிமார் கோயிலடி.*

(75849)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி (Broiler), கல் பேட்ஸ், சேவல் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: இல. 15, 6 ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (75726)

புறொயிலர், விறாத்து, கல்பேட்ஸ் சுகாதார முறையில் நுட்பமான நிறுவையில் சுறுசுறுப்பான சேவையில் கிடைக்கும். தொடர்பு: அப்பன், யாழ். (மீன்சந்தை முன்பாக). (75644)

புறொயிலர், விறாத்து, கல்பேட்ஸ் சுகாதார முறையில் நுட்பமான நிறுவையில் சுறுசுறுப்பான சேவையில் கிடைக்கும். தொடர்பு: சீமான் குரு நகர் (மீன் சந்தை முன்பாக), யாழ்ப்பாணம். (75645)

Broiler Cullbirds, Cockerels இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் காலை 7.00 மணிக்குப் பெற்றுக் கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (75748)

புறொயிலர் இறைச்சிக்கோழி விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தல் இலவசம். இல. 31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் வளவு) (75538)

## PRIMA கோழித்தீன்

எல்லா வகையான Prima கோழித்தீன் மூடையாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன், உமி மூடையாக உண்டு. தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (75746)

## நாடகம்

'ஆயிரம் பொய்சொல்லி நாடகம் கேட்டீர்களா? அதை எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல்கள். 1. யாழ்ப்பாணமா? கொழும்பா? நாடகநூல் 2. நாடகம் எழுதுவது எப்படி? 3. யாழ்ப்பாணம் சிறுகதைத் தொகுதி ரூபா 50. (75744)

## ஆடுகள் விற்பனை

ஜமுனாபாரி பால் ஆடு 2 கிழமைக் குட்டியுடன், 2 சுத்தமான ஜமுனாபாரி கடாய்க் குட்டிகள், மறிக் குட்டிகள், ஜமுனாபாரி ஆடுகள் விற்பனைக்குண்டு. தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை(நல்லூர்வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (75747)

## விற்பனைக்கு

8 அடி Dish Antenna L.T 999 Euro Star Receiver, JRX8 CD (2000W) Set, முழுவதும் கண்ணாடியிலான அழகிய மீன்தொட்டி 3'X1 1/2' சகல உபகரணங்களுடனும் கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட பெரிய அளவிலான கலர் மீன்களுடன் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 41, இராசாவின் தோட்டவீதி, யாழ்ப்பாணம். T.P 2226. (75775)

## இலகு திருமணசேவை

1971 B.Sc சைவ ஆசிரியர், 1969 Fine Arts சைவ Lecturer, 1968 MSc Lecturer, 1969 MSc Engineer Singapore இவர்களுக்கு மணப்பெண்கள் தேவை. மணமக்கள் தேர்வுக்கு தொடர்பு: ஞாயிறுகளில் துரைவிமலா நாச்சிமார் கோவிலடி, K.K.S Rd. யாழ்ப்பாணம். (75778)

## மரக்கன்றுகள் விற்பனை

மா, பலா, தேசி, தோடை, கமுகு, குறோட்டன், றோஸ், செவ்வரத்தை மற்றும் பூக்கன்றுகள், Concrete பூச்சாடிகள், பூக்கன்றுகளுக்குரிய Concrete கல்லுகள் மற்றும் மருந்து வகைகள் பெற்றுக் கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர்வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (75749)

## மணமகள் தேவை

28 வயது, 7 இல் செவ்வாயுள்ள B.Sc. பட்டதாரி ஆசிரியருக்குப் பொருத்தமான படித்த அழகிய மணமகள் தேவை. தொடர்பு முகவரி: விளம்பர இல. 1046 மே/பா. உதயன், யாழ்ப்பாணம். (75607)

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 37 வயது நிரம்பிய உத்திரம் 2 ஆம் பாதம் லக்கினத்தில் செவ்வாயும் கிரகபாவம் 66ம் உடையதுமான மணமகனுக்கும் 31 வயதுடைய மிருகசீரிடம் 2 ஆம் பாதம் செவ்வாய் தோஷமற்ற 25 கிரகபாவம் உடையதுமான அழகான மணமகன்களுக்கு தகுந்த மணமகள்களைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். கல்வி,அழகு,உத்தியோகம் நிரம்பப்பெற்றோர் விரும்பத் தக்கது. தொடர்புகளுக்கு: விளம்பர இல. - 1052 மே/பா உதயன். (75781)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

தோற்றம் 1921 - 11 - 19



மறைவு 2000 - 03 - 16

அமரர்

**சுப்பிரமணியம் சண்முகராஜா**

(சந்திரா சோதிடநிலையம் - கொக்குவில் மேற்கு)

திதி: 29-04-2000

**எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு சிவபதம் அடைந்த எமது அன்புத் தெய்வம் ஐயா! அவர்களின் சபிண்டீகரண நிகழ்வுகள் இன்று (29-04-2000) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற உள்ளதால் அத்தருணம் உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரையும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் பங்கு பற்றுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.**

ஆடியபாத வீதி,
கொக்குவில் மேற்கு.

**பெறாமகள்**
**சறோஜினி குடும்பம்**

# தென்மராட்சியில் மக்கள் தங்கியுள்ள 20 பாடசாலைகள் இயங்கவில்லை

## மாற்று ஏற்பாடு செய்வது பற்றி ஆலோசனை

தற்போது இடம்பெறும் யுத்த அனர்த்தங்களால் தென்மராட்சிப் பகுதியில் இருபது பாடசாலைகள் முற்றாக இயங்கமுடியாத நிலையில் உள்ளன.

யுத்தம் நடைபெறும் பல்வேறு இடங்களில் இருந்தும் இடம்பெயர்ந்த நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இப்பகுதிப் பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளதால் பாடசாலை வேலைகளும் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

இப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் தமது வரவை உறுதிப்படுத்துவதற்காக கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் சென்று கையொப்பம் இட்டு வருகின்றனர்.

இடம்பெயர்ந்து பாடசாலைகளில் தஞ்சம் புகுந்துள்ள மக்களுக்கு வேறு தங்குமிட வசதிகளை அளித்து பாடசாலைகளைத் தொடர்ந்து இயங்கவைப்பதற்காக அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டு வருவதாக தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் எஸ். செல்வராசா தெரிவித்தார். (ஐ-8)

# மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

**மருதர் கந்தையா**

**(நீலகண்டு)**

மலர்வு : 02-10-1917
உதிர்வு : 21-01-1997



திருமதி

**கந்தையா இரத்தினம்**

மலர்வு : 27-10-1927
உதிர்வு : 02-05-1997

திதி:- 29-04-2000

**எம்மை வளர்த்து ஆளாக்கிய அன்புத் தெய்வங்களே!**
**எம்மைவிட்டுப் பிரிந்து ஆண்டு மூன்று**
**சென்றாலும் எம்முடன் வாழ்ந்து**
**கொண்டிருக்கும் உங்கள் நினைவுகள்**
**என்றென்றும் மறையாது.**

உங்கள் பிரிவால் துயருறும்

பட்டினசபை ஒழுங்கை,
மானிப்பாய்.

**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

(C/75783)


KOBE KOBE KOBE KOBE KOBE

## நீங்கள் வாங்கும் பொருள் தரமானதா?

**உங்கள் பணத்திற்கு நாங்கள் உத்தரவாதம் தருகின்றோம்.**

**உங்களுக்குத் திருப்தி இல்லையெனில் முழுப்பணத்தையும் மீளப்பெறும் வசதியோடு வருகின்றன!**

KOBE

## அன்டனாக்களும் பூஸ்டர்களும்

**இலங்கையில் விற்பனையில் முதலிடம் வகிக்கும் தரமான பொருள்கள்**

உங்களுக்கு அபிமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை தங்கு தடையின்றி தெட்டத் தெளிவாகப் பார்த்து மகிழ வேண்டுமா?

*கவலை வேண்டாம்!*

*இப்போது!*

32 வெவ்வேறு வடிவங்களில் அன்டனாக்களும், 21 வடிவங்களில் பூஸ்டர்களும்

**இலங்கையில் எப்பாகத்திலும் பாவனைக்குகந்த தரத்துடன் கிடைக்கின்றது.**

LANKA NIPPON

No. 18, Keyzer Street, Colombo - 11
Tel: 437735 Fax: 437736
No. 10, Trelawny Place,
(Behind Milk Bar)
Bambalapitiya Junc. Colombo - 4
Tel:589992

**'KOBE தரத்தின் சின்னம்'** (C/11883)

# 395 கடன் உதவிச் சங்கங்கள் விரைவில் புனரமைக்கப்படும்

யாழ்ப்பாணம்,ஏப்.29

யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டோருக்கு உதவி வழங்கும் வகையில் யாழ். மாவட்டத்தில் 395 சிக்கனக் கடன் உதவிக் கூட்டுறவுச் சங்கங்களைப் புனரமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ். மாவட்டச் சிக்கனக் கடன் உதவிக் கூட்டுறவுச் சமாசத் தலைவர் எஸ்.முருகேசன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

யாழ். மாவட்டத்தில் ஆரம்பத்தில் 515 சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன. ஆனால் தற்போது 180 சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கங்களே செயற்பட்டு வருகின்றன.

இந்தச் சங்கம் மாணவர்களுக்கான உயர்கல்விக் கடன், விதவைகளுக்கான கடன், இளைஞர்களுக்கான சுயதொழில் வாய்ப்புக் கடன், விவசாயக்கடன், உற்பத்தி முயற்சிக் கடன் போன்ற கடன்களை வழங்கும் திட்டங்களை நடைமுறைப்படுத்த உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

(ஜ-8)

## வவுனியாவில் 8பேர் கைது!

வவுனியா,ஏப்.29

வவுனியாவில் கடந்த செவ்வாயன்று படையினர் மேற்கொண்ட தேடுதலின்போது 8 பேர் கைது செய்யப்பட்டதாக வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(உ-6-9)

## மேதினக் கூட்டம்

வடமராட்சி,ஏப்.29

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பின் மேதினக் கூட்டம் எதிர்வரும் திங்களன்று முற்பகல் 9-00 மணிக்கு வேம்படி வீதியில் உள்ள கட்சி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள ஏனைய தமிழ்க் கட்சிகள் இம்முறை மேதினத்தைக் கொண்டாடவில்லை. ஆனால் மேதினம் தொடர்பான துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டுள்ளன.

(ஜ-173)

## பரீட்சை முடிவு வெளியானது

யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவபீட மாணவர்களின் பரீட்சை முடிவுகளின் முதல் பகுதி நேற்று முன்தினம் வெளியாகின.

வணிகமாணி பட்டப் பரீட்சை மற்றும் தொழில் நிர்வாகமாணிப் பரீட்சை முடிவுகளின் முதற்பகுதியே வெளியாகியுள்ளதாக வணிக முகாமைத்துவ பீடத் தலைவர் தெரிவித்தார்.

(ஜ-8)

# திருக்கேதீஸ்வரத்தில் இருந்து இன்னமும் படை வாபஸாகவில்லை

## திருப்பணிச் சபை கவலை தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.29

வரலாற்றுச் சிறப்பு மிக்க திருக்கேதீஸ்வரம் ஆலயத்திலிருந்த இராணுவ முகாம் மற்றும் பாசறைகள் எவையும் அகற்றப்படாதிருப்பது சைவப் பெருமக்களுக்கு மிகுந்த வேதனையை அளிக்கிறது.

திருக்கேதீஸ்வரர் ஆலயத்திருப்பணிச் சபையினால் வெளியிடப்பட்ட பிரசுரம் ஒன்றில்இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

அப்பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

திருக்கேதீஸ்வரம் திருக்கோயில் 91 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை பூசைகளோ, அபிஷேகங்களோ பெருவிழாக்களோ எதுவுமின்றி இராணுவப் படையால் ஆக்கிரமிக்கப்பட்டு காடுமண்டி, சீரழிந்த நிலையில் காட்சி தருகின்றது.

திருக்கோயிலையும் அதனைச் சூழ்ந்துள்ள மாந்தை மேற்குப் பிரதேச பூமியையும் சமாதான வலயமாகப் பிரகடனம் செய்யுமாறும் ஆலய மறுசீரமைப்புக்குத் தேவையான நிதியை ஒதுக்கித் தருமாறும் ஜனாதிபதியிடம் கோரப்பட்டது.

இக்கோரிக்கைக்கு அமைய இராணுவ முகாமை, பாசறையை அகற்றுவதற்கான ஆணை பிறப்பிக்கப்படும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது ஆனால் இராணுவ முகாமோ பாசறையோ இன்று வரை அகற்றப்படாதிருப்பது வேதனைக்குரியதொன்றாகும்.

இவ்வாறு அந்தப் பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஜ-5)



# பூரணை நாள்களில் கடைகள் கட்டாயம் மூடப்பட வேண்டுமா?

## உதவித் தொழில் ஆணையாளர் விளக்கம்

பூரணை தினங்கள் வர்த்தக விடுமுறை தினங்களாக அரசாங்கத்தினால் அறிவிக்கப்படாத நிலையில் அத்தினங்களில் யாழ் வர்த்தக நிலையங்களை கட்டாயம் மூடும்படி அறிவுறுத்தல் விடுக்கலாமா என்ற சாரப்பட கடந்த 16-04-2000 அன்று 'உதயன்' பத்திரிகையின் அதிரடி அரங்குப் பகுதியில் எழுப்பப்பட்ட கேள்விக்கு 'தொழிற்ச் சட்டங்களை அமுல்படுத்தல்' என்ற தலைப்பில் யாழ்ப்பாணம் உதவித் தொழில் ஆணையாளர் இ.தர்மலிங்கம் தமது விளக்கத்தை தந்திருக்கிறார். அது வருமாறு:-

தொழிற் சட்டங்களின் கீழ் அதிகாரம் எல்லைப்படுத்தப்பட்டுள்ள எல்லா ஊழியர்களும் ஒன்றில் கடை, காரியால ஊழியர் சட்டத்தின் கீழோ அல்லது சம்பள சபைகள் கட்டளை சட்டத்தின் பகுதி 1 அல்லது பகுதி 2 இன் கீழோ உள்ளடக்கப்பட்டுள்ளார்கள். ஒவ்வொரு வகையான ஊழியர் விடயத்திலும் விடுமுறை நாள்கள் சிறிதளவு வேறுபட்டு இருக்கின்றன. கடை, காரியாலய ஊழியர் சம்பந்தமான விடயமே தற்போது பிரச்சினைக்கு உரிய விடயமாக இருப்பதால் அது பற்றிய நிலைமையினை தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

கடை, காரியாலய ஊழியர் சட்டத்தின் கீழ்வரும் ஒவ்வொரு ஊழியருக்கும் வாராந்த விடுமுறையாக ஒரு முழுநாளும் ஓர் அரை நாளும், வர்த்தக விடுமுறை நாள்களும், எல்லா போயா விடுமுறைகளும் கொடுக்கப்படவேண்டும். இது சம்பந்தமாக முறையே பிரிவுகள் 5,7,7அ என்பன பொருத்தமாக அமையும். இதற்கு மேலதிகமான இத்தகைய ஊழியர்கள் வருடாந்த ஏழு நாள்கள் அமைய லீவிற்கும், 14 நாள்கள் வருடாந்த லீவிற்கும் உரித்துடையவர்கள்.

ஓர் ஊழியரை ஒரு வாராந்த விடுமுறை தினத்திலோ, ஒரு வர்த்தக விடுமுறை தினத்திலோ, அல்லது ஒருபோயா விடுமுறை தினத்திலோ வேலைக்கு அமர்த்துவதற்கு சட்டத்தில் இடம் உண்டு. ஆனால் சில நிபந்தனைகளையும் மட்டுப்பாடுகளையும் பிரதானமாக அவர்களது மேலதிக வேதனக் கொடுப்பனவுகளையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். ஆனால் நடை முறையில் இத்தகைய நிபந்தனைகள், மட்டுப்பாடுகள், மேலதிக கொடுப்பனவுகள் சம்பந்தமாக அனேகமான தொழில் தருநர்கள் கடைப்பிடிப்பது இல்லை. இச்சூழ் நிலையில் இத்தகைய ஊழியர்களுக்கு வாராந்த விடுமுறை, வர்த்தக விடுமுறை, போயா விடுமுறை கொடுக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காகவே இத்தகைய விடுமுறை நாள்களில் கடைகள் மூடப்பட வேண்டும் என்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

ஊழியர்களுடனோ அல்லது ஊழியர் இல்லாமலோ கடைகள் யாவும் மூடப்படவேண்டும் என்ற தேவைப்பாடு கடை, காரியால ஊழியர்சட்டத்தின் பிரிவு 40 இன் கீழ் கட்டளையிடப்பட்டிருக்கின்றது. ஆனால் சில சட்ட, நிர்வாக தடைகள் காரணமாக இக்கட்டளையினை முழுமையாக செயற்படுத்த முடியாமல் இருக்கின்றது.

கடை,காரியாலய ஊழியர் சட்டத்தின் பிரிவு 40 இன் கீழ் கடை மூடும் கட்டளையும், விடுமுறைநாள்களில் ஊழியர்களுக்கு விடுமுறையளிப்பதும் இரு வெவ்வேறு விடயங்கள் ஆகும்.

சனிக்கிழமையில் அரைநாள், ஞாயிற்றுக்கிழமையில் முழுநாள் வர்த்தகப் போயா நாள்களில் கடைகளை பூட்டுவதற்கு 08-04-2000ஆம் திகதி எடுக்கப்பட்ட முடிவு சம்பந்தப்பட்ட ஊழியர்கள் தமது சட்டபூர்வமான நன்மைகளை பெறுவதனை நிச்சயப்படுத்துதற்காகவே ஆகும்.

நிபந்தனைகளும், மட்டுப்படுத்தல்களும், மேலதிக கொடுப்பனவுகளும் கட்டாயமாக இருக்க வேண்டும். இதனை அநேகமான தொழில் தருநர்கள் நேர்மையாகவும் விசுவாசமாகவும் கடைப்பிடிப்பதில்லை. எனவேதான் ஊழியர்கள் தொழில் சட்டங்களின் கீழான விடுமுறை சம்பந்தமான குறைந்தபட்ச நன்மைகள் ஆவது பெறுவதனை உறுதிப்படுத்துவதற்காகவே ஒரு மாற்றுவழியாக சகல கடைகளும் விடுமுறை நாள்களில் மூடப்பட வேண்டும் என்ற மாற்றுத் தீர்வுக்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்.

ஒரு நாகரிகமடைந்த சமுதாயத்தில் மக்கள் சட்டத்தை அனுசரித்து நடப்பது மாத்திரம் அல்லாது, ஊழியர்களும் மனிதர்கள் தான் என்ற மனிதாபிமான சிந்தனையுடன் செயற்பட வேண்டும் என்ற வாதத்தை மீண்டும் குறிப்பிட விரும்புகின்றேன். சட்டங்களில் இருக்கும் ஓட்டைகளைத் தேடிக் கண்டுபிடிப்பதும், தாம் செய்யும் பிழைகளை மறைப்பதற்கும் மற்றவர்கள் விடும் பிழைகளை சுட்டிக்காட்டசாக்குப் போக்கு கூறுவதும் ஒரு சிறந்த பிரஜைக்கு பெருமையைத் தேடித் தரமாட்டா. எப்படியிருந்தும் இரண்டு பிழைகள் ஒரு சரியான தன்மையை ஏற்படுத்தவும்மாட்டா என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஆசிரிய குறிப்பு:-**

*உதவி தொழில் ஆணையாளாரின் விளக்கம் குறித்து வர்த்தகர் அல்லது வர்த்தக ஊழியர்கள் யாரேனும் தங்கள் கருத்தினை தெரிவிக்க விரும்பின் அவற்றுக்கும் இடம் அளிக்கப்படும்.*

*அவற்றுக்கு உதவித் தொழில் ஆணையாளர் போன்ற பொறுப்புள்ள அதிகாரிகள் தரும் விளக்கங்களும் பிரசுரிக்கப்படும்.(ஆ-ர்)*

### பாடசாலைகள் தோறும்

# கல்வி வட்டங்களை நிறுவ ஐ.நா.கழகம் ஏற்பாடு

சுன்னாகம்,ஏப்.29

இலங்கை ஐக்கிய நாடுகள் கழகம் இடைநிலைப் பாடசாலை களில் கல்வி வட்டங்களை அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

பாடசாலைகளில் இத்தகைய வட்டங்களை அமைக்க அனுமதிக்குமாறு கல்வி, உயர் கல்வி அமைச்சிடம் கழகம் கோரியுள்ளது.

பாடசாலைகள் மூலமாக நடத்தப்படும் இக்கல்வி வட்டங்கள் வருடாந்த கட்டணத்தைச் செலுத்துவதன் மூலமாக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தால் வெளியிடப்படும் பத்திரிகைகளையும், பிரசுரங்களையும் மாதாந்தம் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான விவரங்களை 'செயலாளர் நாயகம், இலங்கை ஐக்கிய நாடுகள் கழகம், 39/1, சிறில் ஜான்ஸ் மாவத்தை, பாணந்துறை' என்ற முகவரியில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.(ஐ-27)


உ



## ஐயப்ப அடியார்களே!

சபரிகிரி ஐயப்ப சுவாமிக்கு கட்டுவன் கரண்டைக் குளத்தில் 20-04-2000ஆம் திகதி அன்று கும்பாபிஷேகம் நடைபெற்றது. தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இக்கோயில் இந்தியாவிலுள்ள சபரிகிரி ஐயப்ப சுவாமி கோயில் போன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் பிரதான பகுதிகளின் திருப்பணி வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. தொடர்ந்து திருப்பணி வேலைகள் நடைபெற்ற வண்ணமுள்ளன. இத்திருப்பணிக்கு உதவ விரும்புபவர்கள் தங்களால் இயன்ற நிதி உதவியைச் செய்து ஐயப்ப சுவாமியின் அருட்கடாட்சத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

*நிதியுதவி செய்ய விரும்புபவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.*

☞ தேசிய சேமிப்பு வங்கி
கணக்கு இலக்கம் - 57900
சி.அருணாசலக் குருக்கள்
யாழ்ப்பாணம்.

**NATIONAL SAVINGS BANK**
A/C No. 57900
**(Jaffna Branch)**

(75848)




வலி.மேற்குப் பிரதேச செயலகப் புதிய கட்டடத் திறப்புவிழா கடந்த வாரம் நடைபெற்றது. வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவர் ந.திருலோகநாதன் நாடா வெட்டி கட்டடத்தைத் திறந்து வைப்பதை முதலாவது படத்தில் காணலாம். அருகில் பிரதேச செயலர் திருமதி ப.திலகநாயகம், முன்னாள் பிரதேச செயலர் கா.சந்திரராசா ஆகியோரும் உள்ளனர்.

பிரதேச செயலகப் பெயர்ப்பலகையை யாழ். அரச அதிபர் க.சண்முகநாதன் திரைநீக்கம் செய்வதை அடுத்துள்ள படத்தில் காணலாம். *(படங்கள்: மூளாய் செய்தியாளர்)*



யாழ். மாநகர நீர் விநியோகத் திட்டம், ஜேர்மன் தொழில் நுட்பக் கூட்டுத்தாபனத்தின் (ஜி.ரி.சற்) உதவியுடன் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுவருகிறது. அண்மையில் குருநகர், பாஷையூர், ஈச்சமோட்டை, கொழும்புத்துறை ஆகிய பகுதிகளுக்கு பொதுக் குழாய் மூலமான நீர் விநியோகத்தினை ஜி.ரி.சற். பிரதிநிதி திரு.ஸ்ராபன் ஆர்.வேத் (Steffen R. Wirth) ஆரம்பித்து வைத்த போது எடுக்கப்பட்ட படம் இது. யாழ். மாநாகர சபை ஆணையாளர் வெ.பொ.பாலசிங்கமும் அதிகாரிகளும் படத்தில் காணப்படுகின்றனர். (ஐ)



யாழ். மாவட்டத்தில் 18 வயதுக்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இப்போட்டியில் முதலாமிடம் பெற்ற நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி வீரர்களைப் படத்தில் காணலாம். அவர்களுடன் பயிற்றுநர், அதிபர், ஆசிரியர்களும் காணப்படுகின்றனர்.

## நீர் இறைக்கும் இயந்திரம் திருட்டு

கிணற்றில் நீரிறைத்துக் கொண்டிருந்த நீரிறைக்கும் இயந்திரம் துணிகரமாகத் திருடப்பட்ட சம்பவம் கடந்த செவ்வாயன்று சுன்னாகம் தெற்கு விள்ளாணைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

தோட்ட உரிமையாளர் கிணற்றிலிருந்து மோட்டடி நீரிறைக்கும் இயந்திரத்தின் மூலம் சற்றுத் தொலைவில் உள்ள தோட்டத்துக்கு நீர்ப் பாய்ச்சிக் கொண்டிருந்ததாகவும் -

திடீரென நீர் வருவது குறைந்ததையடுத்து கிணற்றடிக்குச் சென்ற போது இயந்திரம் திருடப்பட்டமை தெரியவந்ததாகவும் -

தெரிவிக்கப்பட்டது. (ஐ-27)

## வேலைப் பட்டறை

வடமராட்சி,ஏப்.29

வடமராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் ஆண்டு 7 தொடக்கம் 10ஆம் ஆண்டு வரை ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான வேலைப்பட்டறைக் கருத்தரங்கு இன்றும், அடுத்த மாதம் 6ஆம், 13ஆம் திகதிகளிலும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரிய பயிற்சி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-173)

## தொடர்புகொள்ளக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.29

த.ஜெயதேவன், மே/பா. சற்குணேஸ்வரன், டச்சு வீதி, இருபாலை என்பவரைத் தொடர்பு கொள்ளுமாறு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு



புனரமைப்புச் செய்யப்பட்ட திருநெல்வேலி காளிகோவிலடி சனசமூக நிலையத் திறப்புவிழா கடந்த தைப்பொங்கல் தினத்தன்று நடைபெற்றது. நல்லூர் பிரதேசசபைச் செயலாளர் செ.செல்வரட்ணம் சனசமூக நிலையக் கொடியை ஏற்றிவைப்பதை இப்படத்தில் காணலாம்.

# திரு.க.அருந்தவராஜா அவர்களது சேவை நயப்பு விழா

மனித குலத்தின் சேவையில் 30 வருடங்கள் தொடர்சேவையாற்றிய சென் ஜோன் அம்புலன்ஸ் படையின் உதவி மாவட்ட ஆணையாளர் **உயர்திரு. கந்தையா அருந்தவராஜா** அவர்களுக்கு **'மணி ஓசை'** என்னும் பட்டத்தையும் 'ஒளி விளக்கு' என்னும் விருதையும் பெற்றோர் குழுமச் சபையினர் வழங்கிக் கௌரவிக்கும்
பாராட்டு விழா

இடம் : யாழ் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபம்.
காலம் : 30-04-2000 ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணி (புதியநேரம்)

விழாத் தலைவர் : உயர்திரு. ஆ.சி.நடராஜா *(தலைவர், பெற்றோர் குழுமச் சபை)*

## பிரதம விருந்தினர்கள்

உயர்திரு. க.சண்முகநாதன்
*(அரச அதிபர் யாழ்.மாவட்டம்)*

மூத்த பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம்
*(பீடாதிபதி, விஞ்ஞானபீடம், யாழ்.பல்கலைக்கழகம், தலைவர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ். கிளை)*

சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி J.P
*(தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)*

## சிறப்பு விருந்தினர்கள்

* ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்
*(நல்லை ஆதீன முதல்வர்)*
* பேராசிரியர் வ.ஆறுமுகம்
* பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ணஐயர்
*(தலைவர், இந்து நாகரிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.)*
* பேராசிரியர் கே.சின்னத்தம்பி
* பேராசிரியர் நா.ஞானகுமாரன்
*(தலைவர், மெய்யியற்றுறை, யாழ்.பல்கலைக்கழகம்)*
* வைத்தியகலாநிதி சீ.எஸ்.நச்சினார்க்கினியர்
*(மருத்துவபீடம்,யாழ்.பல்கலைக்கழகம்)*
* வைத்தியகலாநிதி பீ.திருமாறன்
*(பதில் மாகாண ஆணையாளர்,சென்ஜோன் அம்புலன்ஸ் படை)*
* உயர்திரு. ரீ.வி.கிருஷ்ணசாமி
*(உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்)*
* உயர்திரு. வே.பொ.பாலசிங்கம்
*(மாநகர ஆணையாளர், யாழ். மாநகர சபை)*
* உயர்திரு எஸ்.வேலாயுதம்
*(முன்னாள் கல்விப்பணிப்பாளர், யாழ்ப்பாணம்)*
* உயர்திரு. திருமதி.ம.நித்தியானந்தம்
*(பரிபாலகர்கள், ஏழாலை ஸ்ரீ வசந்த நாகபூசணி தேவஸ்தானம்)*
* திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல்
*(பதில் மேலதிக அரசஅதிபர், பிரதேசசெயலர், தெல்லிப்பழை)*
* உயர்திரு.ஆ.மகாலிங்கம்
*(பிரதேச செயலர், உடுவில்)*
* உயர்திரு.கே.கேதீஸ்வரன
*(பிரதேச செயலர் கோப்பாய்)*
* உயர்திரு. எஸ்.புத்திசிகாமணி
*(பிரதேச செயலர், பளை)*
* உயர்திரு. வீ.இராசையா
*(வலயக்கல்விப்பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்)*
* உயர்திரு. ப.விக்னேஸ்வரன்
*(வலயக் கல்விப்பணிப்பாளர், தீவக கல்வி வலயம்)*
* உயர்திரு. அ.தற்பரானந்தன்
*(உதவிக் கல்விப்பணிப்பாளர், உடுவில் கோட்டம்)*
* சிவஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள்
*(ஆதீனகர்த்தா, கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம்)*
* உயர்திரு. பெ.கனகசபாபதி
*(தலைவர், யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை)*
* உயர்திரு. சு.சிவசுப்பிரமணியம்
*(மாவட்ட செயலர், யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை)*
* உயர்திரு. சி.சிவமகாராஜா
*(தலைவர், தெல்லிப்பழை ப.நோ.கூ சங்கம், தலைவர், இலங்கை செஞ்.சங்கம், வலி.வடக்குப்பிரிவு)*
* கலாநிதி செல்வி.சி.வி.செல்லையா
*(அதிபர், உடுவில் மகளிர் கல்லூரி)*
* உயர்திரு. ந.சௌந்தரராஜன்
*(மாவட்ட சாரண ஆணையாளர், காங்கேசன்துறை)*
* உயர்திரு. மா.புவனேந்திரன்
*(மாவட்ட சாரண ஆணையாளர், கிளிநொச்சி)*
* உயர்திரு. க.பாலசுப்பிரமணியம்
*(தர்மகர்த்தா, நுணசை முருகமூர்த்தி கோயில், மாதகல்)*

## கௌரவ விருந்தினர்கள்

* உயர்திரு. எம்.எஸ்.கே.மகேஸ்வரன்
*(பொறுப்பதிகாரி, சிமெந்துக்கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை)*
* உயர்திரு. ரி.சுந்தரலிங்கம்
*(பொறியியலாளர், சிமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை)*
* திருமதி. செ.வேதவல்லி
*(மகளிர் விவகார உத்தியோகத்தர், யாழ்.மாவட்ட கூ.சபை)*
* திருமதி. சு.சந்திராதேவி
*(சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்)*
* உயர்திரு. சி.சி.வரதராசா J.P
*(செயலாளர், இந்து இளைஞர் பேரவை)*
* உயர்திரு. சிவநேயர் இ.தவகோபால்
*(தலைவர், பாலர் கல்விக் கழகம்)*
* உயர்திரு. ஆர்.ஜோய் இன்பராஜ்
*(தலைவர், மாணவர் ஒன்றியம், யாழ் பல்கலைக்கழகம்)*
* உயர்திரு. எஸ்.ஐங்கரன்
*(செயலாளர்,மாணவர் ஒன்றியம்,யாழ்.பல்கலைக்கழகம்)*
* உயர்திரு. Rtr.சி.அனுராஜ்
*(தலைவர்,யாழ்.நகர் மைய றோட்டரக்ட் கழகம்)*
* உயர்திரு.ப.கெங்காதரன் ஆச்சாரியார்.
* உயர்திரு.தி.குலவீரசிங்கம்

## நிகழ்ச்சி நிரல்

பி. ப 2.00 மணிக்கு விழா நாயகரை யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் இருந்து பாண்ட் வாத்திய இசையுடன் அழைத்துச் செல்லல்.
* கொண்டலடி விநாயகர் ஆலயத்தில் வழிபாடு.
* ஏற்றுயர் கொடி ஏற்றுதல்:
திரு. சா.விக்ரர் டி மெல், *பிரதேச நிறைவேற்று உத்தியோகத்தர்*
* விருந்தினர்கள் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தல்.
* தமிழ்த்தாய் வாழ்த்து:
* வாழ்த்துப்பா இசைத்தல்:
வயாவிளான். ம.ம.வி. ஆசிரியர்கள்.
* வரவேற்புரை:
செல்வி க.தயாழினி, *பகுதி அத்தியட்சகர் (தாதிகள் பிரிவு).*
* விழாத் தலைவரின் உள்ளத்தில் இருந்து சில வார்த்தைகள்:
திரு. ஆ.சி.நடராஜா.
* விழா நாயகரின் 30 வருட சேவைக்கு பதக்கம் அணிவித்து கௌரவித்தல்:
உயர்திரு க. சண்முகநாதன் அவர்கள்.
* 30 வருட சேவைக்கான கேடயம் வழங்குதல்:
உயர்திரு. T.V.கிருஷ்ணசாமி அவர்கள்
* "மணி ஓசை" பட்டம் வழங்கிக் கௌரவித்தல்:
பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம் அவர்கள்
* "ஒளி விளக்கு" விருது வழங்கிக் கௌரவித்தல்:
பேராசிரியர் வ.ஆறுமுகம் அவர்கள்
* "மணி ஓசை" பட்டத்துக்கான கேடயம் வழங்குதல்:
உயர்திரு ப.கெங்காதரன் ஆச்சாரியார்
* அருளாசியுரை:
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்
* சேவை நயப்புரை:
சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி. J.P
ஆசியுரை:
சிவஸ்ரீ கு.நகுலேஸ்வரக்குருக்கள்.
பொன்னாடை போர்த்திக் கௌரவித்தல்:
உயர்திரு. க.பாலசுப்பிரமணியம், உயர்திரு எஸ். சிவகுமாரன்.
*காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனத்தினர்.*
வாழ்த்துப்பா வழங்கல்:
வெண்புறா வெளிவாரிப் பிரிவு படை உறுப்பினர்கள், அச்சுவேலி.
மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், நீராவியடி.
திருமதி சுரேஸ்குமார் நாகலோஜினி - தலைவர்
இரட்ணசிங்கம் தவமணி - செயலாளர்
கந்தசாமி இரண்டதேவி - பொருளாளர்
* மலர்க் கொத்து வழங்கிக் கௌரவித்தல்:
செல்விகள் வசந்தகுமாரி நடராஜா, கோமதி சிவலிங்கம்
*(உரும்பிராய் தாதிகள் பிரிவு, சென ஜோன் அம்புலன்ஸ் படை)*
* பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தல்:
கலட்டி ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய நிர்வாக சபையினர்.
யாழ். நகர் மைய றோட்டரக்ட் கழகம்
யா/அச்சுவேலி ம.வி
யா/புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி.
* "மணி ஓசை" மலர் வெளியீட்டுரை:
உயர்திரு. எஸ். வேலாயுதம் அவர்கள்.
* "மணி ஓசை" மலரின் ஆய்வுரை:
பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ணஐயர் அவர்கள்
* "மணி ஓசை" மலர் வெளியிடுதல்:
முதற் பிரதியை வெளியிட்டு வைப்பவர்:
பேராசிரியர் கே.சின்னத்தம்பி அவர்கள்.
* "தேசிய பாசறை - 1998, 1999இல் சாதனை புரிந்து சரித்திரம் படைத்த யாழ். மத்திய மாவட்ட வீரர், வீராங்கனைகளுக்கு சின்னம் அணிந்து கௌரவித்தல்:
உயர்திரு. க.சண்முகநாதன் அவர்கள்
பேராசிரியர் நா.ஞானகுமாரன் அவர்கள்
உயர்திரு. வீ.இராசையா அவர்கள்
உயர்திரு. ப.விக்னேஸ்வரன் அவர்கள்
சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்
திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல் அவர்கள்
கலாநிதி செல்வி சீ.வி.செல்லையா அவர்கள்
* மாலை அணிந்து கௌரவித்தல்:
பெற்றோர்கள், படை உறுப்பினர்கள்.
* நியமனப்பத்திரங்கள் வழங்கல்:
உயர்திரு. வே.பொ.பாலசிங்கம் அவர்கள்
வைத்தியகலாநிதி நா.சிவராஜா அவர்கள்
வைத்தியகலாநிதி C.S.நச்சினார்க்கினியர் அவர்கள்
வைத்தியகலாநிதி B.திருமாறன் அவர்கள்
உயர்திரு. ஆ.மகாலிங்கம் அவர்கள்
உயர்திரு. பெ.கனகசபாபதி அவர்கள்
* இடம்பெயர்ந்த பளை, வடமராட்சி கிழக்கு மக்களுக்கு உதவ சிறப்புச் சேவையாற்றியவர்களைக் கௌரவித்தல்:
உயர்திரு. எஸ்.புத்திசிகாமணி அவர்கள்
உயர்திரு. கு.கேதீஸ்வரன் அவர்கள்
*(தலைவர், செயலாளர், மாணவர் ஒன்றியம், யாழ்.பல்கலை.)*
* விழா நாயகருக்கு பரிசில்கள் வழங்கல், மாலை அணிதல்:
பெற்றோர்கள், படை உறுப்பினர்கள்.
பிரிவு உத்தியோகத்தர் செல்வன் க.அருண் நித்தியநர்மதன் சாரணர்களின் அதிஉயர் விருதான ஜனாதிபதி விருதுபெற்றதைக் கௌரவித்தல்:
உயர்திரு க. சண்முகநாதன் அவர்கள்
* பாராட்டுரை:
*"வேதனையிலும் சாதனைபடைத்த தேசிய பாசறை வீரர்கள்"*
திருமதி செ. வேதவல்லி அவர்கள்
* சிறப்புரை:
*'இன்னல்கள் மத்தியில் 30 வருடங்கள் சேவையாற்றிய, சேவையாற்றும் அருந்தவம் அவர்கள்'*
திரு.தி.குலவீரசிங்கம் அவர்கள்
* சிறப்பு விருந்தினர்கள் உரை:
* பிரதம விருந்தினர்கள் உரை:
* பதிலுரை:
"மணி ஓசை" திருமிகு க.அருந்தவராஜா அவர்கள் *(விழா நாயகர்)*
* நன்றியுரை: திரு த. கதிரமலை,
*(இணைச்செயலாளர், பெற்றோர் குழுமச் சபை)*
* கலைநிகழ்ச்சிகள்
நாட்டிய நாடகம்: *"தாட்சாயனி கல்யாணம்"*
வயாவிளான் ம.ம.வி. நுண்கலை மன்றத்தினர்

***ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்***

சி.தம்பித்துரை
இணைச்செயலாளர்

பெற்றோர் குழுமச்சபை, சென்ஜோன் அம்புலன்ஸ் படை,
யாழ்.மத்திய மாவட்டம்.

த.கதிரமலை
இணைச்செயலாளர்

(C/11991)

## பேரவைக் கூட்டம்

யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக இரண்டாவது தடவையாக பதவியேற்றுள்ள பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை தலைமையிலான முதலாவது பேரவைக் கூட்டம் இன்று காலை 10மணிக்கு இடம்பெறவுள்ளது. நேற்று முதல் நான்கு வருடங்களுக்கு துணைவேந்தராக இவர் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார். (ஜ-3)

## கிரனேட் வீச்சு

கெடிகாமம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த படையினரின் வாகனம் மீது மீசாலை புத்தூர் சந்திக்கருகில் வைத்து கிரனேட் வீசப்பட்டது. இச்சம்பவம் நேற்று முன்தினம் நண்பகல் 12.30மணியளவில் இடம்பெற்றது. வீசப்பட்ட கிரனேட் வீதியில் வீழ்ந்து வெடித்ததால் வாகனத்துக்கு சேதம் ஏதும் ஏற்படவில்லை. (ஜ-117)

## கூ.சங்கத்தின் பொருள்கள் மீட்கப்படவில்லை

மருதங்கேணி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் இயங்கிய 5 கிளைகளிலிருந்து பொருள்கள், மற்றும் உபகரணங்களை மீட்க முடியவில்லை. இதனால் இக்கூட்டுறவுச் சங்கத்துக்கு சுமார் 15லட்சம் ரூபா வரையில் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

தாளையடி,மருதங்கேணி, மாமுனை, நாகர்கோயில் வடக்கு, நாகர்கோயில்தெற்கு ஆகிய ஐந்து கிளைகளிலிருந்தே உடைமைகளை மீட்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து மருதங்கேணி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர், இராணுவ உயரதிகாரிகளுடனும் யாழ் அரச அதிபருடனும் தொடர்பு கொண்டுள்ளார். (ஜ-109)

## புளியமரம் - தறிக்கத் தடை

யாழ். மாவட்டத்தில் விறகுக்காக புளியமரங்கள் வெட்டப்படுவதை தடை செய்யுமாறு சகல பிரதேச செயலர்களுக்கும் யாழ். அரசாங்க அதிபர் க.சண்முகநாதன் பணிப்புரை விடுத்துள்ளார்.

யாழ்.செயலகத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றிலேயே அவர் இந்த பணிப்புரையை விடுத்தார்.

புளியமரங்கள் விறகுக்காக தறிக்கப்படுவதினால் யாழ்ப்பாணத்தில் புளிக்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது.

புளியமரங்கள் தறிக்கப்படுவது நிறுத்தப்பட்டு மாவட்டத்துக்கு தேவையான புளியை இங்கேயே உற்பத்தி செய்து பெற முயற்சி செய்ய வேண்டும் என்றும் அரச அதிபர் தெரிவித்துள்ளார். (ஜ-5)

## இளைஞன் கைது

சுன்னாகத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக அவரின் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுன்னாகத்தைச் சேர்ந்த வேலுசிங்கம் ஜெயச்சந்திரன் (வயது22) என்பவரே கடந்த 26ஆம் திகதி ஊரெழு இராணுவத்தால் இரவு 11மணியளவில் அவர் தொழில்புரியும் கடையில் வைத்துக் கைதுசெய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஜ-10-5)

## நான்கு இளைஞர் சுட்டுக் கொலை

கொழும்பு,ஏப்.29

களுத்துறை,வாதுவ பிரதேசத்தில் இனந்தெரியாத ஆயுதபாணிகளால் நேற்று முன்தினம் நான்கு இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

நேற்று முன்தினம் நண்பகல் வாதுவ பிரதேசத்தின் வெவ்வேறு பகுதிகளில் 16,17,18 வயதுடைய இளைஞர்களும் ஓட்டோ சாரதி ஒருவருமே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவங்களைத் தொடர்ந்து அந்தப் பிரதேசத்தில் பெரும் பதற்றம் நிலவியது.

வாதுவ பகுதி பொலீஸார் இந்த மர்மக் கொலைகள் தொடர்பாக தீவிர விசாரணைகளை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஜ-8)

# வாழ்த்துகின்றோம்

## எடிசன் அக்கடமி

*தலைமை நிலையம்*
*411, கே.கே.எஸ்.வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*கிளை நிலையம்*
*18, வைமன் வீதி,*
*நல்லூர்*

### O/L இல் அதிசிறந்த பெறுபேறு பெற்ற எமது மாணவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1) | செல்வன் | ரஞ்சன் கஜானனன் | 10D |
| 2) | செல்வன் | வில்வநாதன் விபுலன் | 10D |
| 3) | செல்வன் | தங்கராஜா பாலகுமார் | 10D |
| 4) | செல்வன் | கனகசபை ஐங்கரன் | 10D |
| 5) | செல்வி | சிவராணி பொன்னம்பலம் | 10D |
| 6) | செல்வி | கேதாரிணி பொன்னம்பலம் | 10D |
| 7) | செல்வி | பிரசாந்தி பாலேந்திரா | 10D |
| 8) | செல்வி | சுஜித்தா இராமச்சந்திரன் | 10D |
| 9) | செல்வி | யசித்தா இராமச்சந்திரன் | 10D |
| 10) | செல்வி | ஆன்ஜெனிற்றா அருளினி அருள்சோதி | 10D |

* மேற்படி 10 D பெற்ற 10 மாணவர்களுக்கும் எமது நிறுவன பரிசளிப்பு விழாவின்போது வழமைபோல் தலா ஆயிரம் ரூபா சிறப்புப் பரிசாக வழங்கப்படும்.
* மேற்படி மாணவர்களுக்கும் ஏனைய சிறந்த பெறுபேறு பெற்ற மாணவ, மாணவிகளுக்கும் எமது வாழ்த்துக்கள்.

நிர்வாகி,
ஆசிரியர்கள்,மாணவர்கள்.

(c/11989)



## COMPUTER UNIT
## J/DRIEBERG COLLEGE, CHAVAKACHCHERI.

★ **COMPUTER COURSES**

கணனிக் கற்கை நெறிகள் மே மாதத்தில் ஆரம்பமாக உள்ளன. தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

★ **VACANCIES**

மேற்படி கற்கை நெறிகளுக்கு விரிவுரையாளரும் செயன்முறைக் காட்டுநரும் தேவை. தகைமையானவர்கள் தொடர்பு கொள்ளவும்.

*தொடர்பு : **The Principal,***
***J/Drieberg College,***
***Chavakachcheri.***

(C/11997)



## NCCA
### பரீட்சைக்கான கலந்துரையாடல் & பயிற்சி வகுப்புக்கள்

❑ மேற்படி பரீட்சைகள் - பாடவிதானங்கள் சம்பந்தமான கலந்துரையாடல் 30-04-2K ஆம் திகதி காலை 10மணிக்கு எமது நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

பங்குபற்றுபவர்கள்

☛ திரு.க.இராசதுரை.
அதிபர், யாழ்.மத்தியகல்லூரி, யாழ்ப்பாணம்.

☛ திரு E.R.ஜெயக்குமார்
CRC முகாமையாளர், யாழ்.மத்தியகல்லூரி, யாழ்ப்பாணம்.

☛ **STP Computer World** இன் விரிவுரையாளர்கள்

❑ இப்பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்கள் யாவரையும் இக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

❑ இதுவரை இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தவறியவர்கள் 02.05.2K ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை எமது காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.(விண்ணப்பப்படிவங்களைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்)

❑ இப்பரீட்சைக்குரிய பாடநெறிகளுக்கான விசேட வகுப்புக்கள் 06.05.2K ஆம் திகதி சனிக்கிழமை காலை 9மணிக்கு ஆரம்பமாகும்.

- நிர்வாகி

## STP COMPUTER WORLD

*No 54A, Palaly Road,*
*Kantharmadam,*
*Jaffna.*

*T.P:- 021-2674*
*E-mail:-stpcom@sltnet.lk*

*(C/11994)*


# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**தோற்றம்**
15 - 07 - 1936



**மறைவு**
29 - 04 - 1996

## திருமதி இராமசாமி ஞானம்மா

**அன்புத் தாயே!**
**பிள்ளைகள் கதறிட**
**உடன் பிறந்தோர், உற்றார், உறவினர்கள் கலங்கிட**
**பொல்லா நோய் வந்து சொல்லாமல்**
**கொண்டு சென்றதோ?**

கேதீஸ்வரன் ஸ்ரோர்ஸ்,,
39/2(119) மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

விநாயகர் பான்சி,
23, நவீன சந்தை,
பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
மக்கள், மருமக்கள்,
சகோதரர்கள், மைத்துனர்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்
*66.சிவன் பண்ணை வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(75865)

## நான்கு செயலாளர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குழுவின் செயலாளராகப் பணி புரிந்த க.பரமேஸ்வரனின் இடத்துக்கு திருமதி கமலா சிவசிதம்பரமும் -

காணி,விவசாய அமைச்சுச் செயலாளராகப் பணிபுரிந்த எஸ். மார்க்கண்டு ஓய்வுபெறுவதால் அவரது இடத்துக்கு க.சண்முகலிங்கமும் -

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சுச் செயலாளராகப் பணி புரிந்த விநாயகலிங்கம் ஓய்வு பெறுவதால் அவரது இடத்துக்கு எஸ்.அமிர்தலிங்கமும் - நியமிக்கப்பட்டுள்ளனர்.

கூட்டுறவு ஆணையாளராக எஸ். இராமலிங்கமும், சமூக சேவைகள் பணிப்பாளராக செல்வி ரோஹிணி கனகரத்தினமும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் கடந்த வாரம் தமது பதவிகளை ஏற்றுக் கொண்டனர்.

(உ-3)

## இந்தியாவி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யில் இந்தியாவின் உதவியைப் பெறவேண்டும் என்ற கோரிக்கை வலுவடைந்து வருகின்றது.

"இந்திய உதவிக்கு பிரதியுபகாரமாக திருமலைத் துறைமுகத்தை இந்தியாவுக்கு நீண்டகால குத்தகைக்கு வழங்கலாம் என்று பல அரசியல் விமர்சகர்கள் கூறியுள்ளனர்.

(உ-3)

## பிரிகேடியர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தலைமையகம் மறுத்துள்ளது.

ஆனையிறவு படைத்தளம் தாக்கப்பட்டவேளையில் விடுதலைப் புலிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட தொலைத்தொடர்பு கருவியைப் பயன்படுத்தி மலசலகூடம் ஒன்றுக்குள் இருந்தவாறு புலிகளுக்கு அவர் தகவல் கொடுத்தார் என்று குற்றப் புலனாய்வுப் பொலீஸ் வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியிருந்தன.

வடக்கு - கிழக்கில் பல இடங்களில் கடமையாற்றியுள்ள இவர் பல போர்முனைகளில் புலிகளுக்கு எதிரான சண்டையில் ஈடுபட்டிருந்தார். ஆனால் இவர் ஒரு தமிழர் என்ற காரணத்தினால் தனிப்பட்ட முறையில் இந்தக் குற்றச்சாட்டு அவர் மீது சுமத்தப்பட்டிருக்கின்றது என்று வேறு சில வட்டாரங்களில் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

(உ-ஐ-க)

## நெருக்கடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஐ.தே.க. தவிசாளர் கரு ஜெயசூரியா, பொதுச்செயலாளர் காமினி அத்துக்கோறள ஆகியோருக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

புலிகளுடனான யுத்தத்தை எதிர்கொள்வதற்காக கட்டாய இராணுவ சேவையைப் பிரகடனப்படுத்துதல்-

யுத்த நெருக்கடியை ஒட்டி பொதுத்தேர்தலை தள்ளிப்போடுதல் -

யுத்தம் தொடர்பாக புலிகளுடன் ஏதேனும் இணக்கப்பாட்டுக்கு வருதல் -

போன்ற பல்வேறு திட்டங்களில் ஏதேனும் ஒன்றை அல்லது பலவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்கட்சித் தலைவரின் ஆதரவை அல்லது அவரின் கருத்தை இந்தச் சந்திப்பின்போது ஜனாதிபதி கோருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.


### சிவா திரையில்

கே.கே.எஸ். வீதி
சிவன்கோயிலடி
தினசரி 10.30, 2.30
**பார்த்தீபன், பிரபுதேவா, கௌசல்யா**
நடிக்கும்
**ஜேம்ஸ் பாண்ட்**
(புதிய வெளியீடு)

(C/12000)



## NCCA
### விண்ணப்ப முடிவு திக்தி நீடிப்பு

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்ப முடிவு திகதி 02.05.2000 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் மேற்படி பரீட்சைக்கு ஆர்வங்காட்டி வருவதனால் எமது நிறுவனத்தால் இந்த ஒழுங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

02.05.2000 மாலை 3மணிக்குப் பின் எக்காரணம் கொண்டும் விண்ணப்பிக்கும் காலம் நீடிக்கப்படமாட்டாது என்பதை அறியத்தருகின்றோம்.

**இயக்குநர்**
**IIS**
100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(C/11996)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி மகேஸ்வரி கயிலாசபிள்ளை

உயரப்புலம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த திருமதி மகேஸ்வரி கயிலாசபிள்ளை 27-04-2000 அன்று வத்தளையில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கயிலாசபிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற குணபாலன் மற்றும் ஜெயபாலன் (சிவா ஸ்ரூடியோ, மானிப்பாய்), தர்மபாலன் (France), பாலரதி (வத்தளை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நளினி, லங்காமணி (France), சிவாஜி (Credit Director, Singer Company Ltd., Colombo) ஆகியோரின் அன்பு மாமியாரும் சாரங்கன், விதுஷன், அரவிந்தன், ஆர்த்தி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (30-04-2000) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இல.33, கல்யாணி லேன், வத்தளை இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*உயரப்புலம்,*
*ஆனைக்கோட்டை.*

(75857)

தகவல்:
க.ஜெயபாலன்
(மகன்)

## திருமதி தம்பிராசா இரத்தினபூபதி

மானிப்பாய் தெற்கு, வேலக்கைப் பிள்ளையார் கோயில் வீதியைச் சேர்ந்த திருமதி தம்பிராசா இரத்தினபூபதி 28-04-2000 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசாவின் மனைவியும் திருஞானசம்பந்தர் (இளைப்பாறிய ஆசிரியர், ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வி.சா) கணேசலிங்கம் (கட்டடத்திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் தாயாரும் திருமதி ஞானசம்பந்தர் (ஆசிரியை, மானிப்பாய் மகளிர் கல்லூரி ) அவர்களின் மாமியாரும் திருமாறன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி) அவர்களின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29-04-2000) சனிக்கிழமைகாலை 10மணி யளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

வேலக்கை பிள்ளையார் கோயிலடி,
நவாலி தெற்கு, மானிப்பாய்

(754860)

தகவல்:
த.திருஞானசம்பந்தர்
த.கணேசலிங்கம்.
(மகன்மார்)

## திருமதி பஞ்சவர்ணம் பரமலிங்கம்

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் பன்னாலை வீரபத்திரர் கோயிலடியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பஞ்சவர்ணம் பரமலிங்கம் அவர்கள் ஸ்கந்தபுரத்தில் (10-04-2000)அன்று காலமானார்.

அன்னார் இணுவில் மேற்கைச் சேர்ந்த காலஞ் சென்ற பொன்னையா-நாகம்மாவின் அன்பு மகளும்,காலஞ்சென்ற பரமலிங்கத்தின் அன்பு மனைவியும் பூவேந்திரராசா (கச்சேரி,கிளிநொச்சி)திருமதி தனலட்சுமிதேவி விஜயராசா (இந்தியா), நரேந்திரராசா(லங்கா சிமெந்து லிமிட்., K.K.S),திருமதி புஸ்ப்நேரு அரியரத்தினம்(வவுனியா), மகேந்திரராசா(லங்கா சிமெந்து லிமிட்.,K.K.S) ஆகியோரின் அன்புத்தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஸ்கந்தபுரத்தில் நடைபெற்றன.இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

இணுவில் தெற்கு,
இணுவில்.

(75863)

தகவல்
ப.மகேந்திரராசா
(மகன்)

## இராசையா இரவீந்திரன்

சுன்னாகம் தெற்கைப் பிறப்பிடமாகவும் மொன்றியல் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா இரவீந்திரன் கனடாவில் காலமானார்.

அன்னார் இராசையா - குலமணிதேவி தம்பதிகளின் அன்பு மகனும் கிராமக்கோட்டுச் சந்தி புலோலியைச் சேர்ந்த காலஞ்சென்ற கதிர்காமு தம்பதிகளின் அன்பு மருமகனும்,மகேஸ்வரியின் அன்புக்கணவரும்,சுரேக்கா, சுதர்சன் ஆகியோரின் தந்தையாரும் நடராசா(கனடா), பத்மினிதேவி (கனடா), பத்மநாதன்(கனடா),செல்வராணி(இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் பாமாதேவி,இந்திரகுமார்,அனுஷாம்பிகை, தியாகலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (29-04-2000)கனடாவில் நடைபெறும்.துக்க நிகழ்வுகள் அன்னாரின் சகோதரி செல்வராணியின் இல்லத்தில் இன்று நடைபெறும்.

பழைய பொலீஸ் நிலைய வீதி,
சுன்னாகம் தெற்கு.

(75864)

தகவல்
க.தியாகலிங்கம்
(மைத்துனர்)

## கணபதிப்பிள்ளை திருச்சிற்றம்பலம் (பொட்டர்)

(முன்னாள் வர்த்தகர், தட்டாதெரு சந்தி - திருச்சிற்றம்பலம் &சன்ஸ்)

காரைநகர் விளானையைப் பிறப்பிடமாகவும்,திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை திருச்சிற்றம்பலம் அவர்கள் (28-04-2000)வெள்ளிக்கிழமையன்று அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - நாகம்மா தம்பதிகளின் அருமை மகனும் காலஞ்சென்ற கந்தையா - மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும்,நிமலசோதியின் அன்புக்கணவரும், ஹரிகரன் (யா\வைத்தீஸ்வராக் கல்லூரி),நவநீதராஜ் (யா\மத்திய கல்லூரி), அனுசியா (யா\இந்து மகளிர் கல்லூரி)ஆகியோரின் அன்புத் தந்தையும்,காலஞ்சென்ற கந்தையா(உப தபாலதிபர்,களபூமி), சிவசுப்பிரமணியம்(லண்டன்), பரமேஸ்வரி,சகுந்தலாதேவி, ஆகியோரின் அன்புச் சகோதரனும்,காலஞ்சென்ற மதிவதனசோதி, திருவருட்சோதி (லண்டன்), பேரின்பசோதி (லண்டன்), குலசோதி(கனடா), மகேந்திரசோதி(கனடா)ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (28-04-2000)வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று,திருநெல்வேலி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மடம் லேன்,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

(C\11999)

தகவல்
நிமலசோதி-(மனைவி)
(செல்லம்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29-04-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சஞ்சிகை

29-04-2000 சஞ்சீவி

MALLIKA

அதிசய விலைக்குறைப்பு! அளவுக்கதிக அறுசுவை ருசி!! இதனால், சுத்திச் சுத்தி வந்திடச் செய்யும்! கேட்டுக் கேட்டு வாங்கிடச் செய்யும்!! சாப்பிடச் சாப்பிடச் சாப்பிடச் சொல்லும்!!! மல்லிகா மிக்ஷர், பகோடா, முறுக்குடன் நீங்களும் ஒருமுறை விருந்தினரானால் புரிந்திடும் உண்மையின் தன்மை ~ அத்துடன் ருசியின் மகிமை

மேலதிக விவரங்களுக்கு:~

மல்லிகா மிக்ஷர் மாளிகை

கூழாவடி - ஆனைக்கோட்டை - மானிப்பாய்.

(C/11952)

## கருத்துக் கலசம் - கஜூரா

### நல்லமனம் வேண்டும்

*வாழ்க்கை வெறும் விளையாட்டு அல்ல. பெரிய கோட்டை கட்டுவது அருமை. இடிப்பது எளிது. அறுபது ஆண்டுகள் ஒற்றுமையாக வாழ்ந்த வாழ்க்கையை ஒரு சிறு மனம் - பொல்லாத மனம் பிரித்துப் பாழாக்கி விடும்.* - டாக்டர் மு. வரதராசனார் -

எதனையும் ஆக்குவது கடினம்; ஆனால் அழிப்பது இலகு. வாழ்க்கையும் அவ்வாறுதான். சிறந்த வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கு இளவயதிலிருந்து நல்ல பயிற்சியும் முயற்சியும் தேவை.

ஒருவனது வாழ்க்கை சிறப்புற அமைந்தது என்று சொல்லுவதற்கு அவன் ஏதாவது ஒரு துறையில் முத்திரை பதித்தாகவேண்டும். அவ்வாறு அவன் தன்னைச் சமூகத்தில் பதிப்பதற்கு தனது' சொந்த வாழ்க்கையில் ஓர் இலட்சியத்துடன் செயற்பட்டிருக்க வேண்டும். அதே இலட்சியத்தை நோக்கிக் கடினமாக உழைத்திருக்க வேண்டும்; அந்த உழைப்பின் போது பல அர்ப்பணிப்புகளைச் செய்திருக்க வேண்டும்.

ஒரு மரத்தை வளர்த்தவனுக்கே அந்தப் பயனைப் பெறுவதற்கு தான் பட்ட கஷ்டங்களும் சிரமங்களும் தெரியும். அதனால் அந்த மரம் எக்காரணம் கொண்டும் பட்டுவிடக் கூடாது என்று அதனைப் பேணிப் பராமரிப்பான். ஆனால் மரம் வளர்ப்பதில் அனுபவமோ அக்கறையோ இல்லாதவன், அதனை வெட்டி விடுவான்.

ஒருவன் தனது வாழ்க்கையைத் திறம்பட நடத்துவதற்கு, மற்றவர்கள் மதிக்கும்படி நடத்துவதற்கு அவனே பாடுபட வேண்டும்; திட்டமிட வேண்டும்; நீண்டகாலத்துக்கு உழைக்க வேண்டும். அவ்வாறு கட்டி வளர்த்த வாழ்க்கையை நினைத்தால் அவனே ஒரு சில நாள்களில் சீர்குலைத்து விடலாம்.

கல்வியிலும் சரி, பொருளிலும் சரி. பல சந்ததிகளாக மிகக் கஷ்டப்பட்டுத் தேடிய செல்வங்களை இடையில் வரும் பரம்பரை நாசமாக்கி நடுத்தெருவில் நிற்பதனை எங்கள் பிரதேசத்திலேயே காணமுடியும்.

தங்களுக்கு முந்தியவர்கள் கல்விச் செல்வத்தையும் சரி. பொருள் செல்வத்தையும் சரிதேடுவதற்கு எவ்வளவு உழைத்திருப்பார்கள்; கஷ்டப்பட்டிருப்பார்கள்என்பதனை அவற்றை நாசமாக்குபவர்கள் உணர்வதில்லை. அதனால் பிந்தியவர்கள் மனம்போன போக்கில் நடந்து கொள்வார்கள். அந்த மனம் பொல்லாத மனமே.

அந்த வகையிலிருந்து வேறுபட்ட இன்னொரு பொல்லாத மனமும் உண்டு. அடுத்தவன் சிறப்பாக வாழ்வதை, அமைதியாக வாழ்வதை விரும்பாமல் அதனை வேரறுக்கும் நோக்குடன் செயற்படும் பொல்லாத மனம் அது; பொறாமை, அழுக்காறு நிறைந்த மனம்.

அந்தப் பொல்லாத மனதினால் நீண்ட காலமாக மிகக் கஷ்டப்பட்டுக் கட்டி எழுப்பப்பட்ட வாழ்க்கையைத் தட்டி வீழ்த்திவிடமுடியும். பொய், அவதூறு ஆகியன கொண்டு நல்லவன் வாழ்க்கையைநாசமாக்கி விடக்கூடிய கொடிய - பொல்லாதமனம் அது.

சிலர் வாழ்க்கையை விளையாட்டாக நினைக்கிறார்கள், எதனையும் எப்படியும் செய்யலாம் என்று எண்ணம் கொள்கிறார்கள்; அகங்காரம் அடைகிறார்கள். அதுவும் வாழ்க்கையைக் கெடுக்கும் பொல்லாத மனமே.

பொல்லாத மனங்களை ஆக்காதீர்கள். நல்லவாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள்; அதற்கான பயிற்சியையும் முயற்சியையும் செய்யுங்கள்.

# மேதினி எங்கும் நடக்கும் மேதினப் பேரணிகள்!

மே தினம் தொழிலாளர் வர்க்கத்தின் உரிமைக்கு வித்திட்ட தினம்; உலகெங்கும் கொண்டாடப்படும் தினம்.

"உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுவீர்"- இதுதான் மேதினச் செய்தி. உலகிலுள்ள தொழிலாளர்கள் இன, மதபேதங்களால் பிளவுபட்டுள்ள போதிலும் வர்க்கத்தால் ஒன்றுபட்டுக் கொண்டாடும் நாள் மேதினமாகும்.

முதலாளி வர்க்கத்தினரால் சுரண்டப்பட்டு வந்த தொழிலாளர்கள் முதலாளிகளை எதிர்த்து உரிமை கோரி மேற்கொண்ட போராட்டத்தை நினைவு கூருவதே மேதினமாகும்.

மே தினமானது கம்யூனிஸ்ட்களின் ஏகபோக சொத்தல்ல. கம்யூனிஸ்ட் ஆட்சி முறை உலகில் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகுதான் இது அனுஷ்டிக்கப்படுகின்றது என்பதுமல்ல. இந்த மே தின விழா முதன்முதலில் கொண்டாடப்பட்டது கம்யூனிஸ்ட் பிரதேசத்திலும் அல்ல.

மேதினி எங்குமே இந்த மே தின விழாக் கொண்டாடப்படுகிறது. மேதினப் பேரணிகளும், கூட்டங்களும் நடத்தப்படுகின்றன.

பாட்டாளி மக்களின் விடுதலை விழா, மே தினம். இதற்கு நாடு எல்லை அல்ல.

பாட்டாளி மக்களின் வாழ்வுக்காக - விடுதலைக்காக - உரிமைக்காக மே தினத்தைக் கொண்டாடுகிறார்கள். நாளொன்றுக்கு 8 மணி நேரம் உழைப்பது, 8 மணிநேரம் குடும்பத்தினருடன் குதூகலமாக வாழ்வது, 8மணிநேரம் ஓய்வெடுப்பது - இந்தத் திட்டத்தை மே தினம் எடுத்துக் கூறுகிறது. பாட்டாளிக்குப் புதுவாழ்வு அமைய வேண்டுமானால், இந்தத் திட்டம் தேவை.



உழைத்து அலுப்பதும், உருக்குலைவதும், ஓயாமல் உழைப்பதும்; வாழ்வின் சுவையையே காணாதிருப்பதும் இன்று பாட்டாளிகளின் கதியாக உள்ளது. இதனால் தொழிலாளி துயரின் உருவமானான். இந்நிலையை மாற்ற வேண்டும் என்ற நல்ல எண்ணம் கொண்டவர்கள 8மணி நேர வேலைத் திட்டத்தை வலியுறுத்தினர். அதனை வலியுறுத்த ஆண்டு தோறும் மே மாதம் முதலாம் திகதியை மே தின விழாவாகக் கொண்டாட ஏற்பாடு செய்தனர். இந்த விழா ஆரம்பத்தில் கொண்டாடப்பட்டபோது சோவியத் ரஷ்யா இல்லை; ஜார் மன்னனின் ரஷ்யாவாகவே அது இருந்தது. இந்த விழா விமர்சையாக நடந்த இடம் அமெரிக்காவாகும்.

அமெரிக்காவைச் சேர்ந்த தொழிலாளர்கள் 8 மணி நேர வேலை கோரி 1886 மே மாத முதல் வாரத்தில் சிக்காகோ நகரில் வேலை நிறுத்தம் மேற்கொண்டனர். இந்தப் போராட்டமே மே தினத்திற்கு அத்திவாரமிட்டது எனலாம். வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டவர்கள் மீது அரசாங்கம் மிருகத்தனமான நடவடிக்கைகளில் ஈடுபட்டது 6 பேர் கொல்லப்பட்டனர்; நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர். கைது செய்யப்பட்டவர்களில் 4 பேருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. நூற்றுக்கு மேற்பட்டோருக்குச் சிறைத் தண்டனை.

எட்டு மணிநேர வேலை என்ற நியாயமான கோரிக்கையை முன்வைத்துப் போராட்டத்தில் குதித்து, இரத்தம் சிந்தி அந்தஉரிமையை வென்றெடுத்த காரணத்தினாலேயே தொழிலாளர்களின் கொடிசிவப்பு நிறத்திலான செங்கொடியானது.

1889 ஆம் ஆண்டு சர்வதேச சமதர்ம மாநாடு பாரிஸ் நகரத்தில் கூடி மே மாதம் முதலாம் திகதி உலகப் பாட்டாளி மக்களின் விடுமுறை நாளாகக் கொண்டாடப்படவேண்டும் என்ற தீர்மானமியற்றியது. அன்று முதல் மே தினம் உலகில் எல்லா நாடுகளிலும் பாட்டாளி மக்களின் விடுதலை விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

ஆரம்பத்தில் மே தினத்தை விடுமுறை தினமாக முதலாளித்துவ அரசாங்கங்கள் பிரகடனப் படுத்தவில்லை எனினும் தொழிலாளர் தாமாகவே பணிக்குச் செல்லாது பேரணிகளையும் பொதுக் கூட்டங்களையும் நடத்தினர்.

இவற்றை ஜீரணிக்க முடியாத முதலாளித்துவ அரசுகள் தொழிலாளர்களுக்குப் பல நெருக்கடிகளைக் கொடுத்த போதிலும் தொழிலாளர்கள் ஐக்கியம் காரணமாக அந்த நெருக்குதல்கள் பயனற்றுப் போயின.

மே தினம், ரஷ்யாவில் ஜார் மன்னர் ஆட்சி செலுத்திய காலத்திலும் கொண்டாடப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

அப்போது மே தின விழாவில் பங்கு பற்றிய தொழிலாளர்கள் பல்வேறு தொல்லைகளை ரஷ்யாவில் எதிர்நோக்கினர்.

மே தினத்தைத் தொழிலாளர்களின் விடுதலை விழாவாக மாற்றி அமைத்தவர் மாவீரர் லெனின் ஆவார். தொழிலாளர்கள் தங்கள் குறைகளைப் போக்கி கொள்ள, உரிமைகளைப் பெற இந்த மே தினத்தை பரணியாடும் நாளாக்கினார் அந்தப் புரட்சி வீரர். அவருடைய முயற்சியினால் ரஷ்யாவில் இந்த மே தின விழாக்கள் ஜார் மன்னரின் ஆட்சியை ஒழிக்கும் மாபெரும் புரட்சிக்கு ஒத்திகைக்களமாக அமைந்தன.

ஒவ்வொரு ஆண்டும் மே தினத்தன்று அந்தந்த நாட்டின் தனிப்பட்ட பிரச்சினைகளைப் பற்றிப் பேசவும், பொதுவாக மக்களின் விடுதலையையும் தொழிலாளர்களின் நல்வாழ்க்கையை வற்புறுத்தவும் மே தினம் பயன்படுத்தப்படுகிறது. மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள அடிமைத்தனம் எந்த வடிவத்தில் அமைந்திருப்பினும் அதை அந்த வடிவத்தில் முறியடித்து மக்கள் முழுவாழ்வு பெற மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கலந்தாலோசித்து உறுதி பெறவும் உரிமை முழக்கமிடவும் மே தினம் ஒரு வாய்ப்பாக அமைகிறது.

"உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்" என விடுக்கப்பட்ட வேண்டுகோள் தற்போது நகைச்சுவைக்குரிய ஒன்றாகிவிட்டது. உலகில் ஒவ்வொரு நாட்டிலுமுள்ள தொழிற்சங்க அமைப்புகள் தொழிலாளர்களை ஐக்கியப்படுத்துவதற்குப் பதிலாகக் கூறுபோடத் தொடங்கியுள்ளன. உலக நாடுகளிலுள்ள அத்தனை அரசியற் கட்சிகளும் தொழிற் சங்கங்களை உடைத்துத், தொழிலாளர்களைப் பிரித்து, தங்கள் அரசியல் கட்சி சார்ந்த தொழிற்சங்கங்களை உருவாக்கியுள்ளனர். இதனால் இன்று தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகள் கூட வென்றெடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஒரு தொழிற்சாலையிலோ அல்லது அரச நிறுவனத்திலோ பணியாற்றும் தொழிலாளர்களின் நியாயமான உரிமைக்காக பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு நியாயம் கிடைக்காத போது அந்தத் தொழிலாளர்கள் தமது இறுதி ஆயுதமான வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதிப்பது வழமை. தற்போதைய காலகட்டத்தில் அத்தகைய நியாயமான போராட்டமும் பிசுபிசுத்துப் போகின்றது. தொழிலாளர்கள் குறித்த ஒரு தொழிற்சாலையையோ அல்லது அரச நிறுவனத்தையோ சேர்ந்தவர்கள்தான். அவர்களது கோரிக்கையும் அந்த நிறுவனத்தில் பணியாற்றும் அனைத்துத் தொழிலாளர்களின் நலனுடனும் தொடர்புடையதுதான். இருப்பினும் ஏன் இந்தப் போராட்டங்கள் பிசுபிசுத்துப் போகின்றன? காரணம் ஒரே விதமான தொழிலைப் புரியும் தொழிலாளர்களுக்கு பல்வேறு அரசியற் கட்சிகளின் ஆதரவைப் பெற்ற பல்வேறு தொழிற்சங்கங்கள் உரிமையை வென்றெடுக்க, ஒரு சில தொழிற் சங்கங்கள் ஒன்றுபட்டுப் போராட்டத்தில் குதிக்க, அரசியல் கட்சிகளின் தேவைக்காக ஏனைய தொழிற்சங்கங்கள் "கருங்காலி"களாக, கோடரிக் காம்புகளாக மாறி அந்தப் போராட்டத்தை வலுவிழக்கச் செய்து பின்னர் தோல்வியில் முடிக்கக் காரணமாகின்றன.

**கஜனி**

கொழும்பு நகரில் மே தினத்தன்று பொதுமக்கள் பயணம் செய்ய பஸ்கள் எவையும் கிடைப்பதில்லை. போக்குவரத்துச் சபை ஊழியர்கள் மேதினக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதால் பஸ் சேவை இல்லை என நினைக்கிறீர்களா? அதுதான் இல்லை. ஆட்சியில் இருக்கும் அரசாங்கங்கள் தாங்கள் நடத்தும் மே தினக் கூட்டத்தில் பெருந்தொகையினர் பங்குபற்றினர் என்பதைக் காட்ட, நாடெங்கும் உள்ள தமது கட்சி ஆதரவாளர்களை ஏற்றிவர பஸ்களைப் பயன்படுத்துவதாலேயே தலைநகரில் மக்கள் போக்குவரத்துச் செய்ய மே தினத்தன்று பஸ்கள் கிடைப்பதில்லை. இரத்தம் சிந்தி - உயிர்த்தியாகம் செய்து தொழிலாளர் உரிமை பெற்ற தினம் கொழுத்த அரசியல்வாதிகளின் விளம்பரத்திற்குப் பயன்படுத்தப்படுவதும் அந்த வலையில் தொழிலாளர்கள் சிக்கியுள்ளதும் விந்தையே!

போரின் நலிவில் சிக்கியிருக்கும் ஈழத் தமிழ் தொழிலாளர் வர்க்கத்தின் வாழ்வில் புதுத் தெம்பு தரும் எழுச்சி நாளாக நாளை மறுதினம் வரும் மே தினம் அமையட்டும்!

## மேதினம்

மேதினம் என்ற விசேட நாளே
சாதினம் முன்னாள் சனாதி பதிக்கே!
தொழில்புரி வோரைச் சுரண்டுத லோடு
எழில்மிகு மிலங்கையில் இனப்பகை வளர்த்து
சிறுபான்மை மக்களைச் சிதைக்க நினைத்தால்
அறுவதே யன்றி ஆள்வதோ கடினம்
துப்பாக்கி வேட்டுக்கள் தொடர்கின்ற வரையில்
எப்பா கத்திலும் இருப்பதே சிரமம்
நீதியை விடுத்து நினைத்ததை முடித்தால்
போதி மாதவன் போதனை சொல்ல
தெற்கிலும் பற்பல செம்மணிக் குள்ளே
எலும்புக்கூ டுகள்தாம் எஞ்சிக் கிடக்கும்
மலக்குழி எல்லாம் சவக்குழி ஆகும்
ஜெயப்பூர் நிறுவனத் தேவை பெருகும்!
மேதினம் பலர்க்குமென் மேலும்
சாதினம் ஆதல் தவிர்த்தல் அரிதே!

- வ. சின்னப்பா -

## எழிலில் உலகம் ஏற்றம் பெறுக!

உழைக்கும் கரங்கள் ஒன்று சேர்க
உறுதி கொண்டே வலிமை கொள்க
களைத்த உள்ளம் உறுதி பெறுக
கனிவாய் இதயம் இயக்கம் கொள்க!

கடின உழைப்பால் உயர்ந்து நிற்க
கருத்தைச் சுயமாய் விளம்ப முயல்க
குடியை அன்பாய் அணைத்து வாழ்க
குன்றா உறுதி மனதில் கொள்க!

ஏரின் கைகள் வலிமை பெறுக
ஏற்றம் அதுவே சிந்தை தெளிக
பாரின் மீது பசுமை தருக
பார்ப்போர் மனது வியந்து மகிழ்க!

தொழிலில் எங்கும் தேர்ச்சி வருக
தொடங்கும் வேலை தெளிவாய் முடிக்க
எழிலில் உலகம் ஏற்றம் பெறுக
எங்கும் தொழிலே எழுந்து நிற்க!

வேலை செய்வோர் உரிமை காக்க
வேளை எங்கும் கருத்திற் கொள்க
ஆலைத் தொழிலர் ஆதரவாக
ஆர்வமுடனே அவரை மதிக்க!

நாட்டின் வளத்தைப் பெருக்க முயல்க
நாமே நாடு என்றே சொல்க
பாட்டில் என்றும் தொழிலை வணங்க
பாடி வைப்போம் உண்மை விளங்க!

- புதுமை -


# பக்தியால் பரந்தாமனுக்கு சகோதரியானாள் சபரி!

இறைவனை அறிந்து, இறைவன் அருள் பெற பக்தி தேவை.

இறைவனைப் பூஜிப்பதைவிட, ஆழ்ந்த அன்பினால் இறைவனுக்குச் சேவை செய்யும் பக்தர்களைப் பூஜிப்பது மிகச் சிறந்தது என்று சொல்லப்படுகிறது. அப்படியெனில் அந்தப் பக்தியின் பெருமையைச் சொல்ல முடியுமா? சொல்லித்தான் தீருமா?

பக்தியினால் இறைவன் அருள் பெறுவது மட்டுமல்ல; இறைவனுக்கே உறவாகலாம் என்பதை விளக்குவது போல் அமைந்ததுதான் குகன், சபரி, குறமகள் வள்ளி முதலானோர் வாழ்க்கை.

இறைவனுக்கும், வேடுவ குலத்



துக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது போலும்!

குகன் பூர்வ ஜென்மத்திலும் வேடனாகப் பிறந்து தன்னையுமறியாமல் ஒரு சிவராத்திரி அன்று சிவ பூஜை செய்ததால் ஈசன் மகிழ்ந்து, 'மறுபிறவியில் குகனாகப் பிறந்து, ராம பக்தியினால் ராமனுக்குச் சகோதரனாகி, முக்தி அடையவாய்' என்று வரம் தந்தார்.

சபரியின் கதை வேறு.

*  *  *

வேடுவ குலத்தில் பிறந்த சபரி, மெய்ஞ்ஞானம் பெறத் துடியாய்த் துடித்தாள். அப்பொழுது ஒரு சந்நியாசினியைச் சந்தித்தாள். அந்தச் சந்நியாசினி சபரியிடம், 'மதங்கர்' என்ற மாமுனியைப் பற்றிச் சொல்லி, அவரைத் தரிசித்தாலே போதும், ஞானம் சித்திக்கும் என்று சொல்லி, தொடர்ந்து "உன்னால் அவரைத் தரிசிப்பது மிகவும் கடினம். அவர் உனக்குத் தரிசனம் தர விரும்பினாலும், அவருடைய சீடர்கள் உன்னை அவரிடம் செல்ல அனுமதிப்பது கஷ்டம். எனவே, நீ அவரைத் தரிசிப்பது உன் சாமர்த்தியத்தில்தான் இருக்கிறது" என்றும் கூறினாள்.

சபரி உடனே மதங்கரிஷியின் ஆசிரமத்தை நோக்கிச் சென்றாள். ஆசிரமத்திற்கு வெளியே இருந்த அவரது சீடர்கள், அவளை உள்ளே அனுமதிக்காததுடன், ஆசிரமத்தின் சுற்றுப்புறத்தில் அவள் இருப்பதே அபசாரம் என்று எண்ணி, அவளை அங்கிருந்து போகச் சொல்லி விட்டனர். பார்த்தாள் சபரி. சற்று யோசித்தாள்.

பின் ஒரு முடிவுக்கு வந்தவளாக ஆசிரமப் பகுதியை விட்டு சற்றுத் தொலைவு வந்து, ஒரு மரத்தின் மீது அமர்ந்தபடி, மதங்கரிஷி தனியாக எங்கேனும் போகிறாரா என்று பார்த்துக் கொண்டிருந்தாள். நேரம் போய்க் கொண்டே இருந்தது. பகலெல்லாம் போய், மாலையும் வந்து மறைந்து, இரவின் ஆதிக்கம் எங்கும் பரவி நீண்டது. மதங்கரிஷி ஆசிரமத்தை விட்டு வெளிவரவேயில்லை. சபரியும் சளைக்காமல், சலிக்காமல் காத்திருந்தாள். அதிகாலைப் பொழுதில் அவள் எதிர்பார்த்துக் காத்திருந்த மதங்கரிஷி, கல்லும் கரடுமான ஓர் ஒற்றையடிப் பாதை வழியே நீராடச் சென்றார். அது கண்ட சபரி, 'ஐயோ, இது என்ன கொடுமை? மாமுனிவர் தன் திருப்பாதம் நோக, கல்லும் கரடுமான பாதையில், இருட்டுப் பொழுதில் நீராடச் செல்கிறாரே? அந்தப் பாதையைச் சுத்தப்படுத்துவோர் யாரும் இல்லையா?' என்றெல்லாம் எண்ணி வருந்தினாள்.

மறுநாள் முன்னிரவுப் பொழுதிலேயே கிளம்பிய சபரி, மதங்கரிஷி செல்லும் பாதையில் உள்ள கற்களையும், முட்களையும் களைந்து, நீர் தெளித்துக் குளிர்ச்சியும், மென்மையும் பெறச் செய்தாள். பின் சற்றுத் தொலைவிற்கோர் இடத்தில் ஒரு தீப்பந்தம் வைத்து, பாதை நெடுக ஒளிவீசச் செய்தாள். பாதை முழுவதும் மணமுள்ள காட்டு மலர்களைப் பரப்பி வைத்தாள். இத்தனையும் செய்தபின், ஒரு மரத்தில் ஏறி அமர்ந்து கொண்டாள். முதல் நாள் வந்ததுபோல் மதங்கர் நீராட வந்தார். குறிப்பிடும்படி மாற்றம் எதுவும் இல்லை. மறுநாளும் அப்படியே. இப்படி மூன்று நாள்கள் சென்றன. நான்காம் நாள் காலை மதங்கர் தம் சீடர்களிடம், "சீடர்களே, இதுவரை நான் நீராடச் சென்ற பாதை இருட்டாகவும், கற்களும், முட்களும் நிரம்பியுமிருந்தது. ஆனால் கடந்த சில தினங்களாக அப்பாதை மென்மையுடனும், தீப்பந்தங்களால் ஆங்காங்கே வெளிச்சமுடனும் காணப்படுகிறது. இப்படிச் செய்பவர்கள் யார்?" என்று கேட்டார். அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. எனவே ஒன்றும் சொல்லவில்லை.

அன்று முன்னிரவுப் பொழுதிலேயே கிளம்பிய முனிவர், அங்கு பாதையைத் தூய்மைப்படுத்திக் கொண்டிருந்த சபரியைப் பார்த்து, "மகளே! நீ யார்? ஏன் இந்தப் பாதையைத் தூய்மைப்படுத்துகிறாய்?" என்று கேட்டார். சபரியும் நடந்தவைகளை எல்லாம் சொல்லி, "சுவாமி, எப்படியாகிலும் தங்களைத் தரிசித்து தங்கள் சிஷ்யையாகி விட வேண்டும் என்ற ஆர்வத்திலும், தங்களைப் போன்ற ஒரு மாமுனிவர், திருப்பாதம் நோக, கரடு முரடான பாதையில் நீராடச் செல்கிறாரே என்ற ஆதங்கத்தினாலும்தான் செய்தேன். பிழை இருந்தால் பொறுத்தருள்புரிய வேண்டும் சுவாமி!" என்று விநயமாகக் கூறி வணங்கி நின்றாள்.

அவளது பக்தியையும், மெய்ஞ்ஞானத்தை அறிந்து கொள்வதில் அவளுக்கிருந்த அளப்பரிய ஆர்வத்தையும் கண்ட மதங்கரிஷி, சபரியைத் தன் சிஷ்யையாக ஏற்றுக் கொண்டு அவளைத் தம் ஆசிரமத்திற்கு அழைத்துச் சென்றார்.

காலம் கரைந்தது. இளம் வேடுவப் பெண் சபரி, மெய்ஞ்ஞானம் பெற்று, வயதாகி இருந்தாள். ராமனின் மீது அளப்பரும் பக்தி கொண்டாள். ராமனின் திவ்யதரிசனம் காண தவமேற் கொண்டாள். நாளும் 'ரகுராமனின் திவ்ய தரிசனம் கிடைக்குமா?' என்று எண்ணி ஏங்கியிருந்தாள்.

*- நிவேதிதா -*

ஒரு நாள் ராமனைத் தரிசித்தாள். தான் சுவைத்துப் பார்தது தேர்ந்தெடுத்த தீஞ்சுவைக் கனிகளை ராமனுக்குக் கொடுத்தாள். அவளுடைய பக்திக்குக் கட்டுண்ட ராமன், "உனக்கு என்ன வரம் வேண்டும்?" என்று கேட்க, சபரி சட்டென்று, "ராமா! நீ இங்கேயே இருந்து விடேன்" என்று கோரினாள். புன்னகைத்த ராமன், "என்னுடைய இந்த அவதாரத்தில் நான் இன்னும் பல கடமைகளைச் செய்ய வேண்டி இருக்கிறது. அடுத்து நான் கிருஷ்ணாவதாரம் செய்யும்போது நீ என் சகோதரி சுபத்திரையாகப் பிறப்பாய். அப்போது, எந்த சமயத்தில் நீ நினைத்தாலும் வருவேன்" என்று கூறினான்.

பக்தியினால் பரந்தாமனுக்கே சகோதரியானாள் சபரி.

## எங்கள் தமிழை நினைத்தால்....!

உன்னை நினைத்தால் வாழலாம்
உலகை வென்றே ஆளலாம்
மண்ணில் புரட்சி செய்யலாம்!
மாதவம் ஆயிரம் நோற்கலாம்!

கண்ணாய் வாழ்வை ஏற்கலாம்
காதல் செய்தே பழகலாம்
விண்ணில் ஏறிஆடி மகிழலாம்
வேள்வி புதிதாய்த் தொடங்கலாம்

அண்ணன் வழியில் நிற்கலாம்
ஆயிரம் சாதனை படைக்கலாம்
"மன்னன்" போல ஆகலாம்
மாற்றான் கண்டு ஓடலாம்!

அடிமை வாழ்வை ஒழிக்கலாம்
அன்பைப் பெருக்கிக் கொள்ளலாம்
மிடிமை போக்கி வாழலாம்
மேதினியில் தமிழனாக உயரலாம்!

கொள்கை காத்து நிற்கலாம்
கொடி ஏற்றி மகிழலாம்!
எல்லை காக்க உழைக்கலாம்.
எங்கள் தமிழை நினைப்பதால்!

- எம். பி. அருளானந்தன் -

## வெற்றிகள் குவிக!

ஆளுமை நிறைந்த
வாழ்வு வேண்டும்.
ஆண்மை நிறைந்த
வெற்றி வேண்டும்.

நெஞ்சில் நிறைந்த
உறுதி வேண்டும்.
நினைவில் மலரும்
திறமை வேண்டும்.

பஞ்சம் அகன்றிடப்
பாடுபடல் வேண்டும்.
அஞ்சும் வாழ்வை
அகற்றிடல் வேண்டும்.

எங்கும் வாழ்ந்திட
உரிமைகள் வேண்டும்.
எல்லோரும் வாழ்ந்திட
உரிமைகள் வேண்டும்.

வெற்றிகள் கரங்களில்
குவிய வேண்டும்.
சத்தியம் வாழ்வு
சரிதம்எழுதிடல் வேண்டும்.

# 'தாம் தம்செய்வினை முடிக்குக!'

தலைவன் பிரிவால் நலிவுற்ற தலைவி, தோழியை அழைக்கின்றாள். 'தோழி! நாம் அவர் பிரிவால் பெரிதும் வருந்துகின்றோம். ஆயினும் அவர் கருதிய பொருளீட்டும் செயல் இனிது நிறைவெய்த வேண்டும்' என்று மொழிகின்றாள். இது மகுடவாக்கியத்தின் பொருளாகும். (அகம் 155) பாடல் அறன் கடை என்றுதொடங்கி மலை இறந்தோரே என்று நிறைகின்றது. (இறத்தல் – கடத்தல்) அகநானூற்று மஃணிமிடை பவளத்து வருகின்றது.

நாம் தெரிவுசெய்த பாடலை இயற்றிய பழம் பெரும் புலவர், பாலை பாடிய பெருங்கடுங்கோ ஆவர். அவரைப் பற்றி முன்பு தெரிந்திருக்கின்றோம். அவர் சேரநாட்டு வேந்தருள் ஒருவர். புலமை நலம் கனிந்த சால்பினர். பெருங்கடுங்கோ என்பது இவரின் இயற்பெயர். பாலைத் திணைப் பாடல்களை பொருணயம், சொன்னயம் விஞ்சப்பாடுதலால் பாலை பாடிய பெருங்கடுங்கோ என்று பேசப்படுகின்றார். அகநானூறு தவிர்ந்த பிற தொகை நூல்களிலும் இவர் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

தேன்கூடு

பாடலுக்குரிய திணை – பாலை; துறை – தலைமகன், பிரிவின்கண் வேறுபட்ட தலைமகள் சொல்லியது என்பதாம்.

குறித்த பாடலின் திரண்ட பொருளை நோக்குவோம். ''தோழி! நம் தலைவர் புனைந்தியற்றப்பட்ட அணிகலங்களை உடையாய் கேள்; அறங்கடைப்படா வாழ்க்கையும் பிறன் கடைச் சென்று 'ஈது இடுக' என்று இரவாநிலையும் நமக்கு வாழ்வியலுக்கு இன்றியமையாதன. இவற்றைத்தர வல்லது பொருள் ஒன்றே! என்றெல்லாம் மொழிந்தார்''.

''தாம் எம்மை நீத்து, நெடுந்தொலைவு தூரம் சென்று பொருள் தேடும் முயற்சிக்கு எமது ஒப்புதலைப் பெற ஆசைப்பட்டார், எமது கரிய கூந்தலை நீவினார்; தடவினார். இன்று யாம் அவர் பிரிவால் நோயுற்றுள்ளோம் தான். எனினும் வெம்மை மிகுதியால், மரற்புற்கள் வாடும் மலையைக் கடந்துசென்றுள்ளார். அவர்தம் ஆள்வினை உடைமையை நிறைவேற்றுவாராக'' என்று மொழிந்தாள். தொடர்ந்து ''அவர் சென்ற வழியோ கொடிது. பெருவீரன் பாணனது பிரதேசத்தில் பாற் பசுக்கள் நிறைந்த இடையராயினார், நீர் பெறற் பொருட்டு, குழிக்கிணறுகளைத் தோண்டுவர். குழியுட் கிடைக்கும் நீர் விரைவில் காய்ந்து விடும். பெரும் யானைகள் ஆங்கு வந்து, நீர் பெறாது ஏகும். அம்மட்டோ? நீர் வேண்டி ஆங்கு கொடிய புலிகளும் வரும். நீரின்மையின் அவையும் மீண்டேகும். சகதியுள் அவற்றின் அடிச்சுவடுகள் தெரியுமாம். அவர் சென்ற பாதையோ மிகமிகக் கொடிது'' என்று கூறிமுடிக்கின்றாள்.

பெருங்கடுங்கோ முதலிய பண்டைப் புலவோர் சிறந்த எண்ணங்களையும் உயர்ந்த நோக்கங்களையும் கொண்டிருந்தனர். மக்கள் வாழ்வாங்கு வாழ வழிவகுத்தனர். வேண்டும் வழியெல்லாம் கதை மாந்தர் வழியாக அரிய குணநலங்களை வெளியிட்டனர்.

ஆடவராயினார், 'வினையே ஆடவற்கு உயிர்' என்று கண்டு உயிரையும் பொருட்படுத்தாது உறுபொருள் திரட்ட முயன்றனர். திரட்டிய பொருளைக் கொண்டு ஈதல் இசைபட வாழ்தல் என்னும் நேரிய வழியில் நின்றனர். ஈதற்குச் செய்க பொருளை என்று இசைத்தனர்.

**சிந்திப்போம் செயற்படுவோம்**

பாருங்கள் இன்றைய அகப்பாட்டிலே, பீடார் புலவர் பெருங்கடுங்கோ பாத்திரத்தின் ஊடாக – கதை மாந்தர் வாயிலாக – இல்லொழுக்கத்தில் கடைப்பிடிக்க வேண்டிய இனியவழியை இயம்புகின்றார். அவர் கூறும் விழுமிய கருத்தினைக் காண்போம்.

அறன் கடைய படாஅ வாழ்க்கையும் என்றும்
பிறன்கடைச் செலாஅச் செல்வமும் இரண்டும்
பொருளின் ஆகும் புனைஇழை என்றுநம்
இருளேர் ஐம்பால் நீவியோரே.........
..........................................................................
மரல்வாடு மருங்கின மலையிறந்தோரே. (அகம் 155)

திருவள்ளுவதேவர் அறத்தினை உயர்ந்த செல்வம் என்று கூறுவர். எவர் ஒருவர் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் நீங்கி வாழுகின்றனரோ அவரே அறத்தில் நின்று வாழ்வார் என்ற குறிப்பினையும் தருகின்றார். இனி, கம்பநாடர்.

'தக்க இன்ன தகாத இன்னவென்று
ஒக்க உன்னல ராயிடின் மக்களும் விலங்கே'

என்று கூறுவர் ஆசிரியர் பரிமேலழகர். 'மனு முதலிய நூல்களில் விதிக்கப்பட்டவற்றைச் செய்தலும் விலக்கப்பட்டவற்றை ஒழிதலும் அறம்' என்று கூறுவர். ஈதலை மேலான அறம் என்று கூறுவோரும் உளர். இரத்தலினும் இன்னாதது வேறொன்றில்லை என்பது நூலோர் கூற்று.

என்றுமே அறத்தினை வலியுறுத்தும் பெருங்கடுங்கோ அவர்கள் பாலைக்கலியுள்ளும் கதைமாந்தர் வாயிலாக உயரிய விழுமியம் வளர, நிலைக்க, எல்லாவற்றுக்கும் பொருளே வேண்டும் என கூறாநிற்பர்.

அரிதாய அறனெய்தி அருளியோர்க்(கு) அளித்தலும்
பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்
புரிவமர் காதலில் புணர்ச்சியும் தருமெனப்
பிரிவெண்ணி பொருள்வயின் சென்ற நம்காதலர்
(கலி 11) என்பது அது.

எனவே பொருளீட்டி, அன்பும் அறனும் உடையராகி, பண்பும் பயனும் உற்று, மனித வாழ்வை வளமுள்ளதாக ஆக்குவோமாக!

தொடரும்.

# போரை நிறுத்தி பேச்சுக்களை ஆரம்பித்தாலே அரசியல் ரீதியான வெற்றியை அரசு ஈட்டலாம்

ஆனையிறவில் அமைந்துள்ள பாரிய படைத்தளத்தை விடுதலைப் புலிகள் கைப்பற்றி நேற்றோடு ஏழு நாள்கள் கழிந்து விட்டன. போரின்போது வெற்றியும், தோல்வியும் வழமையே. அதேபோன்று நிலப் பிரதேசங்களைக் கைப்பற்றுவதும் இழப்பதும் சகஜமே. எனினும் ஆனையிறவை அவ்வாறு சாதாரண வெற்றி - தோல்வி வாய்ப்பாட்டுக்குள் அடக்கிவிட முடியாது. வெற்றி என்பது நினைத்தும் பார்க்க முடியாத சரித்திர வெற்றி. அதன் இழப்பு என்பது பெரும் இழப்பு. இது இராணுவ விமர்சகர்களின் கணிப்பு.

ஆனையிறவு யாழ்ப்பாணக் குடாநாட்டின் நுழைவாயில். விடுதலைப் புலிகள் அதனைக் கைப்பற்றி விட்டார்கள் என்பதால் அவர்களின் அடுத்த இலக்கு யாழ்ப்பாணம்தான். இதனை விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர்

## இராணுவ நடவடிக்கைகளை தீவிரமாக்க முனைந்தால் சமாதானம் வரமாட்டாது

அன்ரன் பாலசிங்கம் நோர்வேயில் மிக வெட்ட வெளிச்சமாக முன்னரே கூறியிருந்தார்.

கடந்த மாதம் நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் நடந்த நிகழ்வொன்றில் பேசுகையில் தமிழ்த்தேசத்தின் கலாசாரத் தலைநகரான யாழ்ப்பாணத்தை அடைவதற்காக யாழ். நகருக்கான வாசலைத் திறந்து விடு வதில் விடுதலைப் புலிகள் மிகவும் உறுதி யான தீர்மானத்துடன் உள்ளனர் என்று கூறி யிருந்தார்.

அவர் ஆனையிறவையே யாழ். நகருக்கான வாசல் என்று மனதில் கொண்டு கூறியிருக்க வேண்டும். ஆனால் கடந்த டிசெம்பர் முற்பகுதியில் அரியாலை, கொழும்புத்துறை, தனங்களப்புப் பகுதிகளில் தமது தாக்குதல்களை ஆரம்பித்திருந்ததால், தென்மராட்சியின் மேற்குப் பகுதியைப் பிடிப்பது அதனூடாக யாழ்ப்பாணத்துக்குள் வருவது என்ற திட்டத்தையே அன்ரன் பாலசிங்கம் அவ்வாறு தெரிவித்தார் என்று பலரும் ஊகித்தனர். தனங்களப்பு, அரியாலைப் பக்கத்தால் தட்டி, நொட்டிக் காட்டிக்கொண்டு வலிகாமத்துக்குள் ஊடுருவுவதே, புலிகளின் திட்டமென்று பலரும் நினைத்தார்கள். இராணுவத்தின் சில அதிகாரிகள் கூட அவ்வாறு நினைத்தார்கள்.

ஆனால் வடமராட்சி கிழக்குப் பகுதியின் கடற்கரையை அண்டிய பகுதிகளை விடுதலைப் புலிகள் மார்ச் மாதத்தில் கைப்பற்றிய போது, அவர்கள் ஆனையிறவை முற்றுகையிட வியூகம் வகுத்திருக்க வேண்டும் என ஊகிக்கப்பட்டது. பின்னர் பளைப் பகுதியில் கண்டி வீதியை - "ஏ-9" பாதையைத் தடுத்த போதும் விடுதலைப் புலிகளின் முதலாவது பிரதான இலக்கு ஆனையிறவுதான் என்பது தெளிவாயிற்று.

எனினும் மிகக் குறுகிய இடைவெளியில் ஆனையிறவைப் புலிகள் கைப்பற்றுவர் என்று இராணுவ ஆய்வாளர்கள் கூட எதிர்பார்க்கவில்லை. 48 மணி நேர உக்கிரச் சண்டையில் பெரிய படைத்தளமான - கடந்த நான்கு தசாப்தங்களாகப் படிப்படியாகப் பலப்படுத்தப்பட்ட படைத்தளமான - ஆனையிறவைப் புலிகள் கைப்பற்றிவிட்டனர்.

இனி அடுத்தது என்ன? என்பதே எல்லாத் தரப்புக்களின் கேள்வியாகவும் உள்ளது.

விடுதலைப் புலிகளின் புதிய இராணுவ வியூகம் எவ்வாறு அமையப் போகிறது? இராணுவத் தரப்பின் நடவடிக்கைகளும் திட்டங்களும் எவ்வாறு இருக்கும்? அரசியல் சூழ்நிலையும் நடவடிக்கைகளும் என்ன மாதிரி மாறும்? *அரசாங்கத்தின் திட்டங்கள் என்னவாயிருக் கும்?* சமாதானப் பேச்சுக்கள் குழம்பிப் போர் மீண்டும் தீவிரமாகுமா? என்பன அந்தக் கேள் விகளில் அடங்கும்.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றப் புலிகளும், தக்க வைக்க அரசாங்கப் படைகளும் முயன்றால், மோதினால் தாம் போரில் சிக்குண்டு பல கஷ்டங்களையும், அவலங்களையும் மீண்டும் அனுபவிக்க நேரிடப் போகிறதே என்பது குடாநாட்டு மக்களின் அச்சமாக இருக்கிறது.

### யாழ்.மக்களின் பாதுகாப்பு

நாலரை லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வாழும் பிரதேசத்தில் - குடாநாட்டில் - இரண்டு தரப்புக்களும் தமது இராணுவப் பலத்தை நிறுத்திக் காட்ட முயன்றால், மக்கள் தரப்பிலேயே பல உயிர்ச்சேதமும், உடைமைச்சேதமும் உண்டாகுமென அஞ்சப்படுகிறது.

உலகின் பல பகுதிகளிலும் நடைபெறும் போர்களில் - இராணுவ மோதல்களில் - இடையில் சிக்குண்டு இறக்கும் மற்றும் பாதிக்கப்படும் குடிமக்களின் எண்ணிக்கை அண்மைக் காலமாக உயர்ந்து கொண்டே வருவதாக, ஐக்கிய நாடுகள் சபையின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

போர் வேளையில் அதில் சிக்குண்டு பாதிக்கப்படும் குடிமக்களைப் பாதுகாப்பதற்கு உதவும் திட்டங்களை வகுப்பதன் அவசியத்தை, ஐ.நா. பாதுகாப்புச்சபை மிகவிரைவாகக் கடந்த வாரம் விவாதித்துத் தீர்மானம் நிறைவேற்றியமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. இன்றைய சூழ்நிலையில் யாழ்ப்பாண மக்கள் பாதுகாக்கப்பட வேண்டிய தேவை அவசர, அவசியமான விடயமாகியுள்ளது.

யாழ்ப்பாண மக்களைப் பாதுகாப்புக் குறித்துப் போரில் ஈடுபட்டுள்ள இரண்டு தரப்புக்களும் அக்கறை காட்டவேண்டும். மிகவும் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும். மோதல் ஒன்று இல்லாமலேயே, யாழ்ப்பாணம் குறித்து ஓர் இணக்கமான நிலைக்கு வருவதற்கான முயற்சிகள் அவசியம்.

யாழ்ப்பாணத்தில் மக்களையும் வைத்துக் கொண்டு, இராணுவ பலத்தைச் சோதிப்பதற்கான போர் ஒன்று நடைபெற்றால் அது பெரும் *உயிரழிவிலும், உடைமை அழிவிலும் முடியும்,* நிச்சயமாக அது சமாதானப் பேச்சுக்களுக்கு குந்தகமாகவும் தடைக்கல்லாகவும் இருக்குமேயன்றி, உற்சாகமூட்டுவதாகவோ அன்றி உற்சாகமளிப்பதாகவோ இருக்கமாட்டாது.

நோர்வே அரசின் அனுசரணையுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்கு அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் இணக்கம் தெரிவித்துள்ளன. அவ்வாறிருக்க இரண்டு தரப்புக்களும் இராணுவ ரீதியாக மோதிக்கொள்ள ஏன் முனைந்தன என்ற கேள்வி இன்று அநேகர் எழுப்பும் வினா. சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதில் அரசு காட்டும் தாமதமே - காலம் தாழ்த்துதலே - காரணம் என்று ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். அதுவே உண்மையும்.

தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கென்று இலங்கை அரசாங்கங்கள் எடுத்த முந்திய முயற்சிகள் எல்லாமே தோல்வி கண்டதைத் தான் அரசியல் வரலாறு காட்டுகிறது. அரசியல் தீர்வென்றைக் காண்பதற்குப் பதிலாக (அல்லது அவ்வாறு காட்டிக் கொண்டு) இராணுவபலத்தினால் தமிழர்களின் உரிமைகளை

### உள்ளும் புறமும்

குறுமுனி

நசுக்கிவிடலாம் என்ற சிந்தனை தென்னிலங்கை அரசியல்வாதிகளின் மனங்களில் ஆழ வேரூன்றி இருந்தமையே இதற்கு மூலகாரணம். இன்னமும் அந்தச் சிந்தனை முற்றாக நீங்காததாலேயே, சமாதான முயற்சிகளில் காலம்தாழ்த்தப்படுகிறது.

தமிழர்கள் கேட்கும் தனி நாடு உட்பட்ட கோரிக்கைகளுக்கு மாற்றீடாக, சிங்களத் தரப்பினால் என்னென்னவற்றை வழங்கமுடியும் என்பது குறித்து ஆளுங்கட்சியும் பிரதான எதிர்க்கட்சியும் இணக்கத்துக்கு வந்து வெளிப்படுத்த வேண்டும். இதுவே அரசியல் தீர்வு முயற்சியின் முதற்படியாக, முதலாவது செய்முறையாக அமைந்திருக்க வேண்டும்.

அவ்வாறு கருத்திணக்கம் காணப்பட்ட உத்தேச தீர்வைக் கையில் வைத்துக் கொண்டு, போரை நிறுத்திவிட்டு, விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சை அரசு தொடங்கியிருக்க வேண்டும். ஆனால் அரசின் திட்டம் அவ்வாறு அமையவில்லையே!

சிங்கள - தமிழ் யுத்தாண்டுக்குள் தீர்வை வகுத்து இறுதி வடிவம் கொடுத்துவிடப் போவதாக, ஆலவட்டம், குடை, குஞ்சம் எல்லாம் பிடித்து ஆடம்பரம் பண்ணிய அரசு, இன்று எங்கே நிற்கிறது? எதனைத்தான் எய்தியிருக்கிறது?

### அட்டவணைகள் மூன்றுமுறை மாற்றம்

தீர்வு முயற்சிக்கான சமாதானப் பேச்சு அட்டவணைகளை மூன்றுமுறைகள் மாற்றி அமைத்த "திறமை" அரச தரப்பிடம் இருந்தது:

*முதலாவது அட்டவணை:-*

1. ஆளுங்கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சிகள்.
2. ஐக்கியதேசியக் கட்சி.
3. தமிழ்க் கட்சிகள்.
4. தமிழீழ விடுதலைப் புலிகள்.
5. நாடாளுமன்றில் சமர்ப்பித்தல்.

*இரண்டாவது அட்டவணை:-*

1. ஆளுங்கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சிகள்.
2. தமிழ்க் கட்சிகள்.
3. ஐக்கிய தேசியக் கட்சி
4. விடுதலைப் புலிகள்.
5. நாடாளுமன்றில் சமர்ப்பித்தல்.

*மூன்றாவது அட்டவணை:-*

1. ஆளுங்கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சிகள்.
2. தமிழ்க் கட்சிகள்.
3. ஐக்கிய தேசியக் கட்சி.
4. நாடாளுமன்றில் நிறைவேற்றுதல்.
5. விடுதலைப் புலிகளிடம் எடுத்துச் சென்று பேசுதல்.

இவ்வாறு சமாதானப் பேச்சுவார்த்தைக்கு, பயன் தரக்கூடிய ஓர் அட்டவணையைத் தயாரிக்க முடியாத அரசு, புலிகளுடன் பேசுவதில் தாமதம் காட்டுவது எதிர்பார்க்கப்பட்டதே.

ஐக்கிய தேசியக் கட்சி - அரசுத்தரப்புகள் ஆறு தடவைகள் பேசியும் முக்கியமான அம்சங்களில் இன்னமும் கருத்திணக்கம் இல்லை. ஆடியில் ஒருமுறை, அமாவாசையில் அடுத்த முறை என்று ஆமை வேகத்திலேயே சமாதானப் பேச்சுக்கள் வேறு நடக்கின்றன. நாட்டில் எரியும் பிரச்சினைக்கு ஐம்பது ஆண்டுகளாகத் தீர்க்கப்படாத பிரச்சினைக்கு, ஆமைவேகத்தில் பேசித் தீர்வை வகுப்பது எவ்வாறு? அரசின் செயற்பாட்டு வேகம் அதன் முக்கியத்துவத்தை உணர்ந்த வகையில் நடைபெறவில்லை.

பசி நோக்காது, கண் துஞ்சாது கருமமே கண்ணாக நாளாந்தம் பல மணி நேரத்தை இதில் செலவிட்டிருக்க வேண்டாமா? அந்தளவு அவசரத்தையும் அவசியத்தையும் அரசு கண்டு கொள்ளவில்லை. விடுதலைப் புலிகளுடன் பேசிப்பார்ப்போம். அவர்கள் ஒத்துழைக்காதுவிடில் நாங்கள் தீர்வை நிறைவேற்றி செயற்படுத்துவோம் என்ற பாதகமான சிந்தனை கூட அரச உயர்வட்டாரங்களில் நிலவியது.

அரசாங்கத்தின் இந்த வேண்டா வெறுப்புப் போக்கும், ஓரங்கட்டும் தன்மையும், ஆமை வேகமும் தமது இராணுவப் பலத்தை காட்ட வேண்டுமென்ற விடுதலைப் புலிகளின் எண்ணம் நிறைவேறுவதற்கு சந்தர்ப்பம் அளித்தது என்று கொண்டால் அதில் தப்பு என்ன?

மேலும் நோர்வே அரசின் முன்முயற்சியுடன் அரசு - விடுதலைப் புலிகள் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான சாதகநிலை இன்னும் தோன்றவில்லை என்பதாலும், விடுதலைப்புலிகள் இராணுவரீதியாகத் தாம் பலமான நிலையில் உள்ளதாகக் காட்ட முயன்றிருக்கலாம் அல்லவா?

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் "தமிழ் கார்டியன்" சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டியை பிடித்துத் தொங்கியது அரசாங்கம். அதன் பொருட்டு வெளிநாட்டு அமைச்சு ஒரு பதில் அறிக்கையைக்கூட வெளியிட்டது.

பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும். படையினர் முகாம்களுக்குள் முடங்கியிருக்க வேண்டும். பேச்சுக்களில் உண்டாகும் முன்னேற்றத் தைப்

## அமைச்சர் அலவி மௌலானா வெளியிட்ட புதிய தகவல்!

பொறுத்து படைவிலக்கலை மேற்கொள் ளலாம் - என்று பாலசிங்கம் கூறியிருந்தார்.

ஒரு பக்கத்தால் போர் புரிந்து இரண்டு தரப்புகளிலும் அழிவுகள் ஏற்பட்டுக் கொண்டு இருக்க, மறுபுறத்தில் சமாதானம் பேசுவதில் அர்த்தம் என்ன?

மக்கள் அன்றாட வாழ்க்கை நடத்துவதற்கு உள்ள தடைகளை நீக்காமல், அந்த மக்கள் நலன் கருதி - தீர்வை நாடி - பேச்சு நடத்துவது என்பதில் என்ன நன்மை உண்டு?

அரசியல்ரீதியான வெற்றி அரசுக்குக் கிடைக்க வேண்டுமானால், அரசியல் தீர்வைக் காண்பதில் உண்மையான அக்கறை இருந்தால் போரை நிறுத்தத் தயங்க வேண்டியதில்லையே!

அறிக்கைகளுக்குப் பதில் அறிக்கைகள் விடுவதில் காலத்தைச் செலவிட்டால் அது பேச்சுக்களுக்குச் சாதகமான சூழ்நிலையை ஒருபோதும் தோற்றுவிக்காது.

பேச்சுவார்த்தை நடத்தப்போகிறோம் என்று கூறுவதால் மட்டும் பயன் கிடைத்துவிடாது. அதற்கான நம்பிக்கை தரும் சூழலையும் உருவாக்கவேண்டும்.

இராணுவ ரீதியாகத் தாம் பலமானவர்கள் என்று காட்டினாலேயே, சமாதானப்பேச்சு மேசையில் - அரசியல் தீர்வு முயற்சியின் போது - தாம் மேலோங்கி நின்று உரத்துப் பேசலாம் என்று விடுதலைப் புலிகள் கருதியிருப்பின் அதில் தப்பு என்ன?

இராணுவ பலம் உண்டு என்ற தடியை வைத்துக்கொண்டே இது வரை காலமும் இலங்கை அரசுகள் தாம் நினைத்த தீர்வு களை, தமிழ் மக்கள் மீது திணிக்க முயன்றன. இப்போது, தமிழ் மாநிலத்தைக் கொண்ட சுயாட்சி அரசைக் கூட வழங்கக்கூடாது என்ற நோக்கிலேயே அதிகாரப்பரவல் திட்டம் என்ற வட்டத்துக்குள்ளேயே சுற்றிச் சுற்றி நிற்க முயலப்படுகிறது.

கடந்த ஐந்து வருடகாலமாக இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியாமல் போனமை சந்திரிகா அரசுக்குக் கிடைத்த அரசியல் தோல்வி எனலாம். காரணம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்போவதாகத் தெரிவித்தே - தமிழ் மக்களின் ஆதரவையும் பெற்று - 1994 ஆம் ஆண்டில் சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார். ஆனால் அவரால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காணமுடியவில்லை. அதற்காக எத்தனை காரணங்களைக் கூறினாலும், யார் யார் மீது பழியைப் போட்டாலும் அது ஓர் அரசியல் தோல்வியே: வேறு சொற்களில் எழுதுவதானால் அரசியல் திறமையின்மையே. அரசியல் தோல்வி ஏற்படும் போதே ஆளுந் தலைவர்கள் இராணுவ வெற்றியைத் தேடி ஓடுவதுண்டு.

இம்முறையும் சமாதானப்பேச்சு விவகாரத்தில் அரசியல் ரீதியான வெற்றி காண்பதற்கு முயல வேண்டும். இராணுவ வெற்றி, இராணுவப் பலம் என்பனவற்றுக்குப் பின்னால் நின்று செயற்பட முனைந்தால் பழைய கதையே அரங்கேறும்.

அமைச்சர் அலவி மௌலானா வெளியிட்டுள்ள தகவல் ஒன்றின் பிரகாரம், போரை நிறுத்துவதற்கான துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளும் திட்டம் ஒன்றை வகுத்த பின்னரே ஜனாதிபதி வெளிநாடு சென்றார் என்று அறியப்படுகிறது.

இதனை அடிப்படையாக வைத்து, இம்முறை அரசாங்கத்தின் மேதினக் கொண்டாட்டங்களின் பிரதான கோஷம் அரசியல் செயற்பாடுகளின் ஊடாகச் சமாதானத்தை அடைதல் என்பதாகவே இருக்கும் என்று அமைச்சர் அலவி மௌலானா (ஆனையிறவு வீழ்ச்சிக்கு முன்னர்) தகவல் வெளியிட்டிருந்தார்.

அமைச்சர் அலவி வெளியிட்ட தகவல் உண்மையாக இருந்துவிட வேண்டும் என்றே சமாதான விரும்பிகள் எவரும் பிரார்த்திப்பர். ஜனாதிபதி சந்திரிகா நாடு திரும்பியதும் போர் நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை எடுப்பாரேயானால், அவர் இம்முறையாவது அரசியல் ரீதியாக வெற்றி பெற வாய்ப்பு உண்டாகும்.

வெளிநாட்டு இராணுவ உதவியைக் கோரியாவது விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்த வேண்டும்: அழிக்க வேண்டும் என்று கூக்குரலிடும் தீவிரப்போக்கு உடையோரின் கருத்துக்குச் செவிமடுக்காமல் அவர் செயற்பட வேண்டும்.

ஆனையிறவு வீழ்ச்சியினால் தெற்கில் ஒரு வகைச் சோர்வு நிலை ஏற்பட்டிருக்கிறது. அதனைப் பயன்படுத்திப் பேரினவாதம் கண்டவாறு எல்லாம் கத்தவே செய்யும். பௌத்த மகா நாயக்கர்களும் பக்கவாத்தியம் வாசிக்கக் கூடும்.

தமக்கு அரசியல் ரீதியான வெற்றி கிடைக்க வேண்டும் என்பதில் அக்கறை இருந்தால், இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டு பெருமை தேட வேண்டும். விருப்பம் இருந்தால் ஜனாதிபதி அவற்றையும் பொருட்படுத்த மாட்டார். நாட்டை நாசம் செய்யும் போரை நிறுத்துவதற்கு அரசியல் துணிச்சலை வரவழைத்துக் கொண்டு செயற்படுவார்.

போர், தமிழர் தரப்பில் மட்டும் அன்றி சிங்களவர் தரப்பிலும் சமர்க்களத்தில் ஒரு சந்ததியை அழித்துக் கொண்டு இருக்கின்றது என்பதனை மனதில் இருத்தினால் பேரினவாதத்தின் செல்வாக்குக்கு ஆட்படவேண்டி இருக்காது. நாட்டு நலன் கருதிய அரசியல் துணிச்சல் தானாகவே பிறக்கும்.

யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய மூத்த இராணுவ அதிகாரி ஒருவர் கூட, ஒரு சந்தர்ப்பத்தில், இதற்கு ஆதரவான கருத்தை, தெரிவித்திருந்தார்.

போர் என்ற பெயரில் இரண்டு பக்கங்களிலும் இளைஞர்கள் அழிந்து கொண்டு இருக்கின்றார்கள்.. இதனை முடிவுக்குக் கொண்டு வருவது எங்கள் கையை விட்டு மீறிப்போய் விட்டதோ என்று எண்ணத் தோன்றுகிறது. அவ்வாறே நடக்குமாயின், அடுத்த சந்ததிகளோ இதற்கு முடிவு கட்ட நேரிடும் - என்றார் அவர்.

இராணுவ அதிகாரியாக இருந்த போதிலும் அவருடன் மானுடம் இருந்தது, அரசியல் பலவீனத்தையும் நன்கு உணர்ந்திருந்தார். இத்தகைய மானுடமும் நாட்டில் எதிர்கால நலன் பற்றிய சிந்தனையுமே இன்றைய அரசியல் தலைவர்களிடம் மிகவும் வேண்டப்படுகிறது.

மே தினக் கொண்டாட்டங்களை அரசு ரத்துச் செய்துவிட்டது. அமைச்சர் அலவி மௌலானா கூறும் போர் நிறுத்தம் சம்பந்தமான தமது திட்டங்களை மே தினப் பிரகடனமாக சந்திரிகா வெளியிடுவாராயின், நல்ல சங்கதியாக இருக்கும்!

# கணவன் - மனைவி உறவு ஏழு பிறப்பும் தொடருமா?

**அல்வாய்.** **மௌலி.**
பெண்களைச் சுற்றும் செக்கு மாடுகள் திருந்த மாட்டாவா?
☺**செக்கு மாடுகள் திருந்தும்; 'செக்சு' மாடுகள்தான் திருந்தமாட்டா!**

**மானிப்பாய்.** **வேந்தன்.**
'ராக்கிங்' செய்த ஒருவனைப் புதுமுக மாணவி ஒருத்தி செருப்பால் தாக்கியுள்ளாராமே?




☺**செருப்பு அவ்வளவு என்ன தரம் தாழ்ந்து விட்டதா?**

**அளவெட்டி.** **வேணு.**
'வதந்தி' - ஒரு வரியில் வரைவிலக்கணம் தருக!
☺**விஷமிகளின் பெருமூச்சு!**

**சித்தங்கேணி.** **ராகுலன்.**
தன் மனைவியின் மோதிரத்தை விற்று விட்டானே என் நண்பன்....?
☺**எவ்வளவு காலம்தான் மோதிரக் கையால் குட்டுப்படுவது?**

**நல்லூர்.** **வாஸ்.**
பெண்ணைத் தெரிவு செய்ய குணத்தைப் பார்ப்பதா, பணத்தைப் பார்ப்பதா?
☺**'பணம் பார்த்து பண்டம் கொள்; குணம் பார்த்து பெண்ணைக் கொள்' என்றார்கள் நம் முன்னோர்கள். நீர் வேண்டுவது பண்டமா? பெண்ணா?**

**யாழ்.** **முகுந்தன்.**
மனைவியைக் 'கழுதை' என்று வர்ணிக்கும் கணவன் பற்றி என்ன நினைக்கின்றீர்.....?
☺**'காலுதை' என்ற சொல் திரிந்து 'கழுதை' ஆகியதாக சில 'மதுரை'க்காரர்கள் கூறுகிறார்கள். அனுபவப்பட்டவன் கழுதை என்று சொல்லுவான்தானே!**

**மட்டுவில்.** **சுரேஷ்.**
நாய்க்கு வாய்க்கட்டு போடுவது போல மனைவிக்கும் வாய்க்கட்டுப் போட முடிந்தால்...?



☺**பூனைக்கு யார் மணிகட்டுவது என்பதுதான் பிரச்சினை!**

**தட்டெரு.** **பிரபா.**
படித்துக் கொண்டே காதலிக்கலாமா?
☺**சிலர் முடித்துக் கொண்டே படிக்கின்றார்களே?**

**மயிலினி.** **ராஜு.**
கணவன் - மனைவி உறவு ஏழுபிறப்புக்கும் தொடருமா?
☺**செய்த பாவம் ஒரு பிறப்பில் முடிவதில்லையே என்று ஏக்கப் பெருமூச்சு விடுகின்றாரே விவரம் புரிந்த கணவர் ஒருவர்.**

**சீரணி.** **ஸ்ரான்லி.**
திருமண விடயத்தில் அப்பாவுக்கும் மகனுக்கும் முரண்பாடு வருவது ஏன்?
☺**மகனுக்கு கவர்ச்சியில் கண்; தகப்பனுக்கு 'கரன்சியில்' கண்!**

**சுன்னாகம்.** **ரமீஸ்.**
ஆஸ்பத்திரியில் Out Patient இல் (வெளி நோயாளர்களில்) அதிக கவனம் எடுப்பதில்லையே?
☺**பல Patients 'அவுட்' ஆவதால் இந்தச் சந்தேகமா உமக்கு?**


**கைதடி.** **சாமி.**
தீய பழக்கம் எப்படிப்பட்டது?
☺**தொற்று நோய் போன்றது!**

**அராலி.** **ஸ்ரீ.**
மின்சாரத்துக்கும் சம்சாரத்துக்கும் தொடர்பு உண்டா?
☺**மின்சாரத்தை நிறுத்திய பின்தான் சம்சாரம் தொடங்கும்.**

**வட்டுக்கோட்டை.** **மீனா.**
தொலைபேசித் தொல்லை விட்டதா?
☺**தொலைபேசி எட்டாத தொலைவுக்குப் போய் விட்டதே.**

**நவாலி.** **தீபா.**
என் கணவர் என்னை கெஞ்சுவதற்கு ஒரு வழி சொல்லுங்களேன்?
☺**நீங்கள் மிஞ்சிப் பாருங்கள். கொஞ்ச (வு/மு)ம் வழி பிறக்கும்!**

**கொக்குவில்.** **அரவிந்.**
ஆயுத பலம் வலிதா? பேனாவின் பலம் வலிதா?



☺**சொல் சாதிப்பதை வில் சாதிக்காது; வில் சாதிப்பதைச் சொல் சாதிக்காது.**

**துறையூர்.** **ஜயதீஸ்.**
வீட்டிற்கு நல்லவளை வை என்கிறார்களே. ஏன்?
☺**வீட்டுக் கூரைக்கு நல்ல வளையும், வீட்டுக்காரியாக நல்லவளையும் வைக்காவிட்டால் இரண்டும் தலையில் 'பொறுத்து' விடும்.**



**சுன்னாகம்.** **சசி.**
வித்துவானாரே! 'பின் தூங்கி முன் எழுதல்' ஆண்களுக்குப் பொருந்துமா?
☺**பின் தூங்குவதும், முன் எழுவதும் அவர்களுக்கே உரியது.**

**அளவெட்டி.** **தம்பி.**
நான் ஒரு மெக்கானிக். எனது மாமன் மெக்கானிக் வேலையை விட்டால்தான் தன் மகளைத் தர முடியும் என்கின்றாரே...?
☺**'என்ஜின்' பிரித்து வேலை செய்யும் உமது திறமையைக் கண்டு அஞ்சுகின்றாரோ?**

**யாழ்.** **ச.ராஜா.**
"நாற்பது வயது இளமையின் முதுமை", "ஐம்பது வயது முதுமையின் இளமை" என்கின்றார்களே! சரியா?
☺**சில நைன்ரீகள் தாங்கள் இளமையின் இளமையில் இருப்பதாகக் கூறிச் செயற்படுகின்றார்களே?**

**நீராவியடி.** **குகன்.**
'எய்ட்ஸ்' நோயாளி ஒருவரால் குடாநாடு முழுவதும் சீரழிந்து விடுமா?
☺**'சட்டிப் பாலுக்கு ஒரு சொட்டு மோர் புரை!**

**உடுவில்.** **கணேஷ்.**
இசைச் கச்சேரியில் பக்கவாத்தியமாக கடம் பயன்படுத்துவது அருகி வருகின்றதே?



☺**பாட்டுக்காரருக்கு கடம் சங்கடமாக இருக்குமோ?**

**பாசையூர்.** **மனோ.**
மனைவியுடன் கோபித்தால்....?
☺**சத்திரத்தில் சாப்பாடு; சாவடியில் படுக்கை.**

**கல்வியங்காடு.** **வேணி.**
மாமியாரிடம் பாராட்டுப் பெற என்ன வழி?
☺**வாத்தியார் மெச்சிய பிள்ளையும் இல்லை; மாமியார் மெச்சிய மருமகளும் இல்லை என்பது உமக்குத் தெரியாதா?**

**தென்மராட்சி.** **சாருமதி.**
ஆண்கள் பெண்களின் பின் சுற்றுவதேன்?
☺**அது படைப்பின் கவர்ச்சி; படைப்புக்கான கவர்ச்சியும் கூட!**

**நல்லூர்.** **ரங்கன்.**
விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்கின்றாரே மீசைக்காரர்...?
☺**ஆனையிறவு அனுபவத்தைக் கூறுகின்றீரா?**

**தாவடி.** **பாலு.**
ஆனையிறவு தந்தது என்ன?
☺**ஆனை இருந்தாலும் ஆயிரம் பொன்; இறந்தாலும் ஆயிரம் பொன்!**

# நாயைப் போல் மனைவிக்கும் வாய்க்கட்டுப் போட முடிந்தால்...?

**மாவடி.** **மகேந்திரன்.**
குடிகாரனிடம் இரகசியம் கூறலாமா?
☺**சாராயத்தை வார்த்துப் பூராயத்தைப் பிடுங்கி விடுவார்களே!**

**கரவெட்டி.** **யோகன்.**
தண்ணியை வீணாக்கலாமா?
☺**'இறைக்கின்ற கிணறுதான் சுரக்கும்' என்கின்றார்களே?**

**நீர்வேலி.** **தயாபரன்.**
நம் நாட்டில் சிந்தனையாளர்கள் குறைந்ததேன்?
☺**நிந்தனையாளர்கள் பெருகிவிட்டதால்.**

**மானிப்பாய்.** **சுலோசனா.**
காதல் - காமம். வேறுபடுத்துக!

# மின்சாரம் - சம்சாரம்; எதும் தொடர்பு உண்டா?

☺**திருமணம் வரைப் பொறுத்திருப்பது காதல். அதற்கு முன் பொங்கி எழுவது காமம்.**

**தீவகம்.** **சூர்யா.**
என் மனமேடையில் - கனவில் - ஒருத்தி பகலிரவாகத் தோன்றி என்னை நிந்திக்கின்றாளே?
☺**அவளை மணமேடையில் - நனவில் - சந்திப்பதுதான் நல்லது.**

**கலட்டி.** **மாதவன்.**
கல்வி, செல்வம், வீரம், உண்மை, தர்மம், அறம் என்று எல்லாவற்றுக்கும் தனித்தனியாகக் கடவுள் இருக்க பொய்க்கும் லஞ்சத்துக்கும் மட்டும் ஏன் கடவுள் இல்லாமல் போய்விட்டது?




☺**அதற்குத்தான் தெய்வங்களாக அரசியல்வாதிகள் உள்ளனரே!**

**மட்டுவில்.** **பிரசாந்த்.**
அழகு தருவது புன்னகையா? பொன்னகையா?
☺**அழகுக்கு அழகு தருவது பொன்னகை. அதற்குத்தான் டிமாண்டும் கூட!**

# பெண்களின் பின்னால் ஆண்கள் சுற்றுவது ஏன்?

**உடுவில்.** **ருக்கேஷ்.**
பத்திரிகையாளர்களைப் பலரும் திட்டுவது ஏன்?



☺**'யதார்த்தவாதி வெகுஜன விரோதி' என்பது உங்களுக்குப் புரியாதா?**

**சங்கானை.** **தேவிகன்.**
குழுக்களோடு கூட்டணி சேர்வோர் குறித்து....?
☺**'விநாச காலே விபரீத புத்தி'**

**ஊரெழு.** **மஞ்சுளா.**
தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுக்காமல் கோவில்களுக்கு அள்ளிக் கொட்டும் முதலாளிகள் குறித்து....?
☺**'ஆத்தாள் அம்மணம்; அன்றாடம் கோதானம்' என்ற கதைதான் பாருங்கோ!**

**குளமன்கால்.** **வாசுகி.**
ஆனையிறவுவோடு நிற்குமா?
☺**அது ஆனைப் பசிக்கு சோளப் பொரி!**

**வேரவில்.** **சகுந்தலா.**
ஆனையிறவு ஓர் ஆரம்பமா?
☺**ஆனை வருமுன்னே கேட்கும் மணியோசை அது.**

## இவ்வார ஜோக்!

**இளம் ஜோடி தேன்நிலவுக்கு ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்தது. ஹோட்டலின் வெளியே இருந்த பெரிய மணியை காவல்காரன் மணித்தியாலத்துக்கு ஒரு தடவை அடித்துக்கொண்டிருந்தான்.**

**"ஒவ்வொரு முறை மணி அடிக்கும் போதும் நாம் மகிழ்ச்சியுடன் இருப்போமா?" என்று அவள் வெட்கத்துடன் கேட்டாள். அவனும் ஒப்புக்கொண்டான்.**

**நான்கு மணிநேரம் ஆயிற்று. அவன் மிகுந்த களைப்புடன் சிகரட் வாங்கி வருவதாகக் கூறி வெளியே வந்தான். மணி அடிப்பவனை அழைத்து அவன் கைக்குள் ஐம்பது ரூபாவைத் திணித்தான்.**

**"நீ எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும். இனிமேல் இரண்டு மணித்தியாலத்துக்கு ஒரு தடவைதான் மணி அடிக்க வேண்டும்" - என்றான் அவன்.**

**"அது முடியாது. உங்கள் மனைவி முன்னரே நூறு ரூபாவைத் தந்து அரை மணித்தியாலத்துக்கு ஒரு தடவை மணி அடிக்கும்படி கேட்டுக் கொண்டாள். நானும் ஒப்புக்கொண்டு அப்படியே அடித்துவருகிறேன். உங்கள் கோரிக்கையை ஏற்க முடியாது. மன்னிக்கவும்." - என்றான் காவல்காரன்.**

# உங்கள் கவிதைகள்

எங்களை இரட்சிக்க
எங்கிருந்தோ வந்தவர்கள்
பொங்கும் சமர் சூழ
தங்களையே இரட்சிக்கும்
தெம்பும் திராணியுமற்று
அஞ்சி உயிர் சுமந்தோடும்
எங்களைத் தடுப்பது
தங்களை இரட்சிக்கவா?

- கவரி -

*புரையோடிப்போன எம்*
*புறப்பாட்டு நிகழ்வு*
*முறையற்ற முனைப்பினால்*
*முனைகின்ற நகர்வு*
*விரைகின்ற பயணத்தால்*
*விளையுமா முடிவு?*
*கரை தேடும் எம்மவர்*
*காண்பார் நல் விடிவு!*

- மானியூர் ரட்ணேஸ் -

*பெயர்வுச் சுமைகளாய்*
*பெற்றபிள்ளை நானும்....*
*எமையார்தான் ஏறிடுவர்*
*உமை அம்மைபால்தர*
*நானென்ன சம்பந்தனா?*
*சுமைகளோடு நகரும் - என்*
*சுந்தரத்தாயே - உன்*
*விழி நீரில் வடியுமம்மா*
*விடிவு!*

- ர.அபிக்குட்டி -
கச்சேரியடி.

தமிழா!
அன்று நீ
அடங்கிப்போனதால்
உனக்குக் கிடைத்தது
கேடயம்!
ஆனால்
இன்று
நீயே
ஒரு கேடயமாக
நிற்கின்றாயே!

- முல்லையூரன் -

'வேர்களே' - எமக்கு
விடை தந்த பின்னர்
'விழுதுகள்' என்ன;
எங்களை மறிப்பது?
புரிகிறது.............
இவை - இங்கு
'தொங்குவது' கூட
எங்களின் இருப்பில்தான்
இருக்கிறது போலும்!?

- ரீ.ரீ.மயூரன் -
யாழ்.

*மனிதாபிமானமற்றவர்களே!*
*எம்மக்களென்ன மனிதக்கேடயங்களா?*
*மறத்தமிழரென்ன உன் உயிர்காக்கும்*
*மண் மூடைகளா?*
*எம் உறவுகள், உன் பாதுகாப்பு வேலிகளா?*
*உணர்வற்றவர்களே! எச்சரிக்கை!!*
*நாம் பொங்கியெழுந்தால்*
*பொசுங்கிப்போவீர்கள்!*

- ஓவியா -
யாழ்

கோரப்பற்களுக் கிரையதா யாகிடும்
நேரமெம் மண்ணிலே... நேற்று வந்தது.
தடையிட்டெம்மை துயரினி லாழ்த்திடும்
படையதின் பிடியிலே... பாங்கிழந்தலைகிறோம்.
தூரப் பறந்துமே தப்பிட வழியின்றி
ஈரவிழியுடன்... ஏங்கிநாம் நிற்கிறோம்!

- பொலிகையூர் சு.க.சிந்துதாசன் -

இனி உங்களுக்கு என்ன குறை?
ஐ.நா. அரிக்கன் லாம்பு
ஐ.சி.ஆர்.சி கூடார விரிப்பு
யுனிசெப் பாய், சோப்பு
அரசு தரும் அரிசி பருப்பு
இடம்பெயர் நிவாரணம்
இரண்டாயிரம் ரூபாய்
அப்போ - உங்கள் சொத்து, சுதந்திரம்
அரச கணிப்பில் பூச்சியம்தான்.

- லோ.கமலவதனி -
ஓட்டுமடம்.

இரவு,பகல்; கோடை,மாரி - இது
இயற்கையின் மாற்றம்.
இன்பம், துன்பம்; உயர்வு, தாழ்வு - இது
வாழ்க்கையின் மாற்றம்
ஓவியம் குறிப்பதோ?......

- க.கஜேந்திரன் -
உரும்பையூர்

அங்கே
அலரி மாளிகை அம்மாவும்
ஆனைக் கட்சி ஐயாவும்
பேச்சொன்று பேசினர் - எம்
இடர் களைவதற்காயென.
இடம்பெற்றதோ இங்கு
இடம்பெயர்வு
நாதியற்ற நம் தமிழர்
பொதி சுமந்து
நடை நடையாய்ச் செல்ல
கேடயமாக்கும் நாடகம்
ஆயுதத்தால் அரங்கேறியது
மனம் வெல்லும் யுத்தத்தின்
இறுதிக் காட்சி இதுதான்!

- பண்ணாகம் நாரதன்

எங்கள் தேசத்தினுள்...
இன்னுமொரு புலம்பெயர்வு
ஆயுதக் கரங்களுக்குள்ளே
அடக்கப்பட்ட தமிழினம் - இங்கு
தெருவோடும் இளைஞர்கள்
திருவிளையாடல்களை நிறுத்தி
நிமிராதவரை எமக்கிங்கே
மீண்டும் மீண்டும் வரும்...
இடப்பெயர்வு!...

- புஷ்பா -
நல்லூர்

*ஓ தமிழா! உனக்கு*
*பொருளாதாரத் தடை*
*போக்கு வரத்துத் தடை*
*கல்வியில் தடை – இன்று*
*உன் உயிர் காக்கவும் தடையா?*
*நீ ஈழத் தமிழன் அல்லடா*
*ஈனத் தமிழனடா!*

- லோகா -
சங்குவேலி.

சிலரைப் பார்த்தால்
காமம் வராது!
சிலரைப் பார்த்தால்
காதல் வராது!
இவர்களைப் போகாமல் பார்த்தால்
மோதல் வராது!
இந்த உத்தி
சரிப்பட்டு வராது!
அலைகள் வந்து
அடிக்காமல் விடாது!

- கதா -
யாழ்.பல்கலைக்கழகம்

*கட்டிய துணியுடன்*
*கையில் சிறு பொதியுடன்*
*காலத்தின் கரங்களிலே*
*கண்ணா மூச்சியாட்டம்.*

- ஜி.செல்வி -
கச்சாய்

சுமைகளை இறக்கி
கணைகளை எடுத்தால்
எதிர்க்கும் எதிரி
உனது காலடியில்!

- பிரசன்னா -
கந்தர்மடம்

# மௌனமொழி

'அநீதி ஏந்தி வந்த
துப்பாக்கி கைகளுக்குள்
துன்பத்தை அனுபவித்து
தப்பவும் வழியின்றி!
தண்ணீரற்ற மீன்களாய்...
கண்ணீரில் வாடுகிறோம்'


- கொற்றையூர் நிலாவாசன் -

எம்மவரின் இந்தச் சுமை - பலர்
எள்ளி நகைக்கின்ற நிலை - இது
எண்ணியது எட்டும் வரை!

- ஜானு -

*பாதிக்கப் பட்டவரைப் படைமறித்துக் கேடயமாய்*
*ஆதிக்கக் கரங் கொண்டு அடக்குமுறை வலைவீசிச்*
*சாதிக்கப் போவதென்ன? சாத்தானே உமக்(கு)கஞ்சும்*
*நீதிக்குக் குரல்கொடுங்கள்: நிச்சயமாய் அது வெல்லும்!*

- நயினை இராகுலன் -



கொடிது கொடிது
மானிடராய்ப் பிறப்பது
கொடிது! – அதிலும்
அகதியாய் அலைந்து – எம்
மண்ணிலே மடிவது
கொடிது!

- எம் . சுயன் -
கோண்டாவில்

மக்கள் சக்தி
மகா சக்தி!
எம்முன் - நீ
எம்மாத்திரம்?

- எஸ்.வி.மாலா -
சங்கத்தானை

ஐந்து போனால் ஆறுவரும்
மிஞ்சினால் சாவு வரும்!
ஆனால் போவது எங்கே?
வாழ்வதற்கோ வழி ஏது?
குழந்தையோ இடுப்பில்
மூட்டையோ தலையில்
பாரமோ நெஞ்சில்
பாசமோ தாய் மண்ணில்
அரசே ஏன் இந்தக் கொடுமையோ?

- யாழ்.விஜி -

*இடர்கள்*
*பல சுமந்து இன்றும்*
*நடக்கின்றோம்*
*இனி...வரும்*
*தடைகள்*
*பல தகர்த்து*
*தாயகத்தில்*
*புதிய தடம்*
*பதிப்போமென்று...!!!*

- க.நாகேஸ்வரா -

தலையோடு பொதிகளுடன்
தடுமாறும் தமிழினத்தை
நிலைமாற வைப்பதுதான் முறையோ?
சமாதானம் வேண்டுமென்று
சொல்கின்ற தமிழினத்தை
சரிக்கட்டப் பார்ப்பதுவும் சரியோ?

- கி.அ.தில்லைதாசன் -

உரிமையைக்கேட்டுப் பொதியை
உடைக்கையில் 'சாமி' சாடும் - எங்கள்
உயிரினைக் காக்கப் பார்த்தால்
உறுமியே ஆமி ஆடும் - இது
மகிந்தனின் மைந்தர் வாழும்
'மனுநெறிப்' பூமி நாடும்
மாபெரும் பூதம் - இனவாதம்!

- அளவையூர்ச் சேந்தன் -

## மௌனமொழி ~ 84




உங்கள் கவிதைக்கான எங்கள் ஓவியம் இது. இதனை வரைந்தவர் தி.ராகுலன்

இதனையோ ஜனநாயகம் என்கிறார்கள்?
சர்வாதிகார ஆட்சி என்று
சொல்வதில் சந்தேகம் உண்டா?

- சனி -
யாழ்.

அடித்தது அலை ஆரவாரமாக
பிடித்தது மனம் கிலிகொலுவாக
வெடித்தன ஷெல்கள் வெறிமழையாக
எடுத்தது பாதி உடைமைகளோடு
உடுத்தது கொண்டு உயிர்காக்க வந்தோம்
தடுத்தது எங்கும் தரைகாக்கும் படைகள்
எடுத்திதைக் கூற எழுந்தவர் கூட
தடுத்தங்கு வைத்து தாக்கவும்பட்டார் - இனிப்
படுத்தது போதும் பாய்ந்தே எழுவோம் - பறி
கொடுத்ததைப்பெறவே
கொள்கைகள் வகுப்போம்!

- ஆ.ஜென்சன் றொனால்ட் -
ஈச்சமோட்டை

மக்களை வதைக்காதே!
மாணவர்களைப் பகைக்காதே!
எங்களால்
கல்ல மட்டுமல்ல
கொல்லவும் முடியும்!
படிக்க மட்டுமல்ல
அடிக்கவும் முடியும்!
சித்தன்வழி மட்டுமல்ல
ரத்தவழி செல்லவும் முடியும்!
புத்தகம் தூக்க மட்டுமல்ல
கலாஷ்நிகோவ்வின் பிள்ளை தூக்கவும் முடியும்!
பென் பிடிக்க மட்டுமல்ல
'GUN' பிடிக்கவும் முடியும்!
'பயோ சயன்ஸ்' படிக்க மட்டுமல்ல
'மிலிரி சயன்ஸ்' படிக்கவும் முடியும்!
தேகத்துக்கு வைத்தியம் பார்க்க மட்டுமல்ல
தேசத்துக்கு வைத்தியம் பார்க்கவும் முடியும்!

- வளாகத்தான் -

| | | | |
|---|---|---|---|
| | சூ செ<br>புத வி<br>வெ சனி | | |
| சந் | இராசிச்சக்கரம் | | ராகு |
| கே | | | |
| | | | |

*மாற்றம்:- சதயம், கும்பம் இராசியில் சந்திரன் நிற்கும்.*

*உலகநாடுகளும் அயல்நாடும் புதிய அழுத்தங்களை இங்குள்ள அரசியல் தலைவர்களுக்குக் கொடுக்கும். யுத்தமேகம் புதிய ரூபமாகி மக்களை வருத்தும். இடப்பெயர்வு, பொருள்அழிவுகள், உயிர் அழிவுகள் தொடரும். மக்கள், மாணவர்கள், தொழிலாளர்கள் புதிய நடவடிக்கைகள், உரிமைப்போராட்டங்களை முன்னெடுப்பார்கள். அரசியல் பெருந்தலைவர்களுக்கு நல்லதல்ல. இந்தியா அயல்நாடுகளில் புதிய அழுத்தங்களை மறைமுகமாகச் செய்யும். மேற்கு நாடுகளின் அனுசரணையால் பொருளாதார அணுகுமுறைகள் மாறும். கிழக்கு நாடுகளின் புதிய திட்டங்களுக்கு மேற்கு நாடுகள் உதவி செய்தாலும் சில நிபந்தனைகளைச் சில நாடுகளுக்குப் போடும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.*

# இந்த வார இராசி பலன்

## 29-04-2000 இலிருந்து 05-05-2000 வரை

## சோதிட சஞ்சீவி

## மேடம்

மனிதர்களில் ஒரு சிலரைத்தவிர தாமகச் சென்று உதவும் மனப்போக்கு அதிகம் பேருக்கு இருக்காது - உங்களைத் தவிர. ஓடிஓடி உதவும் உங்களைச் சிலர் வீண்பழி சுமத்துவார்கள். தொழில் ஸ்தானத்தில் கலகம் பிறக்க நியாயம் தேடுவீர்கள். குடும்பத்தில் சகோதரருக்காக ஓடியாடித்திரிய வேண்டிவரும். எதிர்பாலாருடன் போட்டிகள் ஏற்படலாம். பொருளில் போட்டி ஒன்று வரும். வீடு, நிலம் வாகனயோகம் உடையவராகவும் இருப்பீர். இடமாற்றங்களை இயன்றளவு தவிர்க்க வேண்டும். அல்லது பொருள் இழப்பு வரலாம். தொழில் ஸ்தானத்தில் புதிய வரவுகளும், மேலதிகாரிகளின் ஆதரவான பேச்சும் நன்மை தரும். தாயார் அல்லது தாய்வழியினருடன் வாக்குக்கலகம் வரலாம். அடிக்கடி மனப்பதற்றம், மனமாற்றம் எனத்தடுமாறியபடி இருப்பீர்கள். கண்ணிவு, தலையில் வருத்தம், கைகால் தாக்கம், உஷ்ணபீடைகள், வாய்வுத்தொல்லை என்பன கொடுக்கும். தூரதேசச் செய்திகள் மகிழ்ச்சி தரும். செய்தித்துறை நீதித்துறை, கோவில் வேலை, பண்ணைவேலை, தோட்டவேலை, மருந்துத்துறை, நகைவேலை, எண்ணெய், இரும்பு வேலை, தரகுத்தொழில் போன்ற துறையினர்கள் அதிக நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:- சனி,திங்கள், வெள்ளி.*

## இடபம்

சிலர் பதவிகளுக்காக ஓடி ஓடி தமக்கு வாக்குகள் பெறுவதற்காக மக்கள் செல்வாக்கை எடுப்பார்கள். செல்வாக்கை சுயநலத்திற்காகப் பயன்படுத்தும் பொழுது அகப்பட்டுக் கொள்ளுகின்றார்கள். சுயநலத்தில் பொதுநலமும், பொதுநலத்தில் சுயநலமும் கலந்துதான் வாழ்க்கை ஓடுகின்றது. இதையெல்லாம் பெரிதாக நீங்கள் எண்ணாதவாறு தொழில் ஸ்தானத்தில் செயற்பட்டபடி இருப்பீர்கள். அடிக்கடி வீண்பிரச்சனைகள் ஏற்பட்டு மனம் புழுங்குவீர்கள். தானதர்மம் அல்லது திருப்பணிகள் செய்வீர்கள். ஆஸ்பத்திரிக்கு, மருந்துக்கு பொருள் செலவுகள் செய்வீர்கள். தூரதேசத்திலிருந்து செய்திகள் வரும். போக்குவரத்தில் அவதானமாக இருக்கவும் விழுந்து காயங்கள் வரப்பலன் உண்டு. பொருள் செலவுகள் அல்லது பொருள் இழப்பு, களவு போகலாம். சகோதரங்களுக்கு நஷ்டங்கள் ஏற்படும். எதிர்பாலரின் எதிர்ப்பு வரும். எதற்கும் ஒரு சோம்பல் தன்மை மேலிட்டபடி இருக்கும். படபடப்பு, சலவருத்தம், வாய்வுத்தொல்லை கொடுக்கும். மருந்துத்துறை, ரீவி, கலைத்துறை, அச்சு, பத்திரிகைத்துறை போன்றவற்றுடன் தொடர்புடையவர்கள் இக்காலத்தில் அதிக நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:- சனி,வெள்ளி.*

## மிதுனம்

பலநாள் ஓடி ஓடி உழைக்கும் பணத்தை ஒரு நாள் பார்ட்டிகள் (விருந்துகள்) வைத்துச் செலவுசெய்வதில் ஒரு சிலருக்கு மனத்திருப்தி ஏற்படுவது இயற்கையானது. இதையெல்லாம் பெரிய விஷயமாகச் சிந்திக்கமாட்டீர்கள். தொழில் ஸ்தானத்தில் கட்டுமீறிய வேகத்தாலும் சிந்தனையாலும் சாமர்த்தியமாகப் பொருள் தேடுவீர்கள். யாரையும் மடக்கிப்பிடித்து ஏதாவது உதவி கேட்கலாமா என அடிக்கடி சிந்திப்பீர்கள். சகோதரர்களுக்காக அடிக்கடி பிரயாணம் அல்லது ஓடியாடித்திரிவீர்கள். தந்தை வழியினருடன் பிரச்சினைகள் வந்து மனம் வருந்துவீர்கள். தர்மப் பெரியவர்களின் ஆசிர்வாதம் உதவிகள் கேளாமல் வந்து சேரும். எதிர்பாலருடன் மனக்கருத்து முரண்பாடு ஏற்படும். நரம்புச்சோர்வு, மலச்சிக்கல் உஷ்ணபீடைகள், வாத விறைப்புக்கள் வரும். செய்தித்துறை, எழுத்துத்துறை, குருத்துறை, கலைத்துறை சம்பந்தப்பட்டவர்கள் பத்திரிகை, பேப்பர், சாய்ப்புச்சாமான் விற்பனையாளர்கள் பலவித நன்மைகரமான மாற்றங்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:- சனி.*

## கடகம்:-

தன் அன்புக்குப் பாத்திரமானவர் - தமக்கு ஆறுதல் சொல்ல வராவிடில் சிலருக்குக் கோபம் வருவதில் நியாயம் உண்டு. ஆனால் ஏன் வருகிறார்கள் இல்லை என்பதை ஆராய்வதில் பொறுமை இல்லாமல் இருக்கின்றது. காரணம் இல்லாமல் காரியம் நடக்குமா ? தொழில் ஸ்தானத்தில் அழகை எதிர்பார்ப்பீர்களோ அல்லது பணத்தை எதிர்பார்ப்பீர்களோ என்பதைச் சிலர் ஆராய்ச்சி செய்வார்கள். எதிர்பாலருக்கு அதிக அக்கறையுடன் உதவி செய்து வருவீர்கள். குடும்பத்தில் நன்மைகள் உண்டு. பெரியவர்கள் வருவார்கள். அரசாங்க உதவிகள் கிடைக்கும். எந்தச் சவால்களையும் எதிர் கொண்டபடி இருப்பீர்கள். கரட், பீற்றூட், கீரைவகைகளை உணவில் சேர்த்து வாருங்கள். வடமேற்கு திசையிலிருந்து துக்ககரமான செய்திகள் வரலாம். படபடப்பு,முதுகுவலி, நாரிநோ, கைகால் விறைப்பு, வாய்வுத்தொல்லை, சலவருத்தம் என்பன கொடுக்கலாம். நீதித்துறை, அரசியல்துறை, வியாபாரம், புடைவைத் தொழில், மருந்துத்துறை, நகைத்துறை போன்ற தொழில் தொடர்பானவர்கள் அதிக இலாபங்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:- சனி.*

## மகாதேவா ஜோதிடம்

## சிங்கம்

உண்மையான உழைப்புக்குத் தகுந்த பலனை அடையும் காலமாகும். மனக்கவலைகளை விட்டு மதிநுட்பத்துடன் நடவுங்கள். தொழில் ஸ்தானத்தில் சில பிரச்சினைகள் வருவது இயற்கைதான். ஆனால் அதற்காக எவருக்கும் பாதிப்பு வரக்கூடாது என அடிக்கடி கருதுவீர்கள். நீங்கள் எதிர்பார்த்த காரியம் ஒன்று வெற்றி தரும். தொழில் இடத்தில் நன்மைகளும் இலாபங்களும் கிடைக்கும். சகோதரத்தாலும் நண்பராலும் நன்மைகள் ஏற்படும். தூர இடங்களில் இருந்து நல்ல செய்திகள் வரும். சமூதாயத்தில் வேஷம் போடுபவர்களைஉங்களுக்குப் பிடிக்காதே. அதற்காக பொறுமையுடன் நடந்து கொள்ளுங்கள். ஒரு சிறு மாறுதல்கள் ஏற்படும். உஷ்ண பீடைகள், வாய்வுத்தொல்லை, மனக்குழப்பம், கைகால் பிடிப்பு என்பன வரும். நகைத்துறை, மருந்துத்துறை, குருத்துறை, விவசாயத்துறை, தொழிநுட்பத்துறை போன்ற துறைகளுடன் தொடர்புடையவர்கள் இக்காலத்தில் அதிக மாற்றங்களும், நன்மைகளும் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:- சனி.*

## கன்னி

தர்மத்தைப் போதிக்க வேண்டியவர்கள் யுத்தத்தை ஆதரிக்கிறார்கள். யுத்தத்தை விரும்பாத மக்கள் தர்மத்தை நேசிக்கிறார்கள். உலகத்திற்கு இது வெளிச்ச வீடாகி விட்டது உண்மை போல. உங்கள் தொழிலிலும் பல நன்மைகள் வெளிச்சத்திற்கு வரும். காசு பணத்தைப் பெறப் போராடுவீர்கள். குடும்பத்தில் கலகம் வரும். பிறருக்கு உதவிகள் செய்து கொடுப்பீர்கள். சகோதரங்களின் நன்மைக்காக சுபப் பேச்சுக்கள் செய்வீர்கள். உறவினர் ஒருவரின் நோய் மனக்கவலையைத் தர இடம் உண்டு. சிலருக்கு தூர இடங்களிலிருந்து திடீர் பணவரவு அல்லது உதவிகள் வரலாம். உரசல்காயங்கள், சளித்தொல்லை, நாரிநோ, படபடப்பு, அடிக்கடி சத்தங்களால் பயம் என்பன ஏற்பட இடமுண்டு. அட்டமத்துச்சனி விட்டுப்பிரியாத நிலை. வடக்குத்திசையில் கலகமும், கிழக்குத்திசையிலிருந்து நன்மைகளும் கொடுக்கும். வாகனத்துறை, பத்திரிகைத்துறை, கமிஷன் வேலைகள், குருத்துறை, தபால்தந்தித்துறை, கலைத்துறை சம்பந்தமானவர்களுக்கு மாற்றங்களும் நன்மைகளும் கிடைக்கும் காலமாகும். எந்த விசயங்களையும், 03-08-2000 வரையும் சிரித்துச் சிரித்து சமாளியுங்கள். அல்லது சனீஸ்வரன் உங்களைப் பார்த்து மற்றவர்கள் சிரிக்கச் செய்திடுவான்.

*அதிர்ஷ்டநாள்:- சனி,திங்கள், வெள்ளி.*

## துலாம்

மண்ணை நேசிப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கும் பலரிடம் இம்மண்ணில் ஊறிய சாதிப் பேதத்தைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அதனால் வேதனைதான் சமூகத்தில் மீறி நிக்கின்றது எனச் சிந்திக்கிறீர்களா? பொதுச் சேவைகளில், தொழில்பீடங்களில் இப்பிரச்சினைகள் பல பின் விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பது உண்மைதான். எனவே சமாதானச் சிந்தனைகளைப் பரப்பும் உங்களைப் போன்றவர்கள் பொறுமையாகப் பிறருக்கு அறிவுறுத்துவதில் பல நன்மைகள் ஏற்படும். குடும்பத்தில் எதிர்ப்பாலாருடன் சற்று சடுபுடு என இருப்பீர்கள். திடீர் கோபம் வரும். அதனால் சிலரை ஏசிவிட்டு வருந்துவீர்கள். புதியவர்கள் நேசம், புதிய இடம் சிலரை அணுகும். படபடப்பு, கைகால் விறைப்பு, குடல் வருத்தம், வாய்வு என வருத்தலாம். போக்குவரத்துத்துறை, குருத்துறை, ஆராய்ச்சித் துறை, அரசியல்துறை, சங்கீதத்துறை போன்றவற்றுடன் தொடர்புடையவர்களுக்கு அதிக மாற்றங்களும் இலாபங்களும் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்: சனி,திங்கள், வெள்ளி.*

## விருட்சிகம்

சிலர் பதவி எடுப்பதற்காகப் படாதபாடு படுகிறார்கள். இது ஏன்? சுயநலமா? பொதுநலமா? அல்லது சேவை மனப்பான்மையா? என நீங்கள் கண்டறியுங்கள். உயர் பதவிகளில் நேர்மையுடன் இருப்பவர்களால்தான் நாட்டிற்கு நல்லதைச் செய்யமுடியும். தொழில் ஸ்தானத்திலும் நீங்கள் நேர்மை, செயற்திறனுடனிருந்து பாடுபடுவீர்கள். பிறரின் நன்மைக்காகத் தொடர்ந்து பாடுபடுவீர்கள். பெரியவர்கள், தெய்வபக்தி கொண்டவர்களுடன் அடிக்கடி தொடர்புகள் ஏற்படும். புதிய பொறுப்பு, மாற்றங்களைக் கொடுக்கும். சகோதரர்களுக்கு நல்லதல்ல. பொருள் இழப்புக்கள் கொடுக்கலாம். தூரதேசத்தில் இருந்து செய்திகள் வரலாம். வயிற்றில் நோ, படபடப்பு, வாய்வுத்தொல்லை, தொண்டையில் சளிக்கட்டு, குடல்வருத்தங்கள் என்பன கொடுக்கலாம். தொழில்நுட்பத்துறை, விவசாயத்துறை, மருத்துவத்துறை, ஆராச்சித்துறை என்பவற்றுடன் தொடர்பானவர்களுக்கு இந்த காலத்தில் அதிக மாற்றங்கள் வர வாய்ப்பு உண்டு. பொருள் வரவும் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்:- திங்கள்,வெள்ளி.*

## தனுசு

கோபத்தால் படபடத்துப் பேசிக்கொண்டாலும் மற்றவர்களுக்கு தீங்கு செய்யாது விலகி நடப்பவரே மனிதர்களாவர். எல்லோரும் வாழ வேண்டும். இந்த உலகம் நமக்கு மட்டுமா? வீட்டில் வசிக்கும் நாய்க்கும், எலிக்கும், பூனைகளுக்கும் இதுதான் வீடு என்பதை மறக்க மாட்டீர்கள். அவைகளும் வாழத்தான் இவ்வுலகிற்கு வந்துள்ளன. எனவே நான் எல்லோருக்கும் சமநீதி வழங்கப் பாடுபடவேண்டும் எனச் சிந்தித்துத் தொழில் ஸ்தானத்தில் செயற்படுவீர்கள். நண்பர்கள் உங்களால் அதிகநன்மை அடைவார்கள். மறைமுக எதிர்ப்புக்கள் உங்களைப் பாதிக்கா. பெற்றவருக்கும், உற்றவர்களுக்கும் பொருள் உதவிகள் செய்ய யோசிப்பீர்கள். யாத்திரைக்கு சில திட்டங்களை உருவாக்குவீர்கள். வயிறுக்குழப்பம், நாரிநோ, வாய்வு, கைகால் பிடிப்பு, களைப்பு என்பன வரும். நிதித்துறை, வியாபாரத்துறை, ஹோட்டல்துறை, போக்குவரத்துத்துறை எண்ணெய்துறை போன்றவை தொடர்பானவர்கள் அதிக நன்மை அடைவார்கள்.

*அதிஷ்டநாள்:- ஞாயிறு,திங்கள், வெள்ளி.*

## மகரம்

பட்டத்தால், அதிகாரத்தால், பணத்தால் கண்டபடி சாதனைகளை எட்டிவிட முடியாது. பண்பால், அன்பால், சேவையால் பல சாதனைகளை பல பெரியார்கள் சாதிக்கிறார்கள். ஆனால் சிலர் ஆயுதத்தால், நேர்மையற்ற முறையில் சாதிக்க முனைகிறார்கள். இது அழிவுகளைத்தான் தரும் என்பதை நீங்கள் மறுக்க மாட்டீர்கள். நியாயத்திற்காக எதையும் செய்யலாம் என்று எண்ணுகிறீர்கள் போலும். ஆயினும் தொழில் ஸ்தானத்தில் நடக்கும் தில்லுமுல்லுகளைக் கண்டும் காணாமல் இருக்கிறீர்கள்? அது ஏன்? சொல்வாக்கு பல செல்வாக்குகளைத் தரும். வருமானம் அதிகரிக்க வழி பிறக்கும். சக நண்பர்கள், ஊழியர்கள் உதவிகள் செய்வார்கள். நரம்புச் சோர்வு, நாரிவலி, மலசல உபாதைகள், நெஞ்செரிப்பு என்பன வரலாம். கலைத்துறை, செய்தித்துறை, விவசாயத்துறை, சட்டம், பாதுகாப்புத்துறை, மருந்துத்துறை சம்பந்தப்பட்டவர்களுக்கு மாற்றங்களும் நன்மைகளும் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்:- சனி,ஞாயிறு, திங்கள்,வெள்ளி.*

## கும்பம்

எமது மண்ணை விட்டு ஏன் அநேகர் வெளிநாடுகளுக்கு போகவில்லை? இங்குவாழும் சுகம் இயற்கையின் செழிப்பு எங்கு கிடைக்கும்? தண்ணீர் பெருங் கொடையாகும். வெளிநாடுகளில் காசு கொடுத்து தேடுவதை நாம் இங்கு இலவசமாக இயற்கைமாதாவிடமிருந்து அல்லவா பெறுகின்றோம்? ஆனால் யுத்தம் ஒன்றினால்தான் எல்லோரும் வேதனை அடைந்தபடி இருக்கின்றார்கள். இது உங்களுக்கும் வேதனைதான். இதை யோசித்துக் கொண்டிருக்காமல் தொழிலில் ஊக்கமாகச் செயற்படுங்கள். குடும்பப்பற்று அதிகமான மாற்றங்களைத் தரும். இடாம்பீகப் பொருள்களுக்கு, புடைவைகளுக்கு அதிக செலவுகள் செய்வீர்கள். நரம்புவருத்தம், சமியாக்குணம், கைகால் விறைப்பு, அடிக்கடி களைப்பு என்பன இருக்கும். நகை, புடைவைத்துறை, மருந்துத்துறை, கலைத்துறை, பிரயாணத்துறை, விவசாயத்துறை போன்ற துறையினர்களுக்கு மாற்றங்களும், இலாபங்களும் கிடைக்கும்.

*அதிஷ்டநாள்:- சனி,ஞாயிறு, திங்கள்.*

## மீனம்

மனிதர்களின் சிந்தனைகளும் தேவைகளும் ஒரு எல்லை அல்லது ஒரு குறிப்பிட்ட வட்ட அலகுக்குள் தான் சுற்றிச் சுற்றி வருகின்றன. சிலர் மட்டும்தான் விதிவிலக்காக இருக்கின்றார்கள். உச்சத்தில் வாழ்ந்தவர் விழுந்து எழும்பாமல் போகமாட்டார். இது இயற்கையின், சிருஷ்டியின் இரகசியமாகும். உங்கள் தொடர் ஊக்கத்தால் தொழிலில் சில அனுகூலங்கள் வரும். ஆயினும் கைக்கு வந்தது வாய்க்குப் போக முன்பு தவறிவிழுந்து விடவும் கூடும். ஏழரைச்சனீஸ்வரனுக்கு வேண்டுதல் செய்யவும். கொடுக்கல் வாங்கலால் ஏமாற்றங்கள் ஏற்படலாம். தென்திசையிலிருந்து உறவினர்கள் செய்திகள் அனுப்புவார்கள். சனி, வாய்வு, வயிற்றுநோ, கிருமித்தாக்கம் என்பன கொடுக்கலாம். செய்தித்துறை, வியாபாரத்துறை, கடல்துறை, கமிஷன்வேலைகள் என்பனவற்றுடன தொடர்பானவர்கள் அதிக இலாபங்களை அடைவார்கள். பொருள் இழப்புப் பற்றி அடிக்கடி கவலைப்படுவீர்கள் 3.8.2000 வரையும் சனீஸ்வரன் தாக்கம். அதுவன்றியும் ஆலயவாசலில் ஏழைகளுக்குத் தானதர்மம் செய்யுங்கள்.

*அதிஷ்டநாள்:- சனி,ஞாயிறு, திங்கள்.*

## முயற்சி

சும்மா இருந்தால் சோறாகாது
சோம்பல் மிகவும் கெடுதி.
தூக்கம் விடுத்திங் காக்கம் சேர்த்தால்
சுகமாம் இதுவே நியதி.

சோம்பித் திரிவார் சோம்பித் திரிவார்
சுகமே தேனும் அடையார்
சோரா திருப்பார் தாமே உலகச்
சுகபோ கங்கள் உடையார்!

அயரா திருப்பார் உயராதிருப்பார்
அநும் உலகில் உண்டா?
ஆக்கம் மனிதர் தூக்கம் தன்னில்
ஆர்க்கும் சேர்ந்த துண்டா?

தெய்வம் தாரா தெனினும், முயற்சி
செய்தால் கூலி சேரும்
தெய்வப் புலவன் திருமொழி பொய்யா
சிந்தனை செய்து பாரும்!

'முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்'
முயல்வோம் வாரும் வாரும்
மூலைக் குள்ளே முடங்கிக் கிடந்தால்
முதலா கையில் சேரும்?

கடின உழைப்பால் தானே செல்வம்
கையில் சேரும் தம்பி
கட்டிய பெண்டிர் பிள்ளைகள் வாழ்வின்
கையைத் தானே நம்பி!

துள்ளி எழடா தோழா நல்ல
தொழில்கள் செய்வோம் வாடா
பள்ளி அறையே சொர்க்கம் என்றால்
பாழ்படும் வீடு, மூடா!

*- வ. சின்னப்பா -*
*தனங்களப்பு*

# மீண்டும் எய்ட்ஸ்.....

## அங்கம் 1

இன்று எய்ட்ஸ் பற்றிக் கேள்விப்படாதோரே இல்லை எனலாம். மிகவிரைவில் உலகசனத்தொகையில் கணிசமான பங்கினை இது காவுகொள்ளும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. எய்ட்ஸைத் தடுப்பதற்கு விஞ்ஞானிகளும் உலக நாடுகளும் பெருமுயற்சி எடுத்து வரும் போதிலும் மனிதர்களுடைய அசண்டை, ஆசைகள், ஒத்துழையாமை போன்ற பல காரணிகளால் கட்டுப்பாடின்றி உலகின் பல்வேறுபட்ட பிரதேசங்களிலும் இது தனது கோரத்தைக் காட்டி நிற்கின்றது.

யாழ்ப்பாணத்தையும் இது அடிக்கடி எட்டிப்பார்க்கத் தவறுவதில்லை. இந்த நிலைமையில் எய்ட்ஸ் பற்றி வெறுமனே செய்தியாகவோ பழிப்பாகவோ மட்டும் எடுத்துக் கொள்ளாது ஆழமாக அதன் யதார்த்தங்கள் பற்றிச் சிந்தித்தால் மட்டுமே அதன் பாதிப்புக்களிலிருந்து சமுதாயத்தை ஓரளவுக்கேனும் விடுவிக்க இயலும். எய்ட்ஸ் பற்றிய அறிவுரைகள் புரியத்தக்கதும் சாத்தியமானதுமான வழிகளில் மக்கள் மனங்களில் புகுத்தப்பட்டால் அன்றி வெறும் பண்பாட்டுப் போதனைகள் மூலம் இதன் பரம்பலைத் தடுத்திடலாம் என்பது இயலாத காரியமே.

அறிவியலில் மேம்பட்டும் பொருளாதாரத்தில் மேல்நிலையிலும் உள்ள சமுதாயப் பிரதேசங்களில் இது தனது கோரத்தைக் காட்டி நின்றாலும் அங்கெல்லாம் எச்சரிக்கையாகவும், பாதுகாப்பாகவும் தம்மைப் பேணக்கூடிய வலுவும், வசதிகளும் மக்களிடம் இருக்கக்கூடும். ஆரம்பத்தில் வசதியான அமெரிக்க, ஐரோப்பிய பிரதேசங்களிலும் அதே வேளையில் பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கிய ஆபிரிக்க நாடுகளிலும் எய்ட்ஸ் தென்பட்டது. இருசாராரையுமே இது அதிகம் பாதித்தாலும் நோய் பரவும் விகிதம் ஆபிரிக்கப் பிரதேசங்களில் மோசமாகவே இருந்தது. இதற்குக் காரணம் அறிவியல் ரீதியாக எய்ட்ஸ் பற்றி விடுக்கப்படும் செய்திகளும், எச்சரிக்கையும் அங்குள்ள பாமரமக்களை சென்றடையாமையே ஆகும்.

மேலும் பண்பாடு பற்றி அதிகம் பீற்றப்படும் பிரதேசங்களிலும் இது பரவும் ஆபத்து மிகவும் அதிகமாகவே இருக்கக்கூடும் என அஞ்சப்படுகின்றது. இதற்கு உதாரணமாக இந்தியாவைக் குறிப்பிடலாம். அதற்குக் காரணம் அத்தகைய பிரதேசங்களில் பாலியல் பற்றிய மக்களின் அறிவு மட்டம் மூடநம்பிக்கைகளில் தங்கியிருப்பதும், அவர்களின் நடவடிக்கைகள் சமுதாயத்துக்குப் பயந்த வகையில் களவாகவும் இரகசியமாகவும் இருப்பதும் ஆகும். அவர்களுக்குச் சரியான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு நோய் பரவாமல் தடுக்கப்பட வேண்டியதே முதல்நிலை ஆகும்.

இன்றேல் பண்பாட்டுப் போர்வையால் போர்த்தப்பட்டிருக்கும் ஒரு சமுதாயத்திநுள்ளே அரவமின்றிப் புகுந்து விளையாடும் எய்ட்ஸ் பத்து ஆண்டுகள் மௌனமாக இருந்து வெளிப்படும்போது அந்தப் போர்வையையும் கிழித்தெறிவதுடன் பெருமளவு உயிர்களையும் காவுகொண்டு அநாதைகளையும் விட்டுச்செல்லும்.

பாலியல் கல்வி அவசியமானென்ற கேள்விக்கு பண்பாட்டுக் கோணத்தில் இருந்து பார்க்கும் போது எமது பாரம்பரியத்தில் விடை கூறுவது கடினமாகவே இருக்கும். ஆனால் 'பிச்சை வேண்டாம் நாயைப் பிடி' என்ற நிலைமை. எய்ட்ஸ் இடையே புகுந்து அக்கல்வியினதும், அறிவினதும் அவசியத்தை வலியுறுத்தி நிற்கின்றது. வெறுமனே போதனைகளோ, அறிவியல் கட்டுரைகளோ, புள்ளிவிவரப்பட்டியல்களோ, செய்தி ஊடகங்கள் கூறும் கருத்துக்களோ இப்பிரச்சினையை சமாளிக்கப் போதியதாக இருப்பதில்லை. சமுதாயத்தின் கீழ் மட்டம்வரை இச்செய்திகள் விளக்கமாகச் சென்றடைதல் வேண்டும்.

முன்னேறாத பல பிரதேசங்களில் இத்தகைய பிரச்சாரங்கள் மக்களைச் சென்றடைவது இல்லை. அதேபோல பாலியல் தொடர்பான விவரங்களை சரிவர விளங்கிக் கொள்ளப் போதிய பக்குவம் எட்டப்படும் முன்பே நடவடிக்கைகளில் இறங்கும் இளவயதினரும், விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்படும் சிறார்களும் இத்தகைய அறிவைப் பெற்றிருத்தல் இல்லை.

### காரணிகள்

எய்ட்ஸ் என்பது (AIDS) Acquired Immune Deficiency Syndrome என்பதன் சுருக்கம் ஆகும். நோயின் பெயரிலேயே அதற்குரிய குணங்குறிகள் மறைந்து கிடக்கின்றன. இதன் கருத்து Acquired- தேடிப் பெற்ற; Immune - நோய் எதிர்ப்புச் சக்தி; Deficiency - குறைபாட்டு; Syndrome - அறிகுறிகள் கொண்ட நோய் எனக் கருத்துக் கொள்ளலாம். இப்பெயருக்குரிய விளக்கம் ஆரம்பகாலங்களில் இந்நோயை தமது பழக்க வழக்கத்தால் தேடிப் பெற்றுக் கொண்டவர்களுக்குப் பொருந்தும் என்றே கூறலாம். ஆனால் இன்றோ உலகெங்கும் ஒரு பாவமும் அறியாத சுமார் ஒரு கோடி சிறுவர்கள் கூட இதனால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இத்தொகை மேலும் பல மடங்கு அதிகரிக்கலாம். இவர்கள் இந்நோயை தேடிப் பெறாது தமது தலைவிதியால் வாங்கியவர்களே.

எய்ட்ஸ் நோய்க்கான வைரசு HIV எனப்படும் Human Immunodeficiency Virus ஆகும். இதன் இயல்புகள் மிகவும் பாரதூரமானவை. எனவேதான் இது மனித குலத்தையே வேரறுக்கும் வகையில் செயற்பட முனைகின்றது. HIV-I, HIV-2 என புதிய பரிமாணங்களில் புதிய இயல்புகளுடன் இது விரிவுபட்டுச் செல்வது விஞ்ஞான உலகிற்கு பெரும்சவாலாக அமைகின்றது.

ஒருகோணத்தில் பார்க்கும்போது மிகவும் வலு அற்றதாக இருக்கும் இந்த வைரசு பிறிதோர் கோணத்தில் பேரழிவை தரவல்லதாக அமைகின்றது. ஏனெனில் மனிதனின் உடலுக்கு வெளியே நின்று தாக்குப்பிடிக்கும் வல்லமை இதற்குச் சற்றேனும் கிடையாது. எனவே மனித உடலோடு பிறிதோர் மனித உடல் தொடர்பு கொள்ளும் சந்தர்ப்பங்களுக்காக இதன் பரம்பல் காத்திருக்க வேண்டியுள்ளது. காற்றினாலோ நீரினாலோ நுளம்புகளினாலோ இதர பொது ஊடகங்களினாலோ காவப்படும்போது கணமேனும் இந்த வைரசால் நின்று பிடிப்பது இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

இதன் பலம் என்னவென்றால் மனிதனை இது பற்றிக் கொண்டதும் சுமார் பத்து ஆண்டுகள் பேசாமலேயே இருந்துவிடக்கூடிய தன்மைதான். எனவே அக்காலப் பகுதியில் எந்தவித நோய்க் குணங்குறிகளும் இல்லாத நிலையில் எவரும் இரத்தப் பரிசோதனை செய்யவேண்டிய அவசியம் எழுவதில்லை. அத்துடன் இப்பத்து வருடங்களில் ஒருவர் தம்மிடம் உள்ள வைரசை எத்தனையோ பேருக்குக் கொடுத்து விடுகிறார். எனவே எய்ட்ஸ் வந்து அதிரடி அடிக்கும்போது நிலமை முற்றிவிடுகிறது.

எனினும் மேற்கத்திய நாடுகளில் முன்மாதிரியாகப் பலரும் தாமாகவே முன்வந்து மேற்படி பரிசோதனையை மேற்கொண்டு தமது நிலைப்பாட்டை திறந்த மனதுடன் உறுதி செய்து கொள்கிறார்கள். ஆசியநாடுகளில் இத்தகைய மனப்பாங்கு மக்களிடம் அமைய இன்னும் பல காலம் எடுக்கும். அதற்கிடையில் பின்தங்கிய நாடுகளில் எய்ட்ஸின் கோரம் மேற்கத்திய நாடுகளைவிட மோசமாகத் தாண்டவமாடும் என்றே ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

தனக்கு எய்ட்ஸ் பரிசோதனை செய்யவேண்டும் என்று தானாக முன்வந்து ஆய்வுகூட வாசலில் நிற்கும் ஒருவரை எமது சமுதாயம் எப்படிப் பார்க்கும்? அதற்குப் பயந்து பண்பாட்டுப் போர்வையால் மூடி வைக்கத்தக்க நோயா இது?

எனவேதான் எய்ட்ஸ் பற்றிய தெளிவான அறிவு சமுதாயத்தின் சகல பிரிவினருக்கும், விசேடமாக வாழத்துடிக்கும் இளம் வயதினருக்கும் மிகவும் அவசியமாகிறது. தமது பாலியல் நடவடிக்கைகளில் மட்டுமன்றி நாளாந்த வாழ்வில் சந்திக்கும் இதர சந்தர்ப்பங்களிலும் எவ்வாறு எச்சரிக்கையுடன் நடக்க வேண்டும் என்பதையும் அனைவரும் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகிறது.

முதன்முதலில் 1981இல் இதன் குணங்குறிகள் அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும், ஆபிரிக்காவிலும் சமகாலத்தில் தென்பட்டன என்றால் இதன் தொற்று 1970 களிலேயே தொடங்கியிருக்க வேண்டும் என ஊகிக்கலாம். எனவே இடைப்பட்ட இப்பத்து வருடங்கள் பலருக்கும் நோய்வாய்ப்பைப் பரப்பி இருக்கும். ஆபிரிக்கப் பிரதேசத்தில் குரங்கு இனங்களில் இந்த வைரசு பொதுவாகக் காணப்படுவது பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது. அவை குரங்குகளில் இருந்து மனிதனுக்குத் தாவியமைக்கு அவன் அவற்றோடு கொண்ட உறவே காரணமென்று கருதப்படுகின்றது. எனினும் இதற்கான தெளிவான ஆதாரங்களைப் பெறமுடியவில்லை. இத்தகைய இழிவான செயலின் சாபக்கேடு இன்று முழு மனித இனத்தையுமே சிக்கலில் மாட்டி விட்டிருக்கின்றது.

மனிதனுடைய மரபணு இயல்பில் தொண்ணூற்றெட்டு விகிதத்தை ஒத்த சிம்பன்சி இன குரங்குகளிலும் இந்த வைரசு காணப்படுகிறது. இவற்றை உணவுக்காக மனிதன் வேட்டையாடி இருக்கிறான். இவை சில சந்தர்ப்பங்களில் மனிதனைத் தாக்குவதும் உண்டு. இச்சந்தர்ப்பங்களில் குரங்கின் உடல் திரவங்கள் மனிதனோடு சங்கமிக்க வாய்ப்புக்கள் இருக்கின்றன. இன்று எய்ட்ஸிற்கான தடுப்பு மருந்தைக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் இக்குரங்கினங்களும் பயன்படுத்தப்படுகின்றன.

சாதாரணமாக மனிதனின் சூழலில் காணப்படும் வளர்ப்பு விலங்கினங்களில் பல வைரசுக்கள் காணப்படுகின்றன. அவை அந்த விலங்குகளில் பாதிப்பை ஏற்படுத்துவனவாகவோ அல்லது அவற்றிற்கு எத்தீங்கினையும் தராதவையாகவோ இருக்கலாம். ஆனால் இவ்வைரசுக்கள் மனிதனின் உடலில் தொற்றிக் கொள்ளும்போது பாரதூரமான விளைவுகளைத் தரக்கூடும். தமது பாலியல் இச்சைகளைக்கூட விலங்குகளோடு பரிமாறும் வர்க்கத்தினர் இன்னும் என்னென்ன வைரசுக்களை மனிதர்களுக்குத் தரக் காத்திருக்கிறார்களோ தெரியவில்லை.

HIV தொற்றியதும் எய்ட்ஸ் நோய் ஏற்படுவதில்லை என்ற நிலைமைதான் நோய்ப்பரம்பலை அதிகரிக்கக் காரணமாய் அமைகின்றது. தொற்றிய எச்.ஐ.வியின் தாக்கத்தினால் நோய் காணும்போது உடல் முழுவதும் HIV ஆல் சல்லடை போடப்பட்டு விடும். எனவே எய்ட்ஸ் நோய் கண்ட பின் வைத்தியம் செய்வதென்பது கண்கெட்ட பின்னே சூரிய நமஸ்காரம் பண்ணுவது போன்றதுதான்.

### நோய்ப் பரம்பல்

எய்ட்ஸ் நோயின் பரம்பல் எனப்படுவது உண்மையிலேயே HIV வைரசை ஒருவர் இன்னொருவருக்கு கொடுப்பதே ஆகும். தவிர எய்ட்ஸ் நோய் கண்ட ஒருவர் அந்த நோயை மற்றவருக்கு இலகுவாகக் கொடுக்க முடியாது. அவர் தம்மிடம் உள்ள HIV வைரசை எய்ட்ஸ் நோய் கண்ட பின் மற்றவருக்கு இலகுவாகக் கொடுக்க முடியுமெனில் ஏற்கனவே பலருக்கு உடலியல் தவிர்ந்த ஏனைய ஊடகங்களின் மூலம் கொடுத்து இருக்கும் வாய்ப்புக்கள் எவ்வளவோ ஏராளமாக இருந்திருக்கும்.

எனவே நோய் கண்டபின் நோயாளியைக் கைவிட்டு வெருண்டு ஓடுவதில் அர்த்தம் ஏதும் இருக்க முடியாது. எய்ட்ஸ் நோய் கண்ட ஒருவருடன் உடல் திரவங்கள் சங்கமிக்காத வகையில் பழகும்வரை அடுத்தவருக்கு நோய் வந்துவிடும் என்று அஞ்சவேண்டிய அவசியம் இல்லை. நோய் கண்டவரின் படுக்கை விரிப்புக்களையோ, தலையணையையோ, பாத்திரங்களையோ பகிருவதால் தொற்று ஏற்பட்டுவிடப் போவதில்லை. மூச்சுக் காற்று படுவதனால் கூட நோய் பரவிவிடமாட்டாது.

நீண்டகாலம் களவாக நெருங்கி உறவாடுபவர்கள் நோயைக் கண்டதும் அம்போ என்று கைவிட்டு விடுகிறார்கள். மெல்லவும் முடியாமல் சொல்லவும் முடியாமல் தாமும் ஏங்கிச் சாகிறார்கள். ஏனோ இந்த ஆப்பிழுத்த குரங்கின் நிலமை?

நோயாளியின் சவர அலகுகளையோ, ஊசிகளையோ பாவிப்பதன் மூலம் உயிரோட்டம் உள்ள இரத்தத்திலிருந்து எச்.ஐ.வி. தொற்றிக் கொள்ளும் வாய்ப்புக்கள் உண்டு எனலாம். எனவே தமது பாதுகாப்பு கருதி பொது இடங்களில் சவரம் செய்யச் செல்பவர்கள் தாமே புதிய சவர அலகுகளை எடுத்துச் செல்வது வரவேற்கத்தக்கது. அதேபோல ஊசி ஏற்ற வேண்டிய சந்தர்ப்பங்களில் தாமே புதிய, பாவித்தவுடன் வீசக்கூடிய ஊசிகளை (Disposable Syringes) எடுத்துச் செல்வதே உகந்தது.

போதைவஸ்துக்களை ஊசி மூலம் ஏற்றிக் கொள்பவர்கள் தமக்கிடையே திரும்பத் திரும்ப ஒரே ஊசியை மாற்றி மாற்றிப் பாவிப்பது இந்நோய்ப் பரம்பலுக்கு ஒரு முக்கியமான காரணி ஆகின்றது.

இவற்றையெல்லாம் விட நோய்ப் பரம்பலுக்கான முக்கியமான காரணி மனிதனுடைய பாலியல் நடவடிக்கைகளே ஆகும். இச்சந்தர்ப்பங்களில் உடற் திரவங்கள் கட்டுப்பாடின்றி பலவகையிலும் பரிமாறப் படுவதால் ஒருவரிடம் இருக்கும் எச்.ஐ.வி. வைரசு அடுத்தவருக்கு தப்பாமல் சென்றுவிடுகின்றது.

1981 இல் நோய் கண்டுபிடிக்கப்பட்ட காலப்பகுதியில் தன்னினச் சேர்க்கையில் ஈடுபட்ட ஆண்களிடமே இது காணப்பட்டது. இவர்களின் கட்டுப்பாடற்ற, வழமைக்கு முரணான நடவடிக்கைகள் மற்றும் உறவுக்காக மலவாயிலை பயன்படுத்தும் தன்மை, இதனால் ஏற்படும் குருதிப்பெருக்கு அல்லது சிறுகாயங்கள் போன்றவற்றாலும் மலவாயிலில் அல்லது வாயில் விடப்படும் இந்திரியத்தாலும் எச்.ஐ.வி. வைரசு அடுத்தவரை தொற்றிக் கொள்கின்றது. தனித்துக் கூட்டமாக விடப்படும் இராணுவத்தினர், தொழிலாளர்கள் போன்றோரிடையேயும் களியாட்டக் கழகங்களிலும் இது பொதுவாகப் பலரையும் கூட்டமாகப் பிடித்து இருக்கக் காணப்பட்டது.

தன்னினச் சேர்க்கையில் ஈடுபடும் பெண்களும் (Lesbians) நோயைப் பரிமாறிவிடுகிறார்கள். தன்னினச்சேர்க்கை என்பது நீண்டகாலமாகச் சர்ச்சைக்குரிய விடயமாகவே உலகின் பல பாகங்களிலும் இருந்து வருகிறது. இது பற்றிய கருத்துக் கணிப்புக்களும், புள்ளி விவரங்களும் இதனை ஒழிக்க இயலாது என்றே தெரிவிக்கின்றன.

தன்னினச்சேர்க்கை காரணமாகத் திருமணம் செய்ய மறுத்த பெண்களை சீனா 19ஆம் நூற்றாண்டிலே நாடுகடத்திவிட்டது. அவர்கள் சிங்கப்பூரில் தஞ்சமடைந்துகொண்டனர்.

இத்தகைய உறவு உரிமைகளுக்காக போராடும் அமைப்புக்கள் தமது வாதங்களை முன்வைக்கின்றன. ஆண்களின் மேலாதிக்கத்தில் இருந்து விடுபடப் போராடிய மேற்கத்திய பெண்ணியவாதிகளின் அமைப்புக்கள் சில பெண்களுக்கிடையேயான இத்தகைய உறவுகளை வலியுறுத்திப் போராடின. இதன் விளைவாக சட்ட ஆக்கத்திலும் ஓரளவுக்கு சில நாடுகளில் தன்னினச் சேர்க்கை அங்கீகரிக்கப்பட்டது.

எனினும் எய்ட்ஸ் பரம்பல் என்ற அச்சம் எழும்வரை தன்னினச் சேர்க்கையாளர்கள் பற்றி விஞ்ஞான உலகம் அதிகம் அலட்டிக்கொள்ளவில்லை. ஆனால் மதம் சார்ந்த அமைப்புக்கள் ஆதிமுதல் இதனை எதிர்க்க முனைந்து தோற்றுப் போயின.

இவ்வாறு விரிவுபட்டுச் செல்லும் உறவுகளில் வைரசுப் பரிமாற்றம் நிகழும்போது கூண்டோடு கைலாயம் போகும் நிலைமையே காலப் போக்கில் ஏற்படுகின்றது. மடத்துச் சங்கதிகள் சந்திக்கு வந்துவிடுகின்றன. பெருமளவில் எய்ட்ஸ் பரம்பக் காரணமாக இத்தன்னினச் சேர்க்கை திகழ்ந்து வந்துள்ளது.

ஆண் - பெண் உறவிலும் எய்ட்ஸ் தொற்றிக் கொள்ளும் வாய்ப்புக்களே அதிகம் காணப்படு

(XV ஆம் பக்கம் பாக்க)

- அம்பிகா -

## எங்கும் எய்ட்ஸ்.....

## என்றும் எய்ட்ஸ்!




ஸாம்பியா தலைநகர் லூசாக்காவில் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட 32 சிறுவர்கள் - பெரும்பாலும் அநாதைகள் - ஒரு வீட்டில் வைத்துப் பராமரிக்கப்படுகின்றனர்.



எய்ட்ஸ் நோய் முற்றிய நிலையில் ஒருவர்

# இலங்கையின் மீன்வளமும் பல்



புள்ளி உடும்புச்சுறா அல்லது மகர சுறா- WHALE SHARK- RHINCODON TYPUS.

இலங்கை நீர் வளம் நிறைந்த நாடு. கடல் வளமுமுண்டு; உள்நாட்டு உப்பு நீர், உவர்நீர், நன்னீர் வளமுமுண்டு. மழை வளமும் நிறைய உண்டு. அதனால், நீர் அங்கிகளின் வளமும் நிறைய உண்டு. இலங்கை அயன மண்டலப் பிரதேசத்திற்குரிய நாடாக இருப்பதனாலும், மழை வளமும், நீர்வளமும் போதிய அளவில் இருப்பதனாலும் உயிரின வளமும் மிக அதிக அளவில் உண்டு. உயிர்ப்பல்வகைமையும் (BIODIVERSITY) ஆண்டாண்டு காலமாக இலங்கை மக்கள் கடலுணவில் பெரிதும் சார்ந்து நிற்கின்றார்கள். உள்நாட்டு நீர் நிலைகளுக்குரிய விலங்கினங்களை உணவாகக் கொள்வதில் மக்களுக்கு நாட்டம்குறைவு. உதாரணமாகக் கடல் மீன்களை விரும்புமளவிற்கு, குளத்து மீன்களையோ, ஏரி மீன்களையோ குடாக்கடல் மீன்களையோ விரும்புவதில்லை. கடல் மீனினங்கள் கிடைக்காத போதுதான், உள்நாட்டு மீனினங்களை நாடுவார்கள். பொதுவாக நன்னீர் நிலைகளில் தாவர, விலங்கினங்களின் வளர்ச்சி சிறப்பாகவிருக்கும்; பலவகைமையும் பெரிதாகவிருக்கும். அதனால் இதனை அதிக அளவில் பயன்படுத்த முயற்சிகள் எடுக்க வேண்டும். இலங்கையில் கற்பாங்கான கடற்கரைகளும் போதிய அளவில் உண்டு. இயற்கையான நிலைமைகளில் முதலான உற்பத்தி மிக அதிக அளவில் உள்ளது கற்பாங்கான, ஆழங்குறைந்த கடற்கரைகளிலேயே. (செயற்கையாகப் பயிர் செய்யும் இடங்களே இதை விஞ்சும். இயற்கைச்சூழற்றொகுதிகள் எதுவும் விஞ்சுவதில்லை.) முதலான உற்பத்தி அதிகமாக இருப்பதனால் விலங்கினங்களும் அதிகமாகக் காணப்படும். பல் நிறமுள்ள, அழகான விலங்கினங்கள் பலவும் இங்கேயே காணப்படும். பல வர்ண ஜாலங்களைக் காட்டும் பல மீனினங்களுமுண்டு. (இவற்றைப்பிடித்து, உயிருடனும், இறந்ததாகவும் நூதனசாலைகளுக்கும், வெளிநாடுகளுக்கும் அனுப்பிப் பணம் சம்பாதிக்கும் ஒரு கூட்டமும் உண்டு.)

கடல் வளத்தைப் பொறுத்தவரை யாழ்குடா நாடு மிகவசதியான ஓர் இடத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

உலகளாவிய ரீதியில் உணவுத் தட்டுப்பாடு நிலவுகின்றது. இது மேலும் வலுவடைய வாய்ப்புக்களுண்டு. மனிதன் கடல் வளத்தை கூடுதலாக நாடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. கடல் வளம் அளப்பரியது. ஏற்ற முறையில் அறுவடை செய்தால் தொடர்ந்து பயனைப்பெறமுடியும்.(SUSTAINED UTILIZATION).

மேசை மீன்கள் (TABLE FISH) எனக் கருதப்படும் பல மீனினங்கள் கடலிலேயே கிடைக்கின்றன. நமது மக்கள் சுறா,திருக்கை போன்ற கசியிழைய மீன்களை விரும்பி வாங்கினாலும் இவை மேசை மீன்கள் அல்ல. மேசை மீன்கள் எனக் கருதப்படுபவை முள் மீனினங்களுக்குரியவையாகும்.

மேலும் கருவாடு போடுவதற்கும், மாசிக் கருவாடு தயாரிப்பதற்கும் பலமீனினங்கள் ஏற்றவையாகக் கருதப்படுகின்றன. மாசிக் கருவாட்டை மாலைதீவிலிருந்துஇறக்குமதி செய்ய வேண்டும் என்ற அவசியமில்லை; இங்கும் தயாரிக்கலாம். அண்மையில் எனது மாணவர் ஒருவர் நாகமத்திலுள்ள தனத புது வீட்டுக்கு என்னை அழைத்துச் சென்றிருந்தார். அவர் வீட்டுத் தோட்ட வளர்ப்பிலும், மரவளர்ப்பிலும் ஈடுபாடுடையவர். தோட்டத்தில் ஒரு சிறிய உபகரணத்தை வைத்திருந்தார். உயிரியல் வாயு தயாரிப்பதற்கோ என்று கேட்டபொழுது "இல்லை மாசிக்கருவாடு தயாரிப்பதற்கு" என்று சொன்னார். அதில் தயாரிக்கும் மாசிக் கருவாட்டை விட்டுத் தேவைக்கு எடுப்பதுடன், நண்பர்களுக்கும் கொடுப்பதாகச் சொன்னார். அவர்களும் என்னுடைய மாணவர்கள்தான். நான் ஒரு "தாவரபட்சணி"யாக இருப்பதனால் மாசிக் கருவாட்டைச் சுவைத்துப் பார்க்கும் வாய்ப்புக் கிட்டவில்லை; நல்லது என்றுஏனையோர் சொன்னார்கள். அவர்கள் சொன்னதை ஏன் நம்பக் கூடாது?

இலங்கையில், சிறப்பாக யாழ்.குடாநாட்டில், கடல் வளத்தை மிக நீண்டகாலமாகப் பயன்படுத்தி வந்துள்ளார்கள். ஆனால் இன்று.... பல தரப்பட்ட தடைகள். இதைப் பயன்படுத்தி வெளிநாட்டவர்கள் நமது மீன்வளத்தை அபகரித்துச் செல்கின்றார்கள். தொடர்ந்து பயன் பெறக் கூடிய வகையில் அறுவடை செய்ய வேண்டும் என்ற அக்கறை அவர்களுக்கு இருப்பதில்லை. அதனால், கண்டபடி, கண்மூடித்தனமாக அறுவடை செய்துவிடுகின்றார்கள். நம்மவர்களைத் தட்டிக்கேட்க, தடை செய்ய, ஆளணி உண்டு; ஆனால் இவர்களைத் தட்டிக்கேட்க ஆட்களில்லை. சொந்தப் பறியிலை கைவைக்காதவரை போனால் போகட்டும் என்று விடுகின்றார்கள் போலும்!



'வாள்மீன்' (SWORD MARLIN/SWORD FISH/BROAD BILL)- XIPHIAS GLADIUS.



சார்டின் - SARDINELLA SIRM.



மயில் மீன்(SAIL FISH)- ISTIOPHORUS GLADIUS.



இளம் மயில் மீன் (YOUNG SAIL FISH).



தோறமீன்/அறக்குளா (STRIPED SIER) - SCOMBEROMORUS COMMERSONI.




'மார்லின்'(MARLIN) - MAKAIRA INDICA.

## குகன்

இக்கட்டுரையில், நீர் உயிரின வளத்தில், மீனினங்களை மாத்திரம் எடுத்துக்கொள்வோம். மீனினங்களிலும் பலப்பல இருக்கின்ற காரணத்தினால் சிலவற்றை மாத்திரம் கவனிப்போம். வசதி கருதி இவை மூன்று பிரிவுகளாக

## மச்சச்சட்டியர்கள் விரும்பும் மச்சாவதாரங்கள்

கையாளப்படுகின்றன. அவையாவன:- உணவாகப் பயன்படும் கடல் மீனினங்கள், நன்னீருக்குரிய மீனினங்கள், சிறப்பான மீனினங்கள்.



முண்மீனின் அமைப்புக்களைக் காட்டும் வகைக்குரிய புறவரிப்படம். (1.மூஞ்சி. 2.மூக் குத்துவாரங்கள். 3.கட்குழிக்கு முன்னானது. 4.கொழுப்புக் கண்மடல். 5.கட்டுவாரம். 6. மூடியுருவுக்கு முன்னானது. 7.மூடியுரு. 8.பூமூடிக்குரியவை. 9.முன்மேற்றாடையத்திற்குரியது. 10.மேற்றாடையத்திற்குரியது. 11.மேற்றாடையத்தில் மிகைநிரப்பும் என்பு. 12.சிபுகம். 13.பொருத்து. 14.அலகுருமுனைக்குரிய தொடுமுளை. 15.மேற்றாடையத்திற்குரிய தொடுமுளை. 16.சிபுகத்திற்குரிய தொடுமுளை. 17.கழியறைத்துவாரம். 18.வாலுக்குரிய தண்டடி. 19.வால் ஏராக்கள். 20.முன்முதுகுச் செதில்கள். 21.பெரிதாக்கப்பட்ட 'ஒட்டியாண' செதில்கள். 22.துவாரமிடப்பட்ட பக்கக் கோட்டுச் செதில்கள். 23.செட்டையின்அச்சுக்குரியசெதில்கள். 24.முழுநீளம். 25.நியமநீளம். 26.தலை. 27.முதல்முதுகுச்செட்டையின்ஆரம்பம். 28.உடல்ஆழம். 29.முதல் முதுகுச்செட்டை. 30.செட்டையின்மடல். 31.இரண்டாவதுமுதுகுச்செட்டை. 32.கொழுப்புச் செட்டை. 33.வாற்செட்டை. 34.தோட்பட்டைச் செட்டை. 35.வயிற்றுப்புற அல்லது இடுப்புச் செட்டை. 36, 37.முதலாவது, 2ஆவது குதச் செட்டை. 38.செட்டை முட்கள். 39.கிளையெறிந்த செட்டைக் கதிர்கள். 40.பொருத்திற்குரிய கனு.

கடல் மீனினங்கள் - அதாவது பெரும்பாலும் மேசை மீன்கள் எனக்கருதப்படும் மீனினங்கள்- அதாவது மச்சச்சட்டியர்கள் விரும்பும் சில மீனினங்களை இப்பொழுது கவனிப்போம்:-

**1. புள்ளி உடும்புச்சுறா அல்லது மகரசுறா:-** WHALESHARK-RHINCODON TYPUS என அழைக்கப்படும் இவை கூட்டமாக, ஆறுதலாக நீந்தும் சுறா. கடலின் மேற்பரப்பிற்குரியது. விலங்கு - அலையுயிரிகளை (ZOO-PLANKTON) உணவாகக் கொள்ளும். சுறாக்களிலேயே பெரியது. 60 அடிகள். வரை அல்லது மேலாகவும் வளரக்கூடியது. கேரளக் கரைக்குக் கூடுதலாக வருவதுண்டு. இலங்கைக்கும் அருமையாக வருவதுண்டு. இலங்கையில் பிடிபடுவவை பெரும்பாலும் 25அடிக்குக் குறைந்த இளசுகள். இவை திசைமாறி இங்கு வருகின்றன போலும்.

**2. பால் மீன்:-** MILK FISH - CHANOS CHANOS எனஅழைக்கப்படும் இது கயல்மீன் வகைக்குரியது. கடல்வாழ்க்கைக்குரியது. ஏரிகளிலும் வாழக்கூடியது. குறிப்பிட்ட காலத்தில் மன்னார்க் கடலில் குஞ்சுகள் தாராளமாகக் கிடைக்கும் இவற்றைப் பெற்று கடல்நீரேரிகளுக்கெல்லாம் புகுத்தலாம்.

**3. கிரிமீன்சாலை/சாலை/சூடை:-** சூடை

அங்கிகள் பலவிதம்
ஒவ்வொன்றும் ஒருவிதம்

மீனினங்களுக்கு மேற்படி
ளுண்டு. ஆங்கிலத்தில் எல்
(SARDINES)என அழைக்கப்
யில் ஏழு இனங்கள் கிடைக்
வன SARDINELLA (AMBLY
(கிரிமீன்சாலை),SARDINELL
STER) CLUPEOIDES (கல
SAR
(SAR
FIMBR
SAR
(SAR
MELAN
(SARDINELLA (SARDIN ELL
(பேசாலை), SARDINELLA (
OVALIS, SARDENELLA (S
ALBELL
டின்கள
மீன்கள்
"ரின்"
மைக்கா
கருவா
இப்பொ
காதுகள்
கொண்
(சார்டின்
தவர்க
ஒலித்து
கும்). கு
களில்
ணிக்கை
அதிக
ணிக்கை
உடனடி
படுத்த
கருவாடு
**4. வா**
(HERRIN
இவை
இரண்டு
- CHIR
DORAB
(முள்ளுவ
வாளை)-
ING; CH
NUDUS(
பொதுவ
முழுவது
கும். சு
ஆனால்
தலை. ஒ
மான அ
**5. குற**
TJANUS
(BLUE-S
PPER/MA
எனப்படு
தத்தில் தென் மேற்குக் கரை
எண்ணிக்கையில் வரும்.

**6. சூரை:-** BANITO என
வகையில் இலங்கையில் இர
கிடைக்கும். EUTHYNNUS AF
BANITO), EUTHYNNUS PELA
BANITO). முன்னது மன்னார்



சார்டின் - SARDINELLA



சூறை (BONITO) - EVTHYNN



'ஈட்டி மீன்.'(SPEAR FISH)
TURUS TENUIROSTRATUS.

# ல்வகைகமையும்

## ங்கள்

களுக்கு மேற்படி தமிழ்ப் பெயர்க ஆங்கிலத்தில் எல்லாம் சார்டின்கள் ES)என் அழைக்கப்படும். இலங்கை இனங்கள் கிடைக்கும். அவையா RDINELLA (AMBLYGASTER) SIRM சாலை).SARDINELLA (AMBLYGA- CLUPEOIDES (கல் குறுணை(S). SARDINELLA (SARDINELLA) FIMBRICATA (சாலை). SARDINELLA (SARDINELLA) MELANURA (சாலை). ELLA (SARDIN ELLA) LONGICEPS ல). SARDINELLA ( SARDIENELLA) SARDENELLA (SARDI NELLA) ALBELLA (சூடை). சார்டின்கள எல்லாம் மேசை மீன்கள்; புகழ்பெற்ற "ரின்" மீன்கள். அண்மைக்காலத்து சூடைக் கருவாட்டுப் பாடல் இப்பொழுதும் உங்கள் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கலாம். (சார்டின்களைச் சுவைத்தவர்களுக்கு நாவில் ஒலித்துக் கொண்டிருக்கும்). குறிப்பிட்ட காலங்களில் அதிக எண்ணிக்கையில் வரும் அதிக எண்ணிக்கையில் பிடிபடும்; உடனடியாகச் சந்தைப்படுத்த முடியாதவை கருவாடு போடப்படும்.



**4. வாளை மீன்கள்:-** (HERRING) எனப்படும் இவை இலங்கையில் இரண்டு இனங்களுண்டு - CHIROCENTRUS DORAB (துப்புவாளை/ முள்ளுவாளை/கலக்கு வாளை)-WOLF HERRING; CHIROCENTRUS NUDUS(கல்குறுவாளை). பொதுவாக ஆண்டு முழுவதும் இது கிடைக்கும். சுவையானவை. ஆனால் முள் நிறைந்தவை. ஒடுக்கமான நீளமான அழகான மீன்கள்.

**5. குறுவிளை:-** (LUTJANUS RIVULATUS (BLUE-SPOTTED SNAPPER/MAITLAND FISH) எனப்படும் இவை மேமா

ழிக் குத்து
டியுருவுக்கு
றாடையத்
அலகுருமு
ரிய தொடு
ன்முதுகுச்
. கோட்டுச்
26. தலை.
). செட்டை
34. தோட்
வது குதச்
றிய கனு.

தென் மேற்குக் கரையோரம் அதிக கையில் வரும்.

ரை:- BANITO எனப்படும் இந்த இலங்கையில் இரண்டு இனங்கள் ம். EUTHYNNUS AFFINIS (சூரை- EUTHYNNUS PELAMIS (OCEAN முன்னது மன்னார்க் குடாவுக்கு




ன் - SARDINELLA OVALIS



BONITO) - EVTHYNNUS AFFINIS.



மீன்.'(SPEAR FISH) - TETRAP- ENUIROSTRATUS.



குறுவிலி(BLUE EYED SNAPPER/ MAITLAND FISH) - LUTIANUS RIVULATUS.

மார்ச் ஏப்ரல் மாதங்களிலும், மேற்கு, தென் கிழக்குக் கரையோரங்களில் நவம்பரிலிருந்து மே மாதம் வரையும், மிக அதிக எண்ணிக்கையில் வரும். பின்னது நவம்பரிலிருந்து பெப்ரவரி வரை தென், தென் மேற்குக் கரையோரங்களில் மிக அதிகஅளவில் கிடைக்கும்.

**7. 'தூனஸ்' மீனினங்கள்:-** இலங்கைக்கு இரண்டு இனங்கள் வரும். THUNNUS ARGENTIVITTATUS (YELLOW FINNED ALBACORE; YELLOW FIN TUNA). ஒக்ரோபரிலிருந்து மே மாதம் வரை கிடைக்கும். இலங்கையில் கிடைக்கும் ரூனா (TUNA) மீன்களில் பெரியது. இந்த மேசை மீன்.

**8. மயில் மீன்:-** (SAIL FISH - ISTIOPHORUS GLADIUS எனப்படும் இது ஒரு மேசைமீன். பெரிய அளவிற்கு வளரும்; மூன்று மீற்றர் நீளம் வரையும், 230 இறாத்தல் நிறைவரையும், வளரும். இவை சில சமயங்களில் கூட்டமாகவும் சிலசமயங்களில் சோடிகளாகவும், காணப்படும். ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் இலங்கையை அண்டி முட்டையிடுவற்காக வரக்கூடும். (சோடிகளாகக் காணப்படும் காலம் டிசெம்பர்).

**9. 'ஈட்டிமீன்':-**(SPEAR FISH TETRAPTURUS INDICUS என அழைக்கப்படும் இது அயனமண்டல இந்து - பசுபிக் சமுத்திரங்களுக்குரியது. T.TENUIROSTRATUS அயன மண்டல இந்துச முத்திரத்திற்குரியது.

**10. 'மார்லின்' மீனினங்கள்:-** MARLIN- எனப்படும் இவ்வகையில் இலங்கையில் இரண்டு இனங்கள் கிடைக்கும் MARAIRA INDICA (MARLIN - அஹின் கொப்பறா), MAKAIRA MITSUKURIL சேரமான் கொப்பறா(S). இவை சிறந்தமேசை மீன்கள்.

**11. வாள்மீன்:-**


(SWORD MARLIN/SWORD FISH/BROAD BILL)' XIPHLAS GLADIUS - (கடு கொப்பறா) எனப் பல பெயர்களைக் கொண்ட இது கண்டப்பீடத்துக்கு (CONTINENTAL SHELF) அப்பால், ஆழ்கடலுக்குரியது. தெற்குக் கரைக்கு செப்ரெம்பரிலும், கிழக்குக்கரைக்கு மார்ச் ஏப்ரல் மாதங்களிலும் வரும். சிறந்த மேசைமீன்.

**12. அறக்குளா:-** தோறை மீனினங்கள்(S) - SIER FISH என்று அழைக்கப்படும் சிறந்த - மக்கள் தேடிவாங்கும் - மேசைமீன். இலங்கையில் மூன்று இனங்கள் கிடைக்கும். SCOMBEROMORUS COMME RSONI (அஹின் தோறை- STRIPED SIER) - இலங்கை தோறை மீன்களில் பெரியதும், சிறந்ததும், சாதாரணமாகக் கிடைப்பதும் இதுதான். முட்டைகளையுடைய பெண்கள் ஏப்ரல், மே மாதங்களில் சாதாரணமாகக் காணப்படும். SCOMBEROMORUS GUTTATUS (பம்பர தோறை(S) - SPOTTED SIER) மிக அருமையாகக் கிடைக்கும். S.INTERRUPTUS (அலு தோறை(S) - புள்ளி(லு) அறக்குளா) - சாதாரணமாகக் காணப்படும் இனம்.


**13. சவறா** (KINGSIER - தன் தோறை. ACANTHOCYBIUM SOLANDRI எனப்படும் இதுவும் ஒரு மேசைமீன். சாதாரணமாகக் காணப்படும். சிறப்பாக செப்ரெம்பரிலிருந்து ஜனவரிவரை, அமைதியான நாட்களில் நீருக்கு மேலே 6-7 மீற்றர்உயரத்திற்குப்பாயும்.



மஞ்சள் செட்டை ரூனா(YELLOW FINNED ALBACORA/ YELLOW FINTUNA) - THUNNUS ALBACORA.




முள்ளுவாளை- WOLF HERRING- CHIROCENTRUS DORAB



சவறா(KINGSIER)-ACANTHOCYBIUM SOLANDRI.

## உங்கள் அனுமானங்கள் சரியா?


*"விலங்குகளும் பூச்சிகளும் நுணுக்குக்காட்டியின் கீழ்" என்ற தலைப்பில் கடந்த மூன்று வாரங்களாக இதே பகுதியில் மொத்தம் 29படங்களைத் தனியாகவும் அவற்றிற்குரிய விளக்கக்குறிப்புக்களைத் தனியாகவும் தந்திருந்தோம் எந்தப் படம் எந்த விளக்கத்திற்குரியது என்பதை அனுமானிக்குமாறு உங்களுக்கு புதிரும் போட்டிருந்தோம். இதோ விடைகள்:-*






### 22-04-2000 சஞ்சீவி

1. மயிர்க் கொட்டி 2. ஏபிட்டுத் தாயின் பிரசவம்
3. புல்டோக் எறும்பின் தலையும் கொடுக்கும்
4. தானிய நீள் மூஞ்சி வண்டின் குடம்பி
5. கூஜ்கர் சிற்றுண்ணி நிறைவுடலி 6. முறைத்துப் பார்க்கும் சிலந்தி
7. சிற்றுண்ணியை ஆராயும் வட்டப் புழு
8. மண் புழுவின் முகப்புத் தோற்றம்
9. மான் உண்ணியின் முகப்புத் தோற்றம்



### 15-04-2000 சஞ்சீவி

1. இரு புரற்ற சோவன்களுக்கிடையே வாழ்க்கைப் போர்
2. ஆபிரிக்க மஞ்சள் காய்ச்சல் நுளம்பின் கவர்ச்சிப்படம்
3. ஒரு வகை அந்துப்பூச்சியின் செட்டைகளிலுள்ள கட்புள்ளி.
4. ஈயின் பாதத்தட்டுக்கள் 5. ஈயின் கூட்டுக்கண்
6. அந்துப்பூச்சியின் உணர்கொம்பின் முனைப்பகுதி
7. அழுக்கணையின் ஊசி போன்ற கொடுக்கு 8. பழ ஈயின் தலை
9. தேனீயின் செட்டையிணைப்பிற்குரிய கொழுக்கிகள் 10. தும்பியின் செட்டையின் ஒரு பகுதி



### 08-04-2000 சஞ்சீவி

1. நாய்த் தெள்ளு 2. நாக்கின் சுவையரும்பு
3. சடை முளைகள்
4. பூனையின் நாக்கில் உள்ள கொழுக்கிகள் கொண்ட சிம்பிகள்
5. கம்பளி மயிர் 6. மலைப் பாம்பின் செதில் வரிசை
7. உடும்பின் செவிப்பறை மென்சவ்வு 8. பறவையின் இறகின் ஒரு பகுதி
9. நாயின் மயிரில் சொடுகு 10. வௌவாலின் உரோமம்

# செய்மதி....!

**- விக்கிரமன் -**

2020. ஜனவரி 20

ஓசோன் படையை எட்டித்தொட்டு விடுமோ என அஞ்சும் அளவுக்கு உயர்ந்த கட்டடம். அது யாழ்ப்பாணம் செம்மணி விண்வெளித்தளத்தைக் கொண்ட, பிரதான கட்டுப்பாட்டறைகள் அடங்கிய கட்டடம். பொறியியலாளர் காந்த ரூபனினது சிந்தனையிலும் செயலிலும் உதித்த கட்டடம் "ஈழ விண்வெளிமையம்" எனும் பெயருடன் நிமிர்ந்து நின்றது.



தளத்தின் 3ஆவது மாடி,

'தட்தட்....தட்...'

பணியாளர்களின் முன்னே நிமிர்ந்து நின்ற கணனிகள் சுருதி மாறிய ஒலியை எழுப்பிக் கொண்டிருந்தன. அந்த அறையின் மையத்தில், வானியலின் தலைமை விஞ்ஞானி சிவரூபன், தனது பரிவாரங்களான கணனிகள் புடைசூழ அமர்ந்திருந்தார். அவரின் முன்னே ஒரு பெரிய காட்சித்திரை தெரிய அதில் ஒரு புள்ளி நகர்ந்து கொண்டிருந்தது. ஈழத்தின் வானியல்துறை விஞ்ஞானியர் அனைவரும் அவரது கட்டளைக்காகக் காத்துக் கொண்டிருந்தனர். அகில உலகத்தையே கலக்கிய விஞ்ஞானி அல்லவா அவர்!

விஞ்ஞானி சிவரூபன் –

ஆறடிக்குச் சற்றும் குறையாத உயரம். 'சிவப்பி' எனக் காற்சட்டைப் பருவத்தில் அழைக்கப்பட்ட அதே நிறம் இப்போதும் இருக்க, 'டைட்டானிக்' பாணியா? 'சில்வெஸ்ரர்' பாணியா? என விடைகாண் முடியாத தலைமுடியுடனும் மற்றவர் கண்ணுக்குப் புலப்படும் அவர், ஈழத்தின் தலைமை விஞ்ஞானி என உங்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை.

அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகள் ஓசோன் படைத்துவாரத்தை அடைக்கும் வழி தெரியாமல் தலையைப் பிய்க்க...மற்றும் சில நாடுகளின் விஞ்ஞானியர்தாமே கண்டு பிடிப்போம் என எண்ணி இரவு பகலாகக் கிழிக்க... அனைவரினது தலையையும் மறுபக்கமாகச் சுழல வைத்து, ஈழத்திலும் விஞ்ஞானிகள் இருக்கிறார்கள் எனக் காட்டி.ஓசோன் படைத் துவாரத்தை தன்னுடைய நுட்பத்தால் அடைத்தவர் தான் சிவரூபன். அவரது முயற்சியால் பூமியைச் சூழ தடை முற்றாக அமைக்கப்பட்டு, சூரியக் கதிர்களிடையே மறைந்திருந்த புற ஊதாக்கதிர்கள் கைது செய்யப்பட்டன.

பூமியில் கடந்த பல நூற்றாண்டுகளாக உண்மையெனவும் கற்பனையெனவும் மாறுபட்ட பல விவாதங்களை உருவாக்கிய பறக்கும் தட்டுக்கள், விக்ரோபார் வெள்ளுருத் தொகுதியின் ஒரு கிரகத்தில் இருந்து வருவதாக சிவரூபனுக்குச் சந்தேகம் எழுந்திருந்தது. இதனால் பெரும் செலவில் கடந்த மாதம் ஒரு விண்கலம் அத்தொகுதியின் 5ஆவது கோள் வரை அனுப்பப்பட்டது. அது படம் பிடித்து உயிரினங்கள் இல்லையெனக் கைவிரித்தது. அந்தப் பயணம் மிக நன்மையாக அமைந்துவிடவே, இன்னும் 3 கோள்களே ஆராயப்பட வேண்டி இருந்தது. சிவரூபனின் ஏற்பாட்டில் இரண்டு விண்வெளிவீரர்களுடன் உதவியாக மூன்று ரோபோக்களும் அனுப்பப்பட்டுள்ளன.

இரு விண்வெளி வீரர்கள் ஸ்ரீபனும் அமலனும் விண்வெளிக் கலங்களிலேயே இருக்க... இரு ரோபோக்கள் கலத்திலிருந்து தனியே பிரிந்து இயங்கும் விண்வெளி ஓடத்தில் சென்று தனித்தனியாகக் கோள்களை ஆராய இருந்தன. ஆபத்தற்ற உயிரினங்களாயின் ஸ்ரீபனும் அமலனும் அக்கிரகத்தில் காலடி வைக்க ஏற்பாடாகி இருந்தது.

"ஹலோ 125 ஓவர்" குரல் கேட்டதும் தொடர்புக்கான பொத்தானைச் சிவரூபன் அழுத்த அமலன் திரையில் தெரிந்தார்.

"யெஸ் கூறும் அமலன்"

"சேர்! விக்ரோபார் தொகுதியின் 3 ஆவது கோளை அண்மித்து விட்டோம். நீங்கள் சொன்னபடி கலத்தின் வேகம் குறைக்கப்பட்டு விட்டது".

"கவனித்துக் கொண்டுதான் இருக்கிறேன். இன்னமும் மூன்று நிமிடத்திலேயே 6 ஆவது கோளை அடைந்து விடுவீர்கள். வெற்றிக்கு எனது வாழ்த்துக்கள்"

"நன்றி! மிக்க நன்றி" தொடர்பைத் துண்டித்தார் அமலன்.

மூன்றாவது கோளில் இருந்து ஆறாவது கோளைத் திரையில் பார்த்தார் ஸ்ரீபன். வலஞ்சுழியாக முப்பது பாகை கோணத்தில் விண்கலத்தைத் திருப்பினார்.

* * *

ஈழவிண்வெளிமையம் நிறுவப்பட்ட பின் ஈழத்திலிருந்து அனுப்பப்பட்ட முதலாவது செய்மதி இது. ஆசியாவின் சகல சிறிய நாடுகளிலும் அமெரிக்காவின் ஆதிக்கம் உருவான பின் ஈழமும் இந்தியாவும் செய்து கொண்ட பாதுகாப்பு ஒப்பந்தம் அமெரிக்காவின் தலையீட்டை இருநாடுகளிலும் தடுத்துக் கொண்டிருந்தது. இக்கால கட்டத்தில் அனுப்பப்பட்ட 'செம்மண்I' பாதுகாப்புத் தொடர்பான விடயங்களை முன்னெடுத்துச் செல்வதற்காக - அமெரிக்காவையும் அதன் பிராந்திய நாடுகளையும் கவனிக்கும் ஏற்பாட்டில் - விண்ணில் சுற்றி வந்துகொண்டிருக்கிறது. இதை அனுப்புவதில் சிவரூபனே முன்னின்று உழைத்தார். ஏவப்பட்டு சரியாக இயங்கத் தொடங்கிய பின் அதன் இயக்கம், தகவல்கள் உட்பட சகல பொறுப்புகளும் பெண் விஞ்ஞானி சுகந்தியிடம் ஒப்படைக்கப்பட்டது. சுகந்தி ஓர் இராணுவ புலனாய்வு வல்லுனரும் கூட.

இச் செய்மதியின் ஆயுட்காலம் முன்னரே தீர்மானிக்கப்பட்டு அதற்கான ஏற்பாடுகளும் அனுப்பப்படும் போதே செய்து முடிக்கப்பட்டிருந்தன. சிவரூபனினதும் சுகந்தியினதும் கணிப்பின்படி செயலிழப்பதற்கு இன்னும் ஒரு மாதகாலம் இருந்தது. செயலிழந்தபின் செய்மதி புவியின் ஈர்ப்புப் புலத்தினுள் வரநேர்ந்தால் புவியில் விழுந்து பாரிய சேதத்தை ஏற்படுத்தும் என்பதால், ஒரு மாத காலத்தின் முன்னரே வானத்தில் சிதறடிக்கும் உத்தியோடு நேரக் கணிப்பு குண்டு பொருத்தப்பட்டிருந்தது. அதாவது பொருத்தப்பட்ட குண்டு வெடிக்க வேண்டிய நாள் இன்றாகும்.

விநோதமான ஒலிகளை எழுப்பிக் கொண்டிருந்த கணனிகளின் முன்னே இருந்த சுகந்திக்கு குளிரூட்டியின் கரிசனையையும் மீறி வியர்த்தது. குண்டு வெடித்து செய்மதி சிதறுவதை இன்னொரு செய்மதி அனுப்பும் படத்தில் பார்த்து, தன் பணியை இன்றோடு முடிக்க இருந்த சுகந்திக்கு . குண்டு வெடிப்பதற்கு அரைமணி நேரத்தின் முன்னரே செய்மதி செயலிழந்து கட்டுப்பாட்டை மீறி நகரத் தொடங்கியது பெரும் அதிர்ச்சியை கொடுத்தது. உடனடியாக சிவரூபனின் முன்னிருந்த கணனியின் திரையில் தோன்றினார் சுகந்தி.

* * *

பிரம்மாண்டமான அக்கப்பலின் வலதுபுறத்தே "டைட்டானிக் II" என ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது. கூச்சலும் கும்மாளமுமாக அக்கப்பல் தனது கன்னிப் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தது. கப்பல் தலைவனின் முகத்தில் எந்தவித அச்சமோ, கலக்கமோ இல்லை. பனிப்பாறை, புயல், மழை என எவையும் அக்கப்பலைத் தாக்க முடியாதவாறு நவீன கருவிகளுடன் கப்பல் வடிவமைக்கப்பட்டிருந்தது. மொத்தத்தில் அது பழையபெயரும் வடிவமும் கொண்ட புதிய டைட்டானிக்.

கப்பலின் உரிமையாளர் பேசத் தொடங்கினார். விளையாட்டுத்தளம், நீச்சல்தடாகம் என்பன உட்பட ஒவ்வொரு தனியறைகளிலும் இருந்த காட்சித் திரைகளில் அவர்முகம் தெரிந்தது.

"உங்கள் ஒவ்வொருவருக்கும் வணக்கம். ஓடுபாதையே தேவையில்லாத, உங்கள் வீட்டு மொட்டை மாடியில் நிறுத்திவைக்கும் விமானங்கள் வந்துவிட்ட பிறகும், நீங்கள் உல்லாசமாக இருக்க, இக்கப்பலுக்கு வந்ததையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன். கடந்த நூற்றாண்டில் என் மூதாதையர் கட்டுவித்த 'டைட்டானிக்' கடலில் மூழ்கிய துயரச் சம்பவம் உங்களுக்கு நினைவிருக்கலாம். இக்கப்பல் தற்போது தென்னமெரிக்க கண்டத்தின் பிறேஸில் நாட்டிலிருந்து 400 கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கிறது. இன்னும் 6 மணி நேரத்தில் பிரேஸில் நாட்டைச் சென்றடையும் நன்றி."

* * *

விஞ்ஞானி சுகந்தியின் தகவலைக் கேட்டு அதிர்ச்சியடைந்தாலும் தன்னைச் சுதாரித்துக் கொண்டு அவசரமாகக் கட்டளைகளைப் பிறப்பித்தார் சிவரூபன். செய்மதி தரையில் விழுந்து அதே வேளையில் அதிலுள்ள குண்டும் வெடித்தால் அதுவிழுந்த இடத்திற்கு பாரிய சேதம் ஏற்படும். இதனால் செய்மதியை வானத்திலேயே சமாதி கட்ட ஏற்பாடு செய்தார். சுகந்தி அவசரமாக இன்னொரு செய்மதி அனுப்பிக் கொண்டிருந்த படத்தை கணனியின் உதவியுடன் அவதானித்து வீழ்ந்து கொண்டிருக்கும் செய்மதியின் வேகத்தைக் கணித்தார். செய்மதி விழும் இடத்தையும் கணனியில் உருவாக்கினார். அது பிரேஸில் நாட்டுக்கு வடகிழக்கே அண்ணளவாக முந்நூற்றைம்பது கிலோ மீற்றர் தொலைவில் இருந்தது. அத்திலாந்திக் கடற்பிரதேசத்தில் வரும் கப்பல்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றார் சுகந்தி.

"மை.காட் இந்த டைட்டானிக் மூழ்கக் கூடாது" என அவர் வாய் முணுமுணுத்தது.

* * *

'செய்மதி என் தலையில் விழுந்துவிட்டது' எனப் பதறிக் கண் விழித்தேன்.

"என்னடா நித்திரையா?" என்று கேட்டவாறு என்நண்பன் சிவப்பி சிவரூபன் என்முன்னே நின்றான். பாதிதிறந்த விழிகளால் என்னைப் பார்த்துக்கொண்டு சிரித்தான். இரவு பார்த்த டைட்டானிக் படமும், பொதிகை ஒளிபரப்பில் வானியல் சம்பந்தமான விடயங்களும் எனக்கு நித்திரையை வகுப்பிலேயே இலவசமாகத் தந்துவிட்டிருந்தன. நல்ல வேளையாக வகுப்பிற்கு ஆசிரியர் எவரும் வரவில்லை.

'சே! டைட்டானிக் மேல் செய்மதி விழுந்ததா? வேற்றுக் கிரகத்திற்கு போன விண்கலம் என்னவாயிற்று? மனிதர்கள் வேறு கிரகத்தில் இருக்கின்றார்களா? இதுக்கெல்லாம் பதில் தெரியுமுன் இவன் செய்த வேலையால்....' என் மனம் தவித்தது.

" என்ன பகல் கனவா?" என்று கேட்டு என் காலில் உதை ஒன்று தந்தான். மிகவும் வலித்தது, கால் மட்டுமல்ல உள்ளமும்தான். நாடு இருக்கும் நிலையில், மக்கள் படும் கஷ்டத்தில்... 'ஆடான ஆடெல்லாம் தவிடு புண்ணாக்கென்டு அழ... நொண்டி ஆடு மட்டும் ஐஸ்கிறீம் கேட்டு' (?!?) அழுததாம்.'

காலை நொண்டியபடியே தண்ணீர்க் குழாயை நோக்கி நடந்தேன்.

(யாவும் கற்பனை)

# உரிமைக்குக் குரல் எழுப்பிய உன்னத மனிதர் பாவேந்தர்

**பாவேந்தர் பாரதிதாசனின் 109 ஆவது பிறந்ததினம் இன்றாகும். அவரது 35 ஆவது நினைவுதினம் கடந்த வாரம் அனுஷ்டிக்கப்பட்டது. இவற்றை ஒட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகுகின்றது.**



கத்தும் கடலடக்கிக் கவின் பெறுந் தமிழ் வளர்த்த முக்கூடல் மாமதுரையின் முச்சங்கங்களின் வரலாற்றிலோ அல்லது அதற்குப் பின் இன்றைய இருபதாம் நூற்றாண்டின் கால கட்டத்திலோ சமுதாய மறுமலர்ச்சிக்காக - சமூக வளர்ச்சிக்காக - புரட்சிக்கனலை, வள்ளுவருக்கு அடுத்து ஏற்படுத்திய ஈடு இணையற்ற கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் என்றால் அது மிகையாகாது.

மறுமலர்ச்சிகள் பலவற்றிற்கு வித்திட்ட பாரதியாரின் தாசனாகப் பாரதிதாசன் இருந்தாலும் தமிழர் வாழ்வில் புரையோடிக்கிடக்கும் ஆரிய அடிமைத்தனத்தை - அறியாமை இருளை - அகற்ற அரும்பாடுபட்டவர் பாரதிதாசன்.

தனது விருப்பு வெறுப்புக்களை வெறுப்பவரும் விரும்பும் வண்ணம் தமது பெயருக்கேற்ற மிடுக்கோடும் நிமிர்ந்த நேரிய நடையோடும் கம்பீரத்தோடும் கருத்துக்களைப் பாடல்களில் பெய்திடுவதில் - சொல்வதில் - யாருக்கும் அஞ்சாத வணங்கா முடியாகத் திகழ்ந்தார் அவர்.

பல்லாயிரக் கணக்கான மைல்களுக்கப்பாலிருந்து வந்த பறங்கியனுக்குப் பாரதம் பாரதீனப்பட்டு வாழக்கூடாது என்று சுதந்திர கனலோடு தனித்தன்மை வாய்ந்த தமிழகம் இந்திக்கு எடுபிடியாக இருக்கக் கூடாது என்ற புயலையும் எழுப்பி - இந்திய தேசியத்தில் தனித்தன்மையையும் பேணி - உரிமைப்போர் எழுப்பியவர் பாரதிதாசன்.

கொடுக்கக் கொடுக்கப் பெருகும் பொருள் கல்வியாகும்; அறிவியலை வளர்த்து, உலகத்தோடு ஒட்ட ஒழுக வைக்கும் பகுத்தறிவைக் கொடுப்பது கல்வியாகும். தமிழரின் கல்வி நிலையை உணர்ந்து தமிழருக்கான கல்வியைக் கொடுப்பதற்கு ஆசிரியராகப் பணிபுரிந்து பெருந் தொண்டாற்றினார். "யாருக்குங் கல்வி ஈந்திடல் வேண்டும்" என ஆசிரியரின் கடமையை உரிமையோடு கூறினார். மற்றும் -

"கல்லாரைக் காணுங்கால் கல்வி நல்காக் கசடர்க்குத் தூக்கு மரம் அங்கே உண்டாம்" என்று எச்சரித்தார்.

சாதிச் சழக்குகளை - சாத்திரச் சடங்குகளை மிகுந்த் மிடுக்கோடும் ஆத்திரத்தோடும்சாடிய ஆண்மையாளர் "..................... எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழாகக்" கொண்டவர். உலகம் உண்ண, உண்ணவேண்டும். எல்லார்க்கும் உடைமை என்ற நியதியில் பொதுவுடைமைத் தத்துவத்தின் காவலனாக விளங்கினார்.

நகரின் ஓய்வற்ற இரைச்சலில் அழகை அவர் காணவில்லை. "இயற்கை எழிலை எல்லாம் சிற்றூரில் காணஏலும்" எனக் கிராமத்தின் சீரை, இயற்கை வனப்பை, அமைதியின் எழிலைச் சிற்றூரில் காண விரைந்தார்.

பாவேந்தரின் தமிழுணர்வுக்கு ஈடாக எதையும் சொல்லிட முடியாது. "மங்கை ஒருத்தி தரும் சுகமும் எங்கள் மாத்தமிழுக் கீடில்லை என்றுரைப்போம்" என மடந்தையினுடனான இன்பமும் தமிழ் இன்பத்திற்கு ஈடாகாது என அழுத்தியுள்ளார்.

"தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாய்வதில்லை" என்றெல்லாம் வற்புறுத்தி, தமிழுக்குத் தொண்டு செய்வோர் இறவாத புகழை அடைவர் எனவும் இறுக்கிக் கூறி, தமிழ் மொழியைக் காத்திடத் தமது உயிர்கூட ஒரு பொருளல்ல என்றுரைத்து, தமிழன் இத்தாரணியில் தனித்தன்மை பேணி, பேரணியாக, ஓரணியாக வாழ வேண்டும் என விரும்பியவர்.

"கொடு வாளினை எடடா!
கொடியோர் செயல் அறவே"

என்று ஆவேசமாக முழங்கி, கொடுமைகளுக்கெதிராகப் போர்க் கொடி உயர்த்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.

"பாரதிக்குப் பின் யார்?" என்ற பலரின் வேள்விகளுக்கு விடையாக மிளிர்ந்தவர்தான் பாரதிதாசன். பாரதிமேல் வைத்த மதிப்பால் கனகசுப்புரத்தினம் என்ற அவரது பெயர் பாரதிதாசனாக மாறியது.

பாரதியின் தாசனாக இருந்தாலும் த்மிழின் தனித்தன்மையை வெளிக் கொணர்வதில் பாரதியை விஞ்சியவராகக் காணப்படுகிறார். இவரின் தமிழியக்கப் பணி இன்றைய தமிழர்களுக்கு அணியாக வேண்டும்.

தமிழர்கள் தமிழ் மொழியை மறந்து வாழ்வதை கண்ட பாவேந்தர், மனம் வருந்தி "தமிழர்கள் செறிந்து வாழும் தமிழ் நாட்டின் தெருக்களில் தமிழ்தான் இல்லையே" என்று வருந்தினார். அவரது எண்ணம் ஈழவள நாட்டில் கைவண்ணமாக உள்ளதெனினும் மேலும் செறிந்து பெருகிட, தமிழறிஞர்கள் ஆவன செய்திடல் வேண்டும்.

*

**அ.பொ.செல்லையா**

## வெற்றித் திருமகள் நெற்றியில் திலகம்

வெற்றித் திருமகள்
நெற்றியில் திலகம்
ஒற்றிய சாதனை
முற்றிக் கனிந்து,
பற்றினில் நேர்மையும்
உற்றநல் உறுதியும்
வற்றா ஆற்றலும்
பெற்றது வெற்றியை
திட்டியின் வாசலும்
கெட்டியாய் முட்டியோர்
தட்டிடத் திறந்தது!
அட்டமா திக்குகள்
பயிர்திட(த்) தற்கொடை
உயிர்ப்பை உணர்ந்தன!
மயிர்க்கூச் செறியும்
வியப்பு விளைந்தது!
வேள்வித் தீயில்
தோள்வலி கொடுத்தோர்
சூழ்புத் தொளியில்
வாழ்வுப் பாதை
மீளத் திறந்தது!
நீளப் போகும்
நாளது ஆகும்
ஊழது உருத்தது!
அறம்கூற்(று) ஆனது!
மறமது மனிதத்
திறமுடன் வந்துமே
புறம்புறம் சூழ்ந்தது!
பொல்லாப்(பு) எல்லாம்
இல்லா(து) போக
எல்லாம் வல்ல
வல்லா(னை) வாழ்த்துவோம்.

- தீவகன் -

# என்பிரிய பூமிக்காக!!!

## விஞ்ஞான ரீதியான கற்பனைத்தொடர்

**ச. குமுதினி**
**சங்கத்தானை**

(23) எதற்காக மறுகட்டளை கிடைக்கும்வரை தங்களை வெறும் பார்வையாளர்களாக மட்டும் இருக்குமாறு தலைமையகம் அறிவித்திருக்கிறது என்பதை அறியாமல் அந்த இளம் விஞ்ஞானிகள் திகைத்து நின்றனர்.

"எதுவாயினும் கட்டளைப்படி நடக்கவேண்டியதே நமது கடமை..." நிக்கலஸ் மௌனத்தைக் கலைத்தான்.

"அப்படியானால் நாளை மறுபடியும் அங்கு செல்லவேண்டுமா?"

"ஆம், செல்ல வேண்டும்."

"எந்தப் பணியும் இல்லாமல் வெறுமனே உயர்ந்த மரங்களைப் பார்த்துக் கொண்டிருப்பது சலிப்படையச் செய்து விடும்."

"ஏன் அப்படி எண்ணுகிறாய் இவான்? எந்த வேளையும் நமக்கு அங்கிருந்து அறிவித்தல் வரலாம்... எந்த நேரமும் நம்கடமை மீண்டும் ஆரம்பிக்கலாம்..."

"சியாரா இல்லையே என்று ஏக்கமாயிருக்கிறது...."

"ஏன் அப்படிச் சொல்கிறாய் இவான்..."

"சண்டை பிடித்துக் கொண்டிருந்தாவது நேரத்தை ஓட்டலாம்." இவானின் குரலில் சலிப்பு நிறைந்திருந்தது. சிசிலியா ஏதோ யோசனையில் அமிழ்ந்திருந்தாள்.

"ஏதேனும் சந்தேகமுண்டா சிசிலியா?"

"எமக்கு உதவியாக யாரேனும் இந்தப் பணியில் ஈடுபடுத்தப்படுவார்களோ என்று நினைக்கிறேன்..."

"எதனால் இப்படி நினைக்கிறாய்...?"

"பார்வையாளர்களாக நாம் இருப்பதெனின் நிச்சயமாய் ஏதோ இங்கு நிகழத்தான் வேண்டும்.... நாசகாரிகளின் இருப்பிடத்தை அழிப்பதாகவோ அல்லது எதிர்ப்பதாகவோ யாரேனும் இங்கு தலைமையகத்தினால் அனுப்பப்படுவார்களோ என்று நினைக்கிறேன்."

"சிவப்பு நட்சத்திர வீரர்களான நாங்கள் எமக்கிடப்பட்ட பணிகளை இதுவரை செவ்வனே நிறைவேற்றியிருக்கின்றோம். அப்படியிருக்க, எம்மைப் பார்வையாளர்களாக இருக்க வைத்துச் செயல்புரிய வேறு யார் இங்கே வரப்போகிறார்கள்...?"

"வீணான சந்தேகங்களை வளர்த்துக் கொள்ள வேண்டாம். நாளை அங்கு செல்வது மட்டுமே நமக்குத் தெரிந்த கட்டளை. அதன் பிறகு மீதத்தைப் பற்றிச் சிந்திப்போம்" நிக்கலஸ் அமைதியான குரலில் சொன்னான்.

"நடு இரவு தாண்டி விட்டது. நாளை சீக்கிரமாய் எழுந்து விட வேண்டும்..."

இவானும் சிசிலியாவும் உறங்கிய பிறகும் கூட நிக்கலஸ் நெடுநேரம் உறக்கம் வராமல் விழித்திருந்தான். சிசிலியா சொல்வது போல வேறு விஞ்ஞானிகள் உதவ வருவதாய் இருந்திருந்தாலும் கூட தங்களைப் பார்வையாளராய் இருக்குமாறு ஏன் தலைமையகம் சொல்லியது என்ற கேள்வி மீண்டும் மீண்டும் விடையற்று மனத்திரையில் எழுந்தது.


மறுநாள் காலையில் அவர்கள் மீண்டும் நாசகாரிகளின் நிரந்தர இருப்பிடம் அமைந்த பகுதியைச் சென்றடைந்தனர். பிரதேசம் எந்த மாறுதலுமற்று நிச்சலனமாய் இருந்தது.

அவர்கள் செந்நிறச் சுழல் விளக்குகளால் எல்லையிடப்பட்டிருந்த பகுதியைச் சூழ மூவரும் தனித்தனியாய்ப் பிரிந்து கண்காணிப்பதென முடிவு செய்தார்கள். எந்த நேரத்திலும் நாசகாரிகளிலிருந்து 400 மீற்றர் தூரத்தில் விலகியிருப்பதை உறுதி செய்து கொள்ளுமாறு நிக்கலஸ் எச்சரித்தான்.

அவ்வாறே மூவரும் அன்று முழுவதும் அப்பிரதேசத்தைச் சுற்றிலும் அவதானித்துக் கொண்டிருந்தனர். முன்னர் அறிந்த தகவல்களைவிட வேறு எதையும் அதிகமாய்ப் பெற முடியவில்லை. இரவிலும் தனித்தனியே பிரிந்து அவதானிப்பது முழுப்பிரதேசத்தையும் பூரணமாகக் கண்காணிக்க உதவுமென்று இவான் அபிப்பிராயம் சொன்னான்.

நிக்கலஸ் சம்மதம் சொல்ல அவர்கள் பகற்பொழுதில் தாங்கள் கணிகாணித்த பகுதிகளுக்கு மீண்டும் திரும்பிச் சென்றார்கள். இரவிலும் பகலிலும் ஒரே மாதிரியான வெண்ணீல ஒளி விகசித்துக் கொண்டிருக்கின்ற, கோபுரம்போன்று உயர்ந்திருக்கின்ற நாசகாரிகளின் இருப்பிடம் இராப்பொழுதின் பயங்கரமான அமைதியுள் மௌனமாய் உறைந்திருந்தது. இடையிடையே நாசகாரிகளின் நடமாட்டம் வெண்ணீல ஒளியில் துல்லியமாய்த் தெரிந்தது. தவிர வேறு எந்தத் தகவல்களும் இல்லாதவாறு இராப்பொழுது கழிந்து போயிற்று.

இரண்டாவது நாளும் பகல் வழமை போலவே சென்று கழிந்தது. இராப்பொழுதின் பாதி நிறைவுற்ற நேரம் இருக்கும். விழிகளையும் நினைவையும் ஒருசேரச் சூழலில் பதித்திருந்த அந்த இளம் விஞ்ஞானிகளுக்கு ஆர்வத்தையும், திகிலையும் வளர்ப்பதாக நாசகாரிகளின் செயற்பாட்டில் திடீர் மாற்றம் தெளிவாய்த் தெரிந்தது.



அங்கொன்றும் இங்கொன்றுமாய்ப் பரவியிருந்த உயர் கோபுரங்களில் தென்மேற்குத் திசையில் அமைந்திருந்த இரண்டு கோபுரங்கள் கண்ணைப் பறிக்கும் செந்நிற ஒளியால் நிரம்பின. நாசகாரிகள் அனைவரும் அந்தக் கோபுரங்களுள்ளும் திரண்டு விட்டிருந்தனர். அங்கே எழுந்த விநோதமான சப்தங்கள் காற்றில் கலந்து விஞ்ஞானிகளின் காதுகளையும் நிரப்பின.

நிமிடங்கள் கரைந்து கொண்டிருந்தன. திடீரென அக்கோபுரங்களில் ஒன்றில் செந்நிற ஒளி மறைந்து பளீரிடும் மஞ்சள் வர்ண ஒளி அப்பிரதேசத்தையே பகலாக்குவதான பிரகாசத்துடன் ஒளிரத் தொடங்கிற்று.

சிறிது நேரம் கழிந்திருக்கும். தொலைவில் சிறிதாய் எங்கோ ஓர் அதிர்வு கேட்கத் தொடங்கிற்று. இரவின் நிசப்தத்துள் அமிழ்ந்து போயிருந்த காடு திடீரென விழித்துக் கொண்டாற் போலிருந்தது. விழித்தெழுந்த பறவைகளினதும், விலங்குகளினதும் சப்தங்களையும் மீறியவாறு அந்த அதிர்வும் உரத்து ஒலிக்கத் தொடங்கிற்று.

பிறகு எல்லாம் வழமை போலவே நிகழ்ந்தன.

ஒரு நாசகாரிகளின் ஊர்தி இறங்குவதைப் போல,அதிர்வு மிக உரத்தும் வானிலிருந்து கீழே இறங்கி வருவதாகத் தோன்றிப் பின் பூமியை நெருங்கியவுடன் நின்றுவிட்டது. மஞ்சள் நிறமாய் ஒளிர்ந்த அந்தக் கோபுரமும் மீண்டும் செந்நிறமாய் ஒளிரத் தொடங்கியது. சுமார் இரண்டு மணித்தியாலங்கள் வரை சென்றிருக்கும். மறுபடி செந்நிறம் மஞ்சள் நிறமாக மாறக் கோபுரம் பொன்னிறமாய் ஒளிரத் தொடங்கிற்று. மீண்டும் தொலைவே அந்த அதிர்வு. மெலிதாய்த் தொடங்கி உரத்து நீடித்துப் பின் தேய்ந்து மறைந்து போனது. கோபுரங்கள் இரண்டும் மீளவும் வெண்ணீல ஒளியுடன் பிரகாசிக்கத் தொடங்கியிருந்தன. காட்டுப் பிரதேசம் மீளவும் நிசப்தத்துள் அமிழ்ந்து விட்டது.

இவானும், சிசிலியாவும், நிக்கலசும் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் நின்றவாறே எல்லா நிகழ்வுகளையும் கண்காணித்தபடி இருந்தார்கள். மூவர் மனதிலும் எண்ணற்ற கேள்விகள் எழுந்து மறைந்தன.

பொழுது விடிந்தபோது அவர்கள் மூவரும் ஓரிடத்தில் சந்தித்தனர். நாசகாரிகளின் ஊர்தி பூமியில் இறங்கும்போது அவர்களின் இந்தத் தரிப்பிடத்தில் நிகழும் மாற்றங்களைத் தலைமையகத்துக்கு அறிவிப்பதற்காக நிக்கலஸ் அன்று தங்களின் பழைய இருப்பிடத்துக்குச் செல்வது நல்லதென அவர்கள் தீர்மானித்தார்கள்.

நிக்கலஸ் மறுநாள் திரும்புவதாகக் கூறிச் சென்று விட இவானும், சிசிலியாவும் முழுப் பிரதேசத்தையும் கண்காணிக்கும் பணியை ஏற்றுக் கொண்டார்கள். பகற்பொழுது எந்தச் சலனமும் இல்லாமல் ஓடி மறைந்து விட்டது.

முதல் நாள் அவர்களின் ஊர்தி பூமிக்கு வந்திருந்தபடியால் அன்று வேறு எந்த அசம்பாவிதமும் நிகழாதென இவான் நம்பிக்கை தெரிவித்திருந்தான். சிசிலியா கண்களைச் சூழலில் பதித்தவாறு மெல்ல உலாவிக் கொண்டிருந்தாள். தொடர்ச்சியாய் நித்திரை வேறு இல்லாது இருப்பது சோர்வைத் தருவதாய் இருந்தது.

அடுத்து என்ன நிகழுமென்று தெரியாமல் தொடர்ச்சியாய்க் கண்காணித்துக்கொண்டிருப்பது எத்தனை நாளுக்கெனத் தெரியவில்லை. காலடியில் சருகுகள் நெரிபடும் சப்தம் தவிர எந்த ஒலியுமில்லை. மெல்ல மெல்ல உலாவிக் கொண்டிருந்தவளின் காதில் அசாதாரணமான ஓர் ஒலி ஒன்று கேட்பதான உணர்வு ஏற்பட்டது.

சற்றே நிதானித்துக் காதுகளைக் கூர்மையாக்கினாள். இப்போது சத்தத்தைத் தெளிவாய்க் கேட்க முடிந்தது. தரையில் இயங்குகின்ற ஊர்தி ஒன்று செல்வதற்குரிய சப்தம் அது! அவளுள் ஆச்சரியம் பரவிற்று. 'இது எப்படிச் சாத்தியம்? நிக்கலஸ் கூட இப்போது வரமாட்டானே!'

சிசிலியா தொலைநோக்கியை விழிகளில் வைத்து வெண்ணீல ஒளியில் மூழ்கியிருந்த நாசகாரிகளின் இருப்பிடத்தை அவதானிக்கத் தொடங்கினாள். தொலை நோக்கி மெதுவாய், மிகமெதுவாய் அசைந்து கொண்டிருந்தது. எதுவும் வித்தியாசமாய்த் தென்படவில்லை. ஒரு மணி நேரம் கழிந்திருக்கும்.

தென்கிழக்கு மூலை தொலைநோக்கியின் பார்வைப் புலத்துள் விழுந்தபோது.. சிசிலியா ஒருகணம் விழிகளை இமைக்க மறந்து சிலையாகிப் போனாள்!

அங்கே...நீளக் காற்சாராயும், கைவரை நீண்டிருந்த சட்டையும் அணிந்தவாறு நாசகாரிகளின் கோபுரங்கள் அமைந்திருந்த பகுதியை நோக்கி நடந்து கொண்டிருந்தான் ஒரு சின்ன மனிதன்! சிசிலியாவுக்கு தன் கண்களை நம்பமுடியவில்லை. இன்னும் துல்லியமாய் உற்றுப் பார்க்கச் சற்றும் சந்தேகமில்லாமல் ஒரு சின்ன மனிதன் நடந்து செல்வது தெரிந்தது.

'எப்படி..? எப்படி இது சாத்தியம்? அந்தச் சின்ன மனிதன் எப்படி அவர்களின் நீலக்கதிர்களின் வீச்சுக்குத் தப்பி அவர்களின் பிரதேசத்துக்குள் செல்ல முடிந்தது?

சிசிலியா தொலைநோக்கியின் மூலம் அந்த மனிதனின் முகத்தைப் பார்க்கமுயன்றாள். முடியவில்லை. இன்னும் சற்று உள்ளே நோக்கிச் சென்றால் முகத்தைத் தெளிவாய்ப் பார்க்கலாம். படபடக்கும் இதயத்துடன் அவர்களின் இருப்பிடம் நோக்கிய திசையில் நடந்தாள் சிசிலியா. இனி முகத்தைப் பார்க்க முடியும்.

கண்களில் தொலைநோக்கியைப் பொருத்தியபோது அவனின் காதுகளும்,கன்னட்புறங்களும் தெளிவாய் அருகில் நின்று பார்ப்பது போன்ற துல்லியத்துடன் தெரிந்தன. முகத்தைப் பார்க்கக் கூடியதாய் இன்னும் நகர்ந்தாள் சிசிலியா.

முகத்தை மிகத் தெளிவாய்ப் பார்க்க இதயத் துடிப்பு நின்றாற் போலிருந்தது சிசிலியாவுக்கு. இன்னும் கூர்மையாய்ப் பார்க்க அங்கே - அவளது அருமையான வெள்ளைப் புன்னகையும் நீலவிழிகளுமுள்ள அன்புக்குரிய மாணவன் யூலியன் நடந்து சென்று கொண்டிருந்தான்!

* * *

ஊர்தியிலிருந்து இறங்கிய போது 'உனக்கு வரும் கட்டளைப்படி நீ தொடர்ந்து செயற் படு' என்று அந்த மனிதன் யூலியனுக்குச் சொல்லியிருந்தான். அதன் பிறகு தன்னை மெல்லத் தூக்கம் போன்ற உணர்வு தழுவிக் கொண்டது மட்டும் அவனுக்கு ஞாபகமிருந்தது.

தொடர்ந்து கண்களுள் பரவிய நீலநிற ஒளியின் மத்தியில் அந்த நெடிய மனிதனின் தோற்றம் தெரிந்தது. புன்னகையுடன்.

"யூலியன்! இப்போது நீ உனக்கு முன்னேயுள்ள வெண்ணீல ஒளி நிறைந்திருக்கின்ற அந்தப் பிரதேசத்தினுள் செல்ல வேண்டும்!"

................

"என்ன யூலியன்? சோர்வாய் இருக்கிறாயா? எப்படியெனினும் தாமதம் செய்ய முடியாது. உடனடியாய் நீ அங்கே செல்ல வேண்டும்"

"அங்கே செல்கிறேன்...."

யூலியன் மெதுவாய் நிமிர்ந்து எழுந்தான். நடக்கக் கால்கள் தள்ளாடின. சருகுகள் மிதிபட வெண்ணீல ஒளியில் மூழ்கியிருந்த அந்தப் பிரதேசத்தின் உட்புறம் நோக்கி நடக்கத் தொடங்கினான்.

உள்ளே அங்கொன்றும் இங்கொன்றுமாய் அமைந்திருந்த உயர்ந்த கோபுரங்களோ, அவற்றிடையே பரவியிருந்த நாசகாரி மனிதர்களோ பற்றிய எந்தச் சிந்தனையுமற்றுத் தன்னுள் தோன்றி ஒலித்துக் கொண்டிருந்த அந்த நெடிய மனிதனின் கட்டளைக்குக் கீழ்ப்பட்டுத் தள்ளாடியவாறே நடந்து கொண்டிருந்தான் யூலியன்....!

(தொடரும்)

---

# ஆளுமோ? தமிழ் மீளுமோ?

அட்ட திக்குமே யதிர்ந்திடத் தமிழ்
ஆளுமா - பகை வீழுமா?
பட்ட பிணியெலாம் படுத்திடத் தமிழ்
பாடுமா - பகை ஓடுமா?

வெற்றி வந்துளம் தாயின் மடியினில்
வீழுமா - தமிழ் மீளுமா?
பற்றி நின்றதோர் பாவம் யாவுமே
பாயுமா - பிணி ஓயுமா?

வாழ்வு யாவுமே வெறுமை யாகமுன்
வாழ்வரோ - தமிழர் மீள்வரோ?
ஆழ்ந்து நிற்குமெம் தமிழர் வீரமும்
ஆளுமா - இனியும் மீளுமா?

தட்டி யெம்மையே முட்டிப் பார்ப்பவர்
தாழ்வரோ - உ்யிர் மாள்வரோ?
எட்டி யெங்களின் புகழும் வானிலே
ஏறுமோ - இன்னல் ஆறுமோ?

போரில் எங்களின் உறுமல் பகையினை
போக்குமோ - தமிழைக் காக்குமோ?
பாரில் எங்களின் பரணி கேட்டிட
பார்க்குமோ - மனம் ஆர்க்குமோ?

எங்கள் வாழ்வினைப் போக்கும் யாவரும்
இழிவரோ - இனியும் அழிவரோ?
பொங்கு தமிழதன் மூச்சுப் பட்டிட
போவரோ - பிணம் ஆவரோ?

- அனலையூர்ச் சேந்தன்

---

# குறள்வெள்ளம்

இந்த உபதேசத்தைக் கேளாமல் பொறாமைப்படலாம். அது வில்லங்கத்தை விலைக்கு வாங்கும் முயற்சியே என்கிறார் வள்ளுவர்.

தன்வினை அடுத்தவரைக் கெடுக்காது. அது தன்னையே சுடும். பொறாமையால் புழுங்கும் மனது நிம்மதியின்றித் தவிக்கிற தவிப்பில் நோய்நொடி வந்து வாட்டிவிடும்.

பிறனுடைய ஆக்கத்தைக் கண்டு பொறுக்காதவன், அவன் செய்கின்ற அறத்தையே திட்டுபவன் எப்படி உருப்படுவான்? அவனுக்கு எப்படி அறம் செய்ய மனம் வரும்? வேண்டுமானால் போட்டிக்கு அறம் செய்யப் புறப்படுவான்.

இப்படிப் புழுங்குபவனுக்கு எங்கே அறத்தால் வரும் ஆக்கம் எட்டப் போகிறது? எனவே அறன் ஆக்கம் வேண்டாம் என்பவனே பிறன் ஆக்கம் போற்றாது பொறாமைப் படுவான்.

**அறனாக்கம் வேண்டாதான் என்பான் பிறனாக்கம்**
**பேணா தழுக் கறுப்பான். - 0163**

- அம்பிகைபாகன்.

# தூரப்போகும் நாரைகள்



விழிப்படலத்தில் விழுந்தவை மங்கிய காட்சிகள்தான். ஆனாலும் அவற்றையெல்லாம் தாண்டிக் கொண்டு நெல் வயல்கள் பாரம் தாங்காமல் சாய்ந்துகொண்டிருப்பது பார்வதி ஆச்சியின் மனக் கண்ணில் தெரிகின்றது. அறுகுவெளியின் நினைப்பு இந்த உயிர் போக முன்பு எப்படிப் போகும்? வேதனைத் திரைகள் படிந்து சுருங்கிப் போன முகத்தில் பேரக் குழந்தைகளைத் தேடும் ஆவல் போல ஒன்று, அந்த மெல்லிய இளம் பயிர்களையும் தேடும் சோகத்தை நெஞ்சில் இழையோட வைத்தது.

"அம்மா... கொஞ்சம் பால் குடியுங்கோ அம்மா..." மகளின் குரல் தடிமன்காரக் குரல் போல அடைசலூற்றுக் காதில் விழுந்தது. கூடவே மெல்ல நிமிர்த்தி பேணியைச் சாய்த்துப் பால் புகட்டும் மகளின் அன்பு... அதற்கு அப்பாலும் மிகுந்த அன்பை அந்தக் கிராமத்திலிருந்து அவளைத் தேட வைக்கின்றது.

அறுகுவெளி... வயல்கள் சூழ்ந்த அந்த இனிப்பான ஊர் ஏன் இவர்களைத் தள்ளி வைத்தது? ஆச்சியும், அப்புவுமாய் அந்தச் சின்ன வீட்டைத் தென்றல் தழுவி வரும் இடத்தில் அமைத்து,, வயலோரக் காற்றின் வாடையிலேயே உயிர் சுமந்து வாழ்ந்தவர்கள். எந்த இடப்பெயர்வுமே அசைக்காதிருந்த அவர்களை இந்த இடப்பெயர்வு மட்டும் எப்படி அசைத்தது? காரணம் அப்பு. போன வருஷம் அப்பு செத்துப் போனார். ஆச்சிக்கு உறுதியான பிடிமானமாயிருந்த அந்தத் தூண் விழுந்த பிற்பாடு ஆச்சியால் உறுதியான முடிவுகள் எடுக்க இயலவில்லை. கடைசிவரை - அப்புவின் இறுதிநாள் வரை கூட - அந்த மண்ணைவிட்டு ஒரு பிரிவு வருமென்று ஆச்சி நினைத்திருக்கவில்லை.

பிள்ளைகள் படித்து முன்னுக்கு வந்து அவர்களுக்கென்று ஒரு வாழ்வை ஏற்படுத்திக் கொடுத்த பின்னரும் கூட அவர்கள் அந்த மண்ணோடு இசைந்திருக்கவே விரும்பினார்கள். நகரத்தில் வீடு கட்டிக் கொண்டு வசதியாய் வாழ்ந்த பிள்ளைகள் வருந்தி வருந்திக் கூப்பிட்டாலும் பிடிவாதமாய் மறுக்க, அப்போது அப்பு இருந்தார். அந்தப் பிடிமானத்தில் வாழ்வு அர்த்தமாயிருந்தது. பிள்ளைகள் உத்தியோகத்திலிருந்த போதிலும் ஆளாளுக்கு வயல் வைத்திருந்தார்கள்.

"உத்தியோகம் இருக்கெண்டாப் போலை வயலைக் கவனிக்காமல் விடாதயுங்கோ... அதுதான் தெய்வம்... உங்களை வளத்தது... படிப்பிச்சது... முன்னுக்குக் கொண்டு வந்தது... எல்லாம் இந்த மண்தான். அந்த மண்ணைக் கும்பிடவேணும்..."

அவர்களுக்கு அந்த உண்மை புரியும். சின்ன வயதில் ஆளாளுக்கு களை பிடுங்குவதிலும், நாற்று நடுவதிலும், சூடு மிதிப்பதிலும் என்று ஒவ்வொரு சின்ன அலுவல்களிலும் ஈடுபட்டுப் பழகிப் போனவர்கள் அவர்கள். என்றாலும் உத்தியோகச் சுமை அழுத்த அழுத்த, வயல் வேலைகள் அவர்களைச் சலிப்புறச் செய்தது உண்மைதான். அப்போது அப்புவுக்கும் ஆச்சிக்கும்தான் இவர்களது வயல்களைக் கவனிக்கும் பொறுப்பும் கூடும். விதைப்புக் காலங்களில் உரம் போடுகையில், சூடு மிதிப்புக் காலங்களில் என்று பிள்ளைகள் வருகின்ற வேளைகளில் பேரப்பிள்ளைகளோடு வருவார்கள். பேரக்குழந்தைகள் சரியான சுட்டிகள். ஓர் இடத்தில் இராமல் சுற்றிச் சுற்றித் திரியுங்கள். வயல் நிலங்கள் பூராவையும் அளவெடுத்து நாரைகளைத் துரத்துங்கள்...

நாரைகள்... எவ்வளவு சொந்தமான உறவுகள்! இந்த நெற் பயிர்களைப் போல... பருவகாலத்துக்குத் தக்கபடி கூட்டங்கூட்டமாக வந்து பறக்கின்ற செங்கால் நாரைகள். வயல் வரம்புகளூடே ஆடி அசைந்து ஒய்யாரமாய் நடக்கும். ஒன்றோடொன்று அன்பாய் சிறகு கோதும். காத்திருந்து இரை பொறுக்கும். சாரி சாரியாய் சிதறிப் பறந்து பச்சைக், கடலாய் விரிந்த வயலுக்கிடையே... வெள்ளைப் பந்துகளாய் ஒளி காட்டும். யாரேனும் வருவதைக் கண்டால் 'ஜிவ்'வென்று ஒன்றொன்றாய் எழும்பித் தூரப் போய் அமரும். ஆபத்துக்கள் அண்மிக்க, அண்மிக்கத் தூரப் போய்க்கொண்டிருக்கும். பருவகாலங்களுக்கமையவும் எதிர்க்கும் மனிதர்களுக்கமையவும் இசைவுபடுத்தப்பட்ட வாழ்க்கை பரந்த சிறகுகளை வெண்மைச் சாமரமாய் விரித்தபடி பறக்கும் அழகு...!

இந்த நாரைகளோடு பிரியம் வைக்க முனைந்து தோற்றுப் போனவன் சுட்டா. பார்வதி ஆச்சியின் கடைசிப் பேரன். கொஞ்சம் சின்ன வயதில் பெண்மைத் தனமான மென்மையான செய்கைகள் அவனுக்குள் வன்மத்தைக் கிளப்பியவை அந்த நாரைகள். கொஞ்சம் பயந்த சுபாவமுள்ள அவன் அடிக்கடி நாரைகளுக்குப் பின்னே திரிவான். அவனோடொத்த மூத்த பேரக்குழந்தைகள் வைக்கோற் போரில் ஏறி உருண்டு கொண்டிருக்கிற வேளைகளில் இவன் பச்சைப்பசேல் என்ற வயல்கள் வெறிச்சோடியிருப்பதை ஒரு சோகத்தோடு பார்ப்பான். அவனுக்கு வயல் பசுமையாயிருப்பதுதான் பிடிக்கும். அதனை யாரும் வெட்டி விடக் கூடாது. இந்த நாரைகள் எப்போதும் அங்கு திரிந்து கொண்டேயிருக்க வேண்டும் என்பது அவன் விருப்பம்.

## தாட்சாயணி

வரப்போரம் மெல்ல நடப்பான். தூரத்தில் நாரைகள் தெரிகிற இலக்கை நோக்கி அவற்றின் கவனம் கலைந்து சிதறாமல் இருக்கும் பொருட்டு சத்தமிடாமலே பதுங்கிப் பதுங்கி நடப்பான். நெருங்க நெருங்க மனது சந்தோஷமுறும். 'நான் உங்களைப் பிடிக்கமாட்டேன். நீங்கள் என்னோடு விளையாடலாம்' என்பதாய் அவன் கண்கள் சேதி சொல்லும். ஆனால் நாரைகள் அவன் கண்களைப் பார்ப்பதில்லை; அவனது எண்ண ஓட்டங்களைப் புரியும் சக்தியும் அவற்றுக்கு இருப்பதாய்த் தெரியவில்லை. ஏதேனும் ஒரு நாரை ஒரு மனிதனின் வரவு - அது ஒரு சிறுவனாயிருந்தாலுங் கூட - உணர்ந்து எழுந்து தூரத் தள்ளிப் போய் உட்காரும். மளமளவென்று செய்தி உணர்ந்தாற் போல் ஒன்றொன்றாக நிதானம் தவறாமல் எழுந்து போய்த் தள்ளி உட்காரும். இவன் சலிப்பில்லாமல் மேலும் தொடர்வான். அதற்கு அப்பால், அப்பால்... அப்பாலுக்கப்பால்.. வயல்களா இல்லை என்றாற் போல் நாரைகள் சுற்றிச் சுற்றி, மாற்றி மாற்றி வட்டங்களை உருவமைக்கும். கால் வலிக்கும் வரைக்கும் நாரைகளைத் தொடர்வது அவனுக்குச் சலிப்பைத் தருவதில்லை. அப்படியாயின் அவனுக்குக் காலே வலிப்பதில்லை என்று அர்த்தம். ஆனால் அவன் நாரைகளைத் தொடர்வதை நிறுத்த வேண்டி வரும். பார்வதி ஆச்சியின் தொடர்ச்சியான வற்புறுத்தல்களால். சுற்றிச் சுற்றித் திரிந்து நீண்ட தூர அலுப்பில் இருக்கும் அவனை பார்வதி ஆச்சியின் அன்பும் கேலியுமான குரல் தாக்கும்.

"இண்டைக்கு எத்தினை நாரை பிடிச்சாப்போலை..." அவனுக்கு ஆச்சியின் கிண்டல் கோபத்தைச் சுரக்க வைக்கும்.

"பாருங்கோ ஆச்சி, ஒரு நாளைக் கில்லாட்டி ஒருநாள், நான் உந்த நாரைகளிலை ஒண்டையாவது சுட்டு நாரையிறைச்சி கொண்டு வந்து தாறன். உங்களுக்கு..." நாரைகளை வசியப்படுத்த முடியாக் கோபத்தில் சொல்வான்.

"சீச்சி சீச்சி அதுகள் பாவம். என்ரை ராத்துக்குட்டி பிள்ளைக்கு உந்த நினைப்பெல்லாம். உயிர்களைக் கொல்லக் கூடாதடா..." ஆச்சி அவனை வாரியெடுத்து அணைத்துக் கொள்வார்.

அப்போதுதான் அவனுக்கு அவ்வளவு நேரமும் வலியெடுக்காத கால்கள் வலியெடுப்பதாய்த் தோன்றும். கால் வலியை மீறி நாரைகள் கிடைக்காமற் போன ஆற்றாமை கண்களில் வழியும்.

"ஆச்சி ஏன் ஆச்சி... என்னட்டை மட்டும் நாரைகள் வராதாம். என்னைப் பார்க்க பயமாயோ கிடக்கு..." சின்ன மனதில் தாங்கல் ஏற்பட்டுச் சிதறும்.

"ஆர் சொன்னதடா அப்பிடி? நாரைகளெண்டா அப்பிடித்தான். எங்களைப் போல எல்லாரும் இருக்கேலாதானேயடா. நாரைகளை வேட்டையாடவும் ஆக்கள் இருக்கினை தானை. அதுதான் அது எல்லாரைப் பார்த்தும் விலகி விலகிப் போகுது. வேண்டாத தொந்தரவுகளை ஏன் விலை குடுத்து வாங்குவானெண்டு தான்... தூரத் தள்ளிப் போறது. எதுக்கும் நல்லதுதானை..."

"ம்...ஹூம்... இது எனக்கு விளங்கேல்லை." அவன் ஆச்சியின் முகத்தோடு முகம் இழைத்துக் கொண்டு சிணுங்குவான். எல்லாம் ஆச்சியின் வீடு வரும்வரைக்கும்தான். வீட்டுக்கு வந்தபிறகு எல்லாம் மறந்து போவான். சுற்றி வரப் பேரக்குழந்தைகளை அமர்த்தி நிலாவொளியில் ஆச்சி கதை சொல்லும் வரைக்கும்தான்.

ஆச்சியின் கதைகளும் நிலவுக்குள் பாக்கிடிக்கிற ஔவைப் பாட்டியின் தோற்றமும் அவனுள் பரவசத்தை ஏற்படுத்தும். அதையும் விட அதிகமாய் பூவரசம் இலைகளை ஒவ்வொருவரிடமும் கொடுத்துவிட்டு மத்தியானச் சோற்றையும் கறிகளையும் போட்டுப் பரட்டிய குழையல் சோற்றை வயது பேத மின்றி எல்லாருக்குமாய் ஆச்சி உருட்டி உருட்டித் தருகின்ற போது அவனுக்குப் பெரிய பரவசமாய் இருக்கும். அப்புவைப் போல வண்டி மாடுகளை ஓட்டும் பெரியவராய் அவருக்குச் சமதையாகிவிட்டாற்போலத் தோன்றும். அதேபோல அலுவலகத்தில் பைல்களோடு போராடும் தந்தைக்குச் சமனாகிவிட்டது போலவும் பள்ளிக்கூடத்தில் 'சோக்' கட்டியோடு படிப்பித்து மிரட்டுகிற மாமாவுக்குச் சமானாகிப்போனது போலவும்... இன்னும் அம்மாவுக்கு, அண்ணாவுக்கு,, அக்காவுக்கு என்று எல்லோருக்கும் சமனாகிவிட்டது போலவும் தோன்றும். பொச்சடித்துப் பொச்சடித்துச் சாப்பிடுவான். அந்த வேளைகளில் அவனை மற்றப் பேரன்கள் கேலி செய்வார்கள். தாங்கள் செய்த பெரிய கூத்துக்களையெல்லாம் விலாவாரியாக விவரிப்பார்கள். "இவனைப் போல ஒரு பெட்டைப் பிள்ளை ஒரு இடமும் இல்லை..." என்று வம்புக் கிழுப்பார்கள்.

"பெட்டைப்பிள்ளையோ? நாங்கள் கூட மரமேறுவம். அவன் அதுவுமில்லை. ஆக அவன் பெட்டையுமில்லை..." என்று மச்சாள்காரிகள் சீண்டுவார்கள். அவன் ரோஷம் தலைக்கேற சோற்றுக் கையை உதற முனைவான். பார்வதி ஆச்சி பரிவாய்க் கைப்பிடித்துத் தடுப்பா.

"என்ரை பிள்ளை தங்கமெல்லோடா. உதுகள் எல்லாந்தான் குழப்படிக் கூட்டம்..."

அவன் அவர்களைப் பெருமையாய்ப் பார்ப்பான். மற்றதுகள் வாய்க்குள் நெளித்து தங்களுக்குள் இரகசியம் பேசிச் சிரிக்குங்கள். இவன் ஆச்சியின் மிருதுவான நூல் சேலைக்குள் முடங்கிப் படுத்துக் கொண்டு வானத்தைப் பார்ப்பான். வானத்தில் நட்சத்திரங்கள் சிரிக்கும். எட்டாத் தொலைவிலிருந்து சொண்டு "அருகே வா... வா..." என்றழைக்கும். அவன் கற்பனைக்குள் கரைந்து போவான். ஒரு இனிமையான உலகை சிருஷ்டித்து அதற்குள்ளேயே லயித்துப் போவான். அந்த உலகில் மற்றச் சிறுவர்களுக்கு இடமில்லை; ஆனால் பார்வதி ஆச்சிக்கு நிச்சயமாய் இடமுண்டு.

ஆச்சியின் வீட்டில் அருமையான ஒரு கிணறு உண்டு. ஐம்பத்தெட்டில் கட்டிய கிணறு. வற்றாத தண்ணீர். சவர் படாத... உப்புக் கலக்காத சுத்தமான தண்ணீர். இளநீர் போல... என்று அதைப் பருகுபவர்கள் சொல்லாமற் போவதில்லை. பலகாலமாக அங்கு வசிப்பவர்கள் அங்குதான் தேவைக்கு நீரெடுக்க வருவார்கள். ஊர்ப் பெண்கள் வருகிற போது ஊர்த்துளாவாரமெல்லாம் அங்குதான் அடிபடும். அதுவே ஒரு சந்தோஷமாய் மலரும். அந்த சந்தோஷங்கள் கடந்த சில வருடங்களில் குறுகிக் கொண்டு போயின. யுத்தம் அப்படி நெடுநேரம் நின்று பேசவிடுவதில்லை. அன்றியும் சற்றுத் தள்ளி 'பாசறை' அமைத்திருக்கும் 'அவர்கள்' கிணற்றுக்கு அடிக்கடி வந்து போவார்கள். கிணற்றில் குளிக்கவும் துணி துவைக்கவுமென்று, வந்து கிணற்றடியை அல்லோலகல்லோலப் படுத்திவிட்டுப் போவார்கள். ஆச்சியையும் அப்புவையும் பேச்சுக்கிழுத்து வம்படிப்பார்கள்.

"பேரன்கள்... சரியான குழப்படிப் பிசாசுகள்..." • என்று தோன்றும் எண்ண ஓட்டம் ஒவ்வொருவராய் களத்துக்குப் போக விடைபெற வருகையில் கண்ணில் குளமாய்த் தேங்கும்.

பிறகு 'அவர்கள்' போனார்கள். 'மற்றவர்கள்' வந்தார்கள். 'மற்றவர்'களுக்குரிய கிணற்றடியும் அதுவாய்த்தான் மாறிப்போனது. குளிப்பும் துவைப்பும் பரிகாசப் பேச்சுகளுமாய் கிணற்றடி கலகலக்கும். ஆனாலும் கிணற்றடிப் பூவரசுகள் மௌனத்தோடு எதுவுமே பேசாமல் பார்த்துக் கொண்டிருக்கும். அமைதியான இந்தப் பூமி ஒருநாள் வேட்டுக்களால் சடசடக்கக் கூடும். அப்போது இந்தக் கிணற்றடியில் ஒவ்வொரு 'சீசனிலும்' மாறிமாறிக் குளித்தவர்கள் தங்களுக்குள் அடிபடக் கூடும்.

ஆச்சிக்கு அரசியல் பிடிப்பதில்லை. 'மனிதர்கள்' என்ற சொல் மட்டும் பிடிக்கும். அந்தக் கிணறு இன மத பேதமின்றி எல்லாருக்கும் நீர் சுரப்பது மாதிரி எல்லாருக்கும் அன்பைச் சுரக்க ஆச்சியால் முடியும். அப்பு இடைக்கிடையே அலுத்துக் கொள்வதுமுண்டு.

"உவங்களோடை உனக்கென்ன கதை...?"

அப்புவும் போய்விட்டார். போன வருஷம் வயல் விதைப்பின் போது வயலுக்குள் நின்று சளிப் பிடித்துக் கொண்டது. பிறகு காய்ச்சலாகி ஆஸ்பத்திரியில் வைத்திருந்து மூளை மலேரியா என்று 'சேர்ட்டிபிக்கேற்' கொடுக்கப்பட்டு இரண்டு நாளில் அப்பு செத்துப் போனார். ஆச்சிக்கு வெறுமையாகிற்று வாழ்வு. வெறுமையைப் போக்க ஆச்சிக்குக் கிடைத்த துணை சுட்டா.

தங்களோடு இருக்கச் சொல்லி வற்புறுத்திய ஒவ்வொரு பிள்ளையின் வேண்டுகோளையும் ஆச்சி ஏற்கவில்லை.

"நான் இந்த இடத்தைவிட்டு வரன். அயலுக்கை உள்ள சனம் ஏதேனும் ஒண்டெண்டாப் பாக்காதே..."

பிள்ளைகளது வற்புறுத்தல்களெல்லாம் தேய்ந்துபோக ஆச்சியின் சேலைத் தலைப்புக்குள் முடங்கிக் கொண்டிருந்த சுட்டா எஞ்சி நின்றான்.

"வாடா போவம்" கைப்பற்றியிழுத்த தாயின் பிடிக்குள் அடங்காமல் சிணுங்கலோடு சொன்னான்.

"நான் ஆச்சியோடை இருக்கப் போறன்.."

"ஆச்சியோடையோ..." சின்ன மகனைத் தன் கைப்பிடிக்குள்ளேயே வைத்து வளர்த்தவள் அவனை விட்டுப்போக மனமின்றிக் கேட்டாள்.

"அதுக்கென்ன அம்மாவையும் தனிய இருக்க விடக்கூடா. ஒரு மாசமெண்டாலும் அவன் நிக்கட்டும். இப்ப பள்ளிக்கூடமும் லீவுதானை"

கடைசியில் அதுவே தீர்மானமாய் ஆயிற்று.

சுட்டாவின் நெஞ்செல்லாம் பூக்கள் பூத்துச் சிரித்தன. அவன் வீட்டுக்குப் போவதற்கிடையில் ஒரு நாரையையாவது வசப்படுத்திவிட மாட்டானா...

ஆச்சிக்கு அந்த வேதனையான காலகட்டத்தில் சுட்டாவின் அருகாமை நிரம்பவே இதமாகவிருந்தது. அப்புவுடனான தன் வாழ்க்கையின் இனிய ராகங்களை சுட்டாவிற்கு முன் திரும்பவும் மீட்டிப் பார்க்க முடிந்தது. சுட்டா வானத்து நட்சத்திரங்களை எண்ணிக் கொண்டு ஆச்சி மீட்டுகின்ற அந்த ராகங்களைக் கேட்டுக் கொண்டிருப்பான்.

அந்த ராகங்கள் திடீரென்று நின்றன. பதிலாக பயங்கரச் சத்தங்கள் செவிப்பறையை மோதின. வேட்டுகளின் ஆங்காரத்தில் நாரைகள் பறந்தன. தூரத் தூரப் போகும் நாரைகள்... இன்னும்... இன்னும்... அப்பாலுக்கு அப்பால் பறக்க வேண்டிய தேவை உணர்ந்து பறக்கத் தொடங்கின. கதறல்களோடு பறந்து கொண்டிருந்த நாரைகளிலொன்று பொத்தென... விழுந்தது' பச்சை வயல்களுக்கிடையே.

பஞ்சைத் தோற்கடித்த வெள்ளைச் சிறகுகள் குருதியில் தோய்த் துடிதுடித்து. அரும்பத் தொடங்கிய நெற்பயிர்களுக்கிடையே குருதி வடித்துக் கிடந்தது. கூடப் பறந்த நாரைகள் சுற்றிப் பறந்து கரைந்தன. எதுவுமே செய்ய முடியாமல் அழுது கரைத்து. அடுத்த வெடிச்சத்தத்தின் பின் தாக்குப்பிடிக்க முடியாமல் அவலத்தொனியில் கத்திக் கொண்டே பறந்து போயின.

ஆனால் சுட்டாவை அவர்கள் விட்டுப் போகவில்லை. பார்வதி ஆச்சி கதறிக் கதறி வரண்ட தொண்டைக்குள் இன்னும் வார்த்தைகளைத் தேடியபடி இரத்தமாகிப் போன சுட்டாவைக் கைகளில் ஏந்தியபடி ஓடி வந்து கொண்டிருந்தா. மறித்துச் சுட்ட ஹெலியின் சடசடப்புக்கு அஞ்சிப் பதுங்கிய போதும், ஆச்சியின் கரங்கள் தளராமல் அவனைப் பற்றியிருந்தன.

"ஐயோ என்ரை பிள்ளை..."

ஆச்சியின் கையில் சுட்டாவைப் பார்த்த சுட்டாவின் தாய் தாளமாட்டாமல் மயங்கி விழுந்தாள்.

மற்றச் சிறிசுகள் வெறித்தபடி நின்றன.

ஆச்சியோ துக்கமும் வருத்தமும் களைப்பும் ஒருசேர நோயில் விழுந்தா.

"ஆச்சி நான் இஞ்சையிருக்கிறன்..." பிஞ்சுக்குரல், மென்மையின் சாயல் படிந்தபடி

"எங்கையடா....எங்கை...?"

பச்சை வயல்களின் நெற்கதிர்களைப் பிடித்து அசைத்தபடி ஒளிக்கிறான் அவன்...

"ஆச்சி நான் ஒரு நாரை பிடிச்சிட்டன்..."

வயலுக்குள் செத்துக்கிடந்த நாரை அவன் கைபட்டுச் சிறகசைத்து அவனோடு விளையாடுகின்றது.

"ஆச்சி வாங்கோ ஆச்சி, அறுகுவெளிக்கு..."

"சுட்...டா நான் வாறண்டா..."

"என்னம்மா செய்யுது...?

"என்ன ஆச்சி...?"

"சுட்...டா, சுட்...டா கூப்பிடுறான்..."

"அக்கா.. பால் குடக்கா"

"ஆச்சியின் வாய்க்குள் மகள் பால் ஊற்றுகின்றாள்.

"சு...ட்...டா..."

ஆச்சியின் தலை சரிந்து விழுகின்றது.

* * *

## சினிமாக் க(வ)லை

அசிங்கத்தின் அத்தியாயங்கள்
அரங்கேறுகின்றன....
கழிக்க வேண்டிய காட்சிகள்
காலூன்றுகின்றன....
கொஞ்சிக்களிக்கும்
கோர ஆபாசம்....
விஞ்சும் கொலை...
வீர சாகசம்....
பிஞ்சும், பிதாவும் அருகிருந்து
பஞ்சமில்லை பார்த்து ரசி!

காவாலித்தனத்தையும்
கட்டுப்பாடின்மையையும்
காசைக் கொடுத்து
கைப்பற்றிக் கொள்!

இந்தியாவின் -
வாக்குச்சாவடிகளுக்கு
வாழ்வளிக்கும்
கழிப்பிடங்களைப் பார்த்து
களிப்படை!

முற்போக்குகளை விழுங்கும்
முதலைச் சினிமாவை
முளைக்கவிடு!

கற்பனையில் வாழ்வை
விரயம் செய்யும் விற்பன்னா!
கொஞ்சம் விழி!!
எஞ்சிய வாழ்வு
ஏற்றம் பெற - இனியாவது
யதார்த்தங்களைச்
சொந்தமாக்கிக்கொள்!

– மானியூர் ரட்ணேஸ்

# புத்தாண்டில் ஒரு பூமாலை

'வசந்த பவனம்' என்ற பெயர் கொண்ட அந்த வீட்டின் முன் ஒரு மோட்டார் சைக்கிள் வந்து நின்றது. வீட்டுக்குள், புத்தாண்டுக்காகக் குழந்தைகளுக்குச் சட்டை தைத்துக் கொண்டிருந்தாள் துர்க்கா. நாடு இருக்கிற நிலையில் கொண்டாட்டம் என்ன வேண்டிக்கிடக்கு என்ற சலிப்பில் பலகாரமோ, பட்சணங்களோ, வேறு வேடிக்கைகளோ, கேளிக்கைகளோ பண்டிகைக்காக அவர்கள் செய்வதில்லை. சின்னஞ் சிறிசுகள் பாவம் என்று குழந்தைகளுக்கு மலிவான துணி வாங்கி புதுச்சட்டை மட்டும் தைத்துக் கொடுப்பாள்.

தையல் இயந்திரத்தின் லொட லொட சத்தத்தில் மோட்டார் சைக்கிள் வந்து நின்ற சத்தம் அவளுக்குக் கேட்கவில்லை. "சுவாமிநாதன் அண்ணே!" என்று கூப்பிட்டபடி திறந்திருந்த ஜன்னலுக்கு முன் ஓர் இளைஞன் வந்து நின்றபின்தான் அவனைப் பார்த்து விட்டு துர்க்கா எழுந்து வந்தாள்.

"அக்கா நான் சந்திக்குக் கிட்ட இருக்கிற கொம்மியூனிக்கேசனிலை யிருந்து வந்திருக்கிறன். கணநாதன் எண்டவர் கொழும்பிலையிருந்து ரெலிபோன் கோல் எடுத்துச் சொன்னவர். இரண்டரை மணிக்கு சுவாமிநாதனோடை ரெலிபோனிலை கதைக்கப் போறாராம். இரண்டரை மணிக்கு சுவாமிநாதனை எங்கடை கொம்மியூனிக்கேசனுக்கு வரச் சொல்லுங்கோ"

"அவர் வேறை ஒண்டும் சொல்லேல்லையே?" அவசரமாய்க் கேட்டாள் துர்க்கா.

"இல்லை, சுவாமிநாதனை வந்து கதைக்கச் சொல்லுங்கோ"

"சரி அவர் தோட்டத்துக்குப் போட்டார் நான் போய்க் கூட்டிக் கொண்டு வாறன்" என்று சொல்லி அவனை அனுப்பினாள்.

சுவாமிநாதனின் அண்ணன் கணநாதன் வெளிநாட்டிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வரப்போகிறார் என்பது ஏற்கனவே அவளுக்குத் தெரிந்திருந்த போதும் இப்போது கொழும்புக்கு வந்துவிட்டார். சுவாமிநாதனை ரெலிபோனில் கதைக்கக் கூப்பிடுகிறார் என்ற செய்தி அவளுக்குச் சந்தோஷத்தைக் கொடுத்தது.

'அவர் தோட்ட வேலை முடித்துக் கொண்டு வர எத்தினை மணி ஆகுமோ? இரண்டரை மணிக்கு கொம்மியூனிக்கேசனிலை நிக்க வேணுமே?' துர்க்கா அவசரமாக உடைகளை மாற்றிக் கொண்டு தோட்டத்துக்குப் புறப்பட இரண்டாம் ஆண்டில் படிக்கும் மகன் பாடசாலையிலிருந்து வந்தான்.

"தம்பி, பெரியப்பா கொழும்பிலை வந்து நிக்கிறாராம். அப்பாவை ரெலிபோனிலை கதைக்க வரச் சொன்னவராம். வா. தோட்டத்துக்கப் போய் அப்பாவைக் கூட்டிக் கொண்டு வருவம்."

"பெரியப்பா இஞ்சை எப்பம்மா வருவார்?"


"அப்பா போய் கதைச்சால் தானே தெரியும்."தாயும் மகனும் சந்தோஷமாய்ப் பேசிக் கொண்டே தோட்டத்துக்குப் போனார்கள்.

கணநாதனிடமிருந்து மூன்று மாதங்களுக்கு முன்பே அவர்களுக்குக் கடிதம் வந்தது. "எனக்கு சிற்றிசன்சிப் கிடைச்சிட்டுது. இனி நான் இலங்கைக்கு வந்து போக முடியும். விரைவில் நான் யாழ்ப்பாணத்துக்கு வருவேன். உங்களையெல்லாம் பார்க்க மிகுந்த ஆவலுடன் இருக்கிறேன்." என்று கணநாதன் எழுதியிருந்தார். அவர் வரப் போவது சுவாமிநாதன் குடும்பத்தினருக்கு பெரிய சந்தோஷமாக இருந்தது.

சுவாமிநாதனுக்கு கணநாதன் தான் ஒரேயொரு அண்ணன். உடன் பிறந்த சகோதரங்களென்று வேறு யாருமில்லை. அவர்களின் தந்தை இருவரையும் ஒரேமாதிரியே வளர்த்தார். ஒரே மாதிரியே படிக்க வைத்தார்; தான் விவசாயம் செய்த தோட்டக்காணிகளையும் சமமாகப் பிரித்து இருவருக்கும் எழுதினார். கணநாதன் படித்து ஓர் அரசாங்க உத்தியோகத்தையும் தேடிக் கொண்டார். தனக்குரிய தோட்டக் காணியில் கூலிக்கு ஆள்களை வைத்து விவசாயமும் செய்து கொண்டார். சுவாமிநாதனோ படித்திருந்தபோதும் தமையனைப் போல் உத்தியோகத்தில் சேர்ந்து கொள்ளும் வல்லமை அவனுக்கு இருக்கவில்லை. அந்த ஆசையும் எழவில்லை. தோட்டக் காணிகளும் இருந்ததால் விவசாயத்தையே தன் நிரந்தரத் தொழிலாக்கினான். உத்தியோககாரனைப் பெரிதாகவும், தோட்டக்காரனை குறைவாகவும் மதிக்கிற சமூகம் நம்முடையது. கணநாதனுக்கு பெரிய சீதனத்தோடு பணக்காரப் பெண் மனைவியாய் வந்தாள். சுவாமிநாதனோ அதிகம் சீதனமில்லாமல் சொந்தக்காரப் பெண் துர்க்காவை மணந்து கொண்டான்.

கணநாதன் நிறையச் சீதனத்தோடு பணக்காரப் பெண்ணைக் கல்யாணம் செய்ததால் அவளுக்கு கொஞ்சம் கட்டுப்பட்டு நடக்க வேண்டியிருந்தது. இந்த மண்ணிலே பொருளாதாரத் தடைகள், குண்டுவீச்சுகள், ஷெல்லடி என்று பலத்த அசௌகரியங்கள் தோன்றியபோது கணநாதனின் மனைவி சிணுங்கினாள். "என்ரை சொந்தக்காரர்கள் வெளிநாட்டுக்குப் போட்டினம். நாங்களும் போவம்" என்றாள். தன் மனைவியின் விருப்பத்துக்காகத்தான் கணநாதன் உத்தியோகத்தையும் விட்டு வெளிநாட்டுக்குப் போனார்.

முதலில் தான் தனித்துப் போனார். பிறகு மனைவி, பிள்ளைகளையும் அங்கு வரச் செய்தார். கணநாதன் வெளிநாட்டுக்குப் போன பிறகுதான் சுவாமிநாதனுக்கும் துர்க்காவுக்கும் கல்யாணம் நடந்தது. அவர்களுக்கு வெளிநாட்டுக்குப் போகவேண்டுமென்ற எண்ணம் துளியும் இல்லை. எல்லாப் பிரச்சினைகளுக்கும் அவர்கள் முகம்கொடுத்து



எம். இந்திராணி
ஏழாலை

இங்கேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

துர்க்காவின் வரவால் அண்ணனின் பிரிவு சுவாமிநாதனைப் பெரிதாகப் பாதிக்காவிட்டாலும், அண்ணனைக் கனகாலமாய்க் காண முடியவில்லையே என்ற ஆதங்கம் அவனிடம் இருந்தது. அதனால்தான் அண்ணன் வரப்போகிறார் என்றவுடன் அவனுக்கு அத்தனை மகிழ்ச்சி. பல வருடங்களாகப் பிரிந்திருந்த அண்ணனைக் காணப் போகிறேனென்ற சந்தோசத்தில் காண்போரிடமெல்லாம் கணநாதன் வரப்போகிற விஷயத்தைச் சொல்லி மகிழ்ந்தான் சுவாமிநாதன். அவனுடைய பிள்ளைகளோ, பெரியப்பா வெளிநாட்டிலிருந்து விதவிதமான பொருள்கள், உடைகள் எல்லாம் தங்களுக்குக் கொண்டு வரப்போகிறார் என்று மகிழ்ந்தார்கள். துர்க்காவுக்கோ கணநாதனுடன் பேசிப் பழக்கமில்லை. அவள் கல்யாணம் செய்யுமுன் அவர் வெளிநாட்டுக்குப் போய் விட்டார். பெரிய உத்தியோககாரர் வெளிநாட்டிலிருந்து வரப்போகின்றார் என்று அவர்மீது பெரிய மதிப்பு. அவரது கடிதம் வந்த அன்றிலிருந்து அவள் பெரிதாய் ஆரவாரப்படத் தொடங்கி விட்டாள்.

தங்கள் சாப்பாட்டுக்கு இதுநாள் வரை மில்லிலே அரிசியைத் திரிப்பித்து மாவாக்கி பயன்படுத்தியவள் கணநாதனுக்கு மூன்று கிலோ அரிசியைத் தானே இடித்து மாவாக்கி வாசமாய் வறுத்து வைத்தாள். மிளகாய் அவித்து மோரில் ஊறவைத்தாள். வேப்பம்பூப் பொறுக்கி வடகம் செய்து வைத்தாள். அவர்கள் முன்பு இடம்பெயர்ந்து போய் திரும்பி வந்து பார்த்தபோது அவர்களது வீட்டிலிருந்த கதிரை, கட்டில்கள் இன்னும் அவசியமான பொருள்கள் கூடக் களவாடப்பட்டிருந்தன. இழப்பீடுகளுக்காக அரசாங்கத்திடமிருந்து பணம் வரும் என்று காத்திருந்தது தான் மிச்சம். இன்னும் எதுவும் வரவில்லை. அவர்களும் வீட்டில் தளபாடங்கள் இல்லாமலே வாழ்ந்து கொண்டிருந்தார்கள். கணநாதன் வரப்போகின்றார் என்று அறிந்தவுடன் கடன்வாங்கி கதிரைகளும் கட்டில் மெத்தைகளும் வாங்கிப் போட்டார்கள். சுவரெல்லாம் ஒட்டடை துடைத்து கதவு, ஜன்னல்களுக்கு திரைச்சீலை போட்டு...

வீடே அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது.

இவ்வளவு நாள்களாய் ஏதோ சமைத்தோம் சாப்பிட்டோம் என்று சலிப்போடு வாழ்ந்து கொண்டிருந்தார்கள். சொந்தம் கொண்டாட இங்கே அவர்களுக்கு உறவினர்கள் குறைவாகவேருந்தனர். ஒருவர் கொழும்பில். இன்னொருவர் கனடாவில். வேறொருவர் சுவிஸில் என்று நெல்லிக்காய் மூடையைக் கவிழ்த்து விட்டமாதிரி சிதறிப் பிரிந்துபோன நிலையில், 'ஏதோ நாங்கள் இங்கே வாழ்ந்து கொண்டிருக்கிறோம்' என்று ஏனோதானோ என்று காலத்தைக் கடத்திக் கொண்டிருந்தவர்களுக்கு கணநாதன் வருகிறார் என்றதும் பெரிய ஆரவாரமாக இருந்தது.

கணநாதன் வரப்போகிறாரென்று அவர்களுக்குத் தெரிந்ததே தவிர எப்போது வருவாரென்பது தெரியாது. வீட்டுவாசல் தெருவிலே மோட்டர் வண்டியோ, ஆட்டோவோ போகிற சத்தம் கேட்டால் கணநாதன் வருகிறாரென்று எல்லோரும் வெளியில் வந்து பார்த்து ஏமாறுவார்கள். முற்றத்து மாமரத்தில் காகம் கத்தினால் அன்றைக்கு அண்ணன் வரப்போகிறாரென்று சுவாமிநாதன் தோட்டத்துக்குப் போகாமல் வீட்டிலேயே நிற்பான்.

சுவாமிநாதன், துர்க்கா, அவர்களது பிள்ளைகள் எல்லோருமாய் கணநாதன் வரப்போவதைக் காண்போரிடமெல்லாம் சொல்லிப்பரப்பியதில் விஷயமறிந்த ஊரவர்களும் கணநாதன் வந்துவிட்டாரா என்று பார்க்க அடிக்கடி சுவாமிநாதன் வீட்டுக்கு வந்து போயினர். வயோதிபர், நடுத்தர வயதினர், இளைஞர் என்று ஊரவர் பலரும் அப்படி கணநாதனைப் பார்க்க விரும்பி வருவதற்குக் காரணம் உண்டு. சுவாமிநாதனோ தானுண்டு தன் வேலையுண்டு என்ற மாதிரித் தானும் தன்பாடுமாய் இருப்பான். ஆனால் கணநாதனோ அப்படி இருக்கவில்லை. தன் இளம்வயதிலிருந்தே பொதுச் சேவையில் ஈடுபட்டவர். அந்த ஊர் பாடசாலையின் செயலாளராக இருந்து பள்ளிக்கூடத்தை முன்னேற்றியவர். அந்த ஊர்க் கோயிலின் தர்மகர்த்தாவாக இருந்து அன்னதானங்கள் செய்து ஏழைகளை அரவணைத்தவர். அந்த ஊரில் தூர்ந்துபோயிருந்த குளத்தை சிரமதானத்தின் மூலம் செப்பனிட்டு விவசாயத்திற்கு உதவி செய்தவர். தன் சொந்தக் காணியிலே கட்டடம் அமைத்து நூல் நிலையமும், வாசிகசாலையும் நிறுவி அந்த ஊரவர்களுக்கு அறிவுச்செல்வம் வழங்கியவர். அந்த நூல்நிலையத்தில் அறிவை வளர்க்க வரும் மாணவரில் வசதியில்லாதவருக்கு கொப்பி, பென்சில் கொடுத்து முன்னேற்றியவர். யாராவது தவறு செய்தாலும் கோபிக்காமல் அவர்களுக்கு இதமாகப் புத்திசொல்லித் திருத்துவார். எல்லாரும் அவரால் நன்மை பெற்றார்கள், உதவி பெற்றார்கள். இந்த இடத்தை விட்டுப்போனபின்பு அவர் எல்லோருடைய நினைவிலும் நிற்கக் கூடியவராக இருந்தார். எல்லோருக்கும் வேண்டியவராக இருந்தார். அதனால்தான் இவ்வளவு காலத்திற்குப்பிறகு கணநாதன் வருகிறாரென்றதும் எல்லோரும் அவரைக் காணவிரும்பி அடிக்கடி சுவாமிநாதன் வீட்டுக்கு வந்து விசாரித்தனர். சுவாமிநாதனும் அண்ணன் வரப்போகும் திகதி தெரியாமல் அங்கலாய்த்துக் கொண்டிருந்தான்.

வெளிநாட்டுக் கடிதப் பொதிகள் இங்கு வந்திருப்பதாய்ச் செய்தி கேட்டு இரண்டு நாள்களாய்த் தபாற்காரனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். கடிதம் வரவில்லை. ஆனால் தொலைத்தொடர்பு நிலையத்திலிருந்து அழைப்பு வந்திருக்கிறது.

நாலைந்து மாதங்களுக்கு முன், 'உவ்விடமிருக்கும் கொம்மியூனிக்கேசனின் ரெலிபோன் நம்பரை எழுது. வசதியான நேரம் உன்னோடு பேசிறன்' என்று சுவாமிநாதனுக்குக் கடிதம் எழுதியிருந்தார் கணநாதன். சுவாமிநாதனும் இந்தத் தொலைத்தொடர்பு நிலையத்தின் இலக்கத்தைக் கேட்டு அவருக்கு எழுதிவிட்டான். இவ்வளவு நாளாய் கணநாதனிடமிருந்து ரெலிபோன் அழைப்பு வரவில்லை. வெளிநாட்டிலிருந்து புறப்பட்டு கொழும்புக்கு வந்தபிறகுதான் தம்பியுடன் தொலைபேசியில் கதைக்க அழைத்திருக்கிறார்.

துர்க்கா தோட்டத்துக்கு வந்து விஷயத்தைச் சொன்னதும் பயிருக்கு நீர் இறைத்துக் கொண்டிருந்த சுவாமிநாதன் இயந்திரத்தை நிறுத்திவிட்டு துர்க்காவுடன் புறப்பட்டான். நேராக அந்தத் தொலைத்தொடர்பு நிலையத்துக்கு வந்தான். சரியாக இரண்டு மணிக்கு தொலைபேசி ஒலித்தது. அங்கிருந்தவர் தொலைபேசியை எடுத்து காதில் வைத்தார்.

"ஓ.. சுவாமிநாதன் வந்திருக்கிறார். கதையுங்கோ" என்றார்.

சுவாமிநாதன் தொலைபேசிக் கூண்டுக்குள் போய்த் தொலைபேசியை எடுத்துக் காதில் பிடித்துக்கொண்டான். பேசிப் பழ்கியதில்லை. இதுதான் முதல் அனுபவம். பேசத்தெரியாமல் தடுமாறினான்.

"தம்பி சுவாமிநாதனே! எப்பிடி இருக்கிறாய்?" அண்ணனின் குரல் காதில் விழுந்தது.

"நான் சுகமாய் இருக்கிறன் அண்ணை".

"நான் இங்கவந்து கனநாளாயிட்டுது. வருஷப்பிறப்பு நாளிலைதான் உவ்விடத்துக்கு வரக் கிடைச்சிருக்கு. இப்ப யாழ்ப்பாணத்து நிலமையும் சரியாய்த் தெரியாது. கனகாலமானதிலை இடங்களும் மறந்து போயிருப்பன். நீதான் ரவுணுக்கை வந்து என்னைக் கூட்டிக் கொண்டு போக வேணும்" என்று கணநாதன் கேட்டுக் கொண்டார்.

"சரி அண்ணை, நான் கார் பிடிச்சுக் கொண்டு வந்து உங்களை வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு போறன்."

"சரி தம்பி, நேரிலை காணப் போறம்தானே. பிறகெல்லாம் கதைப்பம்"

சுவாமிநாதன் மகிழ்ச்சியோடு வந்து துர்க்காவுக்கு விஷயத்தைச் சொன்னான். வீட்டில் பெரிய ஆரவாரமாக இருந்தது. கணநாதன் மனைவி பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு வரவில்லை. தனித்துத் தான் வருகிறார். அவர் ஒருவருக்காக அத்தனை சந்தோஷப்பட்டார்கள்.

"துர்க்கா, நான் போய் மிச்சத்துக்கும் இறைச்சுப்போட்டு வாறன். நீ கடைக்குப்போய் தேவையான சாமானெல்லாம் வாங்கி வை" என்றான் சுவாமிநாதன்.

அவன் தோட்டத்துக்குப்போக, அவள் கடைக்குப் போனாள். பருப்பு, பாகற்காய், பயிற்றங்காய், அப்பளம், உருளைக்கிழங்கு என்று மறுநாள் சமையலுக்கு வேண்டியதெல்லாம் வாங்கினாள். வெளிநாட்டிலிருந்து வாறவரை நல்லாய் உபசரிக்க வேணும் இன்னும் என்ன வாங்க வேணும் என்று யோசித்தாள்.

"என்ன யோசிக்கிறியள்?" என்றார் கடைக்காரர்.

"இவருடைய அண்ணன் வெளிநாட்டிலிருந்து வாறார்."

"ஆர், கணநாதன் அண்ணையா? இந்தக் கடைக்கு முதல் போட்டுத் தொடங்க அவர்தான் எனக்கு ஆயிரம் ரூபா தந்தவர். நல்ல மனிசனாச்சே அவர். எப்ப வாறாராம்?"

"வருஷப்பிறப்புநாளிலையல்லே வாறார். ஏதும் பலகாரம் செய்ய வேணுமோ எண்டு யோசிக்கிறன். முந்தி அவருடைய அம்மா இருக்கேக்கை வருஷப்பிறப்பு வருகுதெண்டால் முறுக்கு, பயித்தம்பணியாரம், பால்ரொட்டி எல்லாம் சுட்டு ஒரு தைலாப்பெட்டி நிறைய வைப்பாராம். இப்ப நாங்கள் ஒன்றுமே செய்யிறேல்லையே. அவருக்காக ஏதும் செய்யத்தான் வேணும்" என்றாள் துர்க்கா.

"ஓமோம். வெளிநாட்டிலிருந்து வாறவருக்கு வித்தியாசமாய் ஏதும் செய்து உபசரிக்கத்தான் வேணும். என்ன சாமான் வேணுமெண்டு சொல்லுங்கோ தாறன். காசைப் பற்றி இப்ப அவசரமில்லை."

"கொஞ்சம் லட்டுப் பிடிச்சு வைப்பம். அதுதானே அவசரத்துக்கு சுலபமாய்ச் செய்யக்கூடியது" என்று சொல்லி அதற்கான பொருள்களை வாங்கிக் கொண்டு சென்றாள் துர்க்கா.

சுவாமிநாதன் இறைப்பு முடிந்து மெசினையும் இழுத்துக் கொண்டு வந்து வீட்டில் விட்டுவிட்டு, குளித்துச் சாப்பிட்டதும், வீட்டுக்குப் பக்கத்திலிருந்த நூல்நிலையத்திற்குப் போனான். வாசிப்பதற்காகவல்ல. தன் அண்ணன் வரப் போவதை புழுகத்தான். ஒரு பத்திரிகையை எடுத்து வைத்துக்கொண்டு அங்கிருப்பவர்களைப் பார்த்தான்.

"கணநாதன் ரெலிபோனிலை உன்னோடை கதைச்சவராம். எப்ப வாறதெண்டுசொன்னவர்?" நடுத்தர வயதுக்காரர் ஒருவர் சுவாமிநாதனைக் கேட்டார்.

"வருஷப் பிறப்பு நாளிலை யெல்லே அண்ணன் இஞ்சை வாறாராம்"

"அப்ப நான் இந்த முறை அவரிட்டைத்தான் கைவியளம் வாங்கப் போறேன். அவர் நல்ல கைராசிக்காரனெண்டு முந்திச் சொல்லுறவை"

இவர்களது உரையாடலைக் கேட்டு, உள்ளே புத்தகங்கள் அடுக்கிக் கொண்டிருந்த சங்கர் ஆவலோடு வெளியே வந்தான். சங்கர் ஒரு பட்டதாரி இந்த நூல்நிலையத்தின் செயலாளராய் இப்போது இதை நிர்வகித்துக் கொண்டிருப்பவன்.

"என்ன, கணநாதன் அண்ணை வருஷப்பிறப்பன்றே வாறார்? தன்ரை சொந்தக் காணியிலை கட்டடம் கட்டி, புத்தகங்கள் வாங்கிப் போட்டு, இந்த நூல்நிலையத்தை உருவாக்கினது அவர்தானே. நான் ஏ.எல். படிக்கேக்கை இங்கையுள்ள புத்தகங்களைப் படிச்சுத்தான் பாஸ் பண்ணினனான். என்னை ஒரு பட்டதாரியாய் உருவாக்கினது இந்த நூல் நிலையம்தானே! என்னைப் போல இன்னும் எத்தினைபேர் இதனால் நன்மை பெற்றிருக்கினம். இதை உருவாக்கித்தந்தவர் வாறாரெண்டால் அவரை நாங்கள் நல்லாய் வரவேற்க வேணும். ஒருநாளைக்கு அவருக்குப் பாராட்டுவிழாவும் வைச்சுப் பொன்னாடை போர்த்த வேணும்." மனப்பூர்வமாய்த்தான் சொன்னான் சங்கர். சுவாமிநாதன் சிரித்தான்.

"அண்ணன் உந்தப் பாராட்டுக்கள், பொன்னாடைகளை விரும்பாத ஆளெல்லே"

"முந்தி அப்படி இருந்திருப்பார். இப்ப வெளிநாட்டில இருந்திட்டு வாறார். மாறியிருப்பார்" என்றான் சங்கர்.

"சரி கேட்டுப்பார்த்து அவர் விரும்பினால் செய்யன் தம்பி"

"சுவாமிநாதன் அண்ணை, எனக்கு ஒரு விஷயம் நினைவுக்கு வருகுது. நான் பள்ளிக்கூடத்திலை படிக்கேக்கை பரிசளிப்பு விழாவிலை பரிசு கொடுக்கச் சொல்லி உங்கடை அண்ணனை அழைத்திருந்தவை. அவர் மேடையிலை ஏறின உடனை, நான்தான் பூமாலை போட்டனான். இப்பவும் அதேமாதிரி இங்கை வந்த உடனை நான் அவருக்குப் பூமாலை போட்டு வரவேற்கப் போறேன்". அங்கிருந்த யாவரும் அதை ஆமோதித்தனர்.

"நான் கார் பிடிச்சுக் கொண்டு போய் அண்ணனைக் கூட்டிக் கொண்டு வாறதாய்ச் சொல்லியிருக்கிறன்" என்றார் சுவாமிநாதன்.

"நல்லதாய்ப் போயிற்று. நீங்கள் காரிலை அவரைக் கூட்டிக்கொண்டு வரேக்கை இந்த நூல்நிலைய வாசலிலை காரை நிப்பாட்டி இறங்குங்கோ. நான் இதிலை வைச்சு அவருக்குப் பூமாலை போடுறேன்"

"அப்படியே செய்" என்று எல்லோரும் அவனை ஊக்கப்படுத்தினர்.

காலையில் எழுந்து மருத்துநீர் வைத்து நீராடி, கோயிலுக்குப் போய் வந்து நேரத்துக்கு சமையலையும் செய்துமுடித்தாள் துர்க்கா.

சொன்ன நேரத்துக்கு கார் வந்து நின்றது. சுவாமிநாதனோடு துர்க்காவும் பிள்ளைகளும் சேர்ந்து காரில் ஏறிப் போயினர். இவர்கள் யாழ்ப்பாண நகருக்குப் போய்ச் சேருவதற்கு சற்று முன்பே கணநாதனும் வேறு பயணிகளும் அங்கு வந்து விட்டனர். காருக்குள் இருந்து இறங்கிய உடனே கணநாதன் சுவாமிநாதனை அடையாளம் கண்டு கொண்டார். ஆனால் அவரை அடையாளம்

(ஏஅ ஆம் பக்கம் பார்க்க)

# 3 நிமிட அதிரடி நடவடிக்கை மூலம்
# எலியனை மீட்ட சமஷ்டி அதிகாரிகள்!

அமெரிக்காவுக்கும் கியூபாவுக்கும் இடையில் சுமார் ஐந்து மாதகாலமாக ராஜீய நெருக்கடியை ஏற்படுத்தி வந்த எலியன் கொன்ஸாலெஸ் என்ற ஆறு வயது கியூபாச் சிறுவனின் பிரச்சினைக்குக் கடந்த வாரம் தீர்வு காணப்பட்டு விட்டது.

அமெரிக்க சமஷ்டி அதிகாரிகள் திடீர் அதிரடி நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டு மியாமியில் உள்ள உறவினர்களிடமிருந்து எலியனை

## 5 மாத காலம் நீடித்த நெருக்கடிக்குத் தீர்வு

மீட்டெடுத்து அவனது தந்தையிடம் ஒப்படைத்தனர்.

எலியன் தற்பொழுது வாஷிங்டனுக்கு வெளியே புளோரிடாவில் உள்ள அண்ட்ரூஸ் விமானத் தளப் பகுதியில் பாதுகாப்பான ஓர் இடத்தில் தந்தையுடன் வைக்கப்பட்டுள்ளான். அடுத்த கட்ட நடவடிக்கை அவர்களது கியூபா பயணம்தான். அத்துடன் இந்த விவகாரம் முற்றுப் பெற்றுவிடும்.

புளோரிடா மாநிலத்தில் கியூபா மக்கள் அதிகமாக வாழும் மியாமியையும் கியூபாவின் தலைநகர் ஹவானாவையும் ஆர்ப்பாட்டங்கள் மூலம் போர்க்களம் போன்று மாற்றி இருந்தது இந்த விவகாரம். எலியனை மீண்டும் கியூபாவுக்கு கொண்டுவர வேண்டும் என்பதில் 73 வயது நிரம்பிய கியூப ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோ மிகவும் தீவிரமாக



தந்தையிடம் ஒப்படைக்கப்பட்ட எலியன் மகிழ்ச்சியுடன் காணப்படுகின்றான். அருகில் எலியனின் ஒன்றைவிட்ட சகோதரனான ஆறுமாதச் சிறுவன்.

இருந்தார். கியூபாவில் நடந்த ஆர்ப்பாட்டங்களுக்கு காஸ்ட்ரோ நேரடியாகத் தலைமை வகித்தார். சர்வதேச மட்டத்தில் அமெரிக்காவுக்கு பெரும் அழுத்தங்களைக் கொடுத்து வந்தார்.

மியாமியில் உள்ள எலியனின் உறவினர்கள் எலியனை கியூபாவுக்கு அனுப்புவதில்லை என்பதில் எவ்வளவு தீவிரமாக இருந்தார்களோ அதேஅளவு தீவிரத்தை எலியனை கியூபாவுக்கு அழைத்து வருவதில் காஸ்ட்ரோ காட்டினார்.

தற்பொழுது முடிவுக்கு வந்துள்ள இந்த விவகாரம் அமெரிக்காவுக்கு எதிரான பெரிய வெற்றியாக கியூபாவில் வர்ணிக்கப்படுகிறது. கடந்த 41 வருடகாலமாக பதவியில் இருந்து வரும் காஸ்ட்ரோ அமெரிக்காவுக்குப் பாராட்டு வழங்கி இருப்பது இந்த விவகாரத்தில் மட்டும்தான்.

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனை மட்டும் அல்ல, எலியனை அதிரடி நடவடிக்கை மூலம் மியாமியில் இருந்து மீட்டெடுத்து வந்த அமெரிக்க சமஷ்டி அதிகாரிகளுக்கும் காஸ்ட்ரோவின் பாராட்டுக் கிடைத்திருக்கிறது. கரிபியன் பிராந்தியத்தில் அமைதி ஏற்படுவதற்கு இது ஒரு நல்ல சமிக்ஞை.

### எலியன் உயிர் தப்பிய அதிசயம்

கியூபாவில் 1959 ஆம் ஆண்டு காஸ்ட்ரோ தலைமையில் இராணுவப் புரட்சி ஏற்பட்டு கம்யூனிஸ்ட் ஆட்சி ஏற்படுத்தப்பட்டது. கம்யூனிஸ்ட் ஆட்சியில் வெறுப்புற்றவர்கள் கடந்த காலங்களில் படகுகளில் அமெரிக்காவுக்குத் தப்பி வருவது வழக்கமாக இருந்தது. கொந்தளிக்கும் அத்திலாந்திக் கடலில் புளோரிடா நீரிணையைக் கடந்து புளோரிடா மாநிலத்தின் மியாமி நகரில் இவர்கள் குடியேறி வந்தனர்.

இப்படிச் சட்டவிரோதமாகக் குடியேறியவர்கள் மியாமியிலும் புளோரிடாவின் ஏனைய பகுதிகளிலும் இன்று பெரும் அளவில் வாழ்கின்றனர். அமெரிக்க அரசியலில் ஓரளவு ஆதிக்கம் செலுத்தும் அளவுக்கு இவர்கள் இருந்து வருகின்றனர்.

1999 நவம்பர் 23 ஆம் திகதி கியூபாவில் இருந்து பதினொரு பேருடன் களவாகப் புறப்பட்டு வந்த ஒரு படகும் இப்படியானதொன்றே.

ஆறுவயதுச் சிறுவன் எலியன் அவனது தாயார் உட்பட அந்தப் படகில் பதினொருபேர் இருந்தனர்.

எலியனின் தந்தை ஜுவான் மிக்கேல் கொன்ஸாலெஸ் விவாகரத்துச் செய்து மறுமணம் புரிந்து தனிக் குடித்தனம் நடத்தி வந்தார். மறுமணம் மூலம் அவருக்கு ஆறு மாதக் குழந்தை ஒன்றும் உண்டு.

எலியனும் தாயாரும் மற்றைய ஏனையோரும் வந்த படகு கடும்காற்றுக் காரணமாக நடு இரவில் கடலில் மூழ்கிப்போனது. இந்தப் படகு விபத்தில் மூவர் மட்டுமே உயிர் தப்பினர். காதலர்களான இருவர் நீந்தி மியாமிக் கரையை அடைந்துவிட்டனர். மற்றது எலியன்.

விபத்து நிகழ்ந்த இரண்டு நாள்களின் பின்னர் புளோரிடா நீரிணையில் உயிர்காப்பு றபர் ரியூப் ஒன்றுக்குள் இருந்து அமெரிக்க மீனவர்களால் எலியன் உயிருடன் மீட்கப்பட்டான். பின்னர் அமெரிக்க குடிவரவு, குடியகல்வு அதிகாரிகளால் மியாமியில் அவனது மாமனார் முறையான லாஸரோ கொன்ஸாலெஸின் பாதுகாப்பில் அவன் விடப்பட்டான். கியூபாவில் இருந்து சட்டவிரோதமாக படகுகளில் தப்பி வந்து மியாமியில் குடியேறிய ஆயிரக் கணக்கான கியூபக் குடும்பங்களில் லாஸரோ கொன்ஸாலெஸ் குடும்பமும் ஒன்று.

எலியனின் தந்தை கியூபாவில் இருப்பதால் அவனை கியூபாவுக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்று கியூபா கோரியது. மியாமியில் உள்ள எலியனின் உறவினர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

கடந்த நான்கு மாத காலமாக இடம்பெற்ற சட்டப் பிரச்சினைகள், நீதி விசாரணைகள் ஆகியவற்றின் பின்னர் அமெரிக்க நீதி அமைச்சின் தீர்மானத்துக்கு இணங்க எலியனை அவனது தந்தையிடம் ஒப்படைக்க முடிவு செய்யப்பட்டது

இந்த விவகாரத்துக்கு சுமுகமான தீர்வு காணவே அமெரிக்க நீதி அமைச்சும் சட்டமா அதிபர் திணைக்களமும் விரும்பின. மியாமியில் உள்ள எலியனின் உறவினர்களுடன் நடத்தப்பட்ட பேச்சுக்கள் தோல்வி அடைந்த நிலையிலேயே சிறுவனை மீட்டு தந்தையிடம் ஒப்படைக்கும் சமஷ்டி அதிகாரிகளின் அதிரடி நடவடிக்கைக்கு கிளின்ரன் பச்சைக் கொடி காட்டினர்.

### 3 நிமிட நேரம் நீடித்த அதிரடி நடவடிக்கை

கடந்த வாரம் இடம்பெற்ற இந்த நடவடிக்கை மூன்று நிமிட நேரம் மட்டுமே நீடித்தது. மியாமியில் எலியன் வாழ்ந்து வந்த அவனது மாமனாரான லாஸாரோ கொன்ஸாலெஸின் வீட்டுக்குள் இரவு நேரம் திடீரென சமஷ்டி அதிகாரிகள் நுழைந்தனர். எலியனின் உறவினர்கள் அறையொன்றுக்குள் வைத்துப் பூட்டப்பட்டனர். நவம்பர் 25 ஆம் திகதி புளோரிடா நீரிணையில் வைத்து எலியனை எந்த மீனவர் மீட்டெடுத்தாரோ அதே மீனவர் அப்பொழுது அவனைத் தூக்கி வைத்திருந்தார்.

துப்பாக்கி முனையில் சென்ற சமஷ்டி அதிகாரி ஒருவர் அந்த மீனவரின் கையில் இருந்து எலியனைப் பறித்தெடுத்தார். மறுகணம் பெண் அதிகாரி ஒருவர் அவனைப் போர்வை ஒன்றில் சுற்றித் தூக்கிச் சென்றார். வெள்ளை வான் ஒன்றில் ஏற்றப்பட்டு அன்ட்ரூஸ் விமானத் தளப்பகுதியில் தங்கியிருந்த அவனின் தந்தை ஜுவான் மிக்கேல் கொன்ஸாலெஸிடம் எலியன் ஒப்படைக்கப்பட்டான். இந்த அதிரடி நடவடிக்கை இடம்பெற்று ஒரு சில மணித்தியாலங்களில் அமெரிக்க சமஷ்டி அதிகாரிகள் எலியன் தனது தந்தையுடன் மகிழ்ச்சியாக இருக்கும் படங்களை வெளியிட்டனர்.

சமஷ்டி அதிகாரிகளின் நடவடிக்கை முன்னரே எதிர்பார்க்கப்பட்டதால் எலியனின் உறவினர்கள் தயாராக இருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. அவனை கடலில் மீட்டெடுத்த மீனவரும் அழைக்கப்பட்டிருந்தார்.

சிறுவனை சமஷ்டி அதிகாரிகள் தூக்கிச் சென்றபோது சிறுவன் "என்ன நடக்கிறது?" என்று கேட்டான். பின்னர் ஸ்பானிய மொழியில் "உதவி, உதவி" என்று கத்தினான். தந்தையிடம் கொண்டுசெல்வதாக அவனிடம் அதே மொழியில் அதிகாரிகள் பதில் அளித்தனர்.



மூன்று நிமிட அதிரடி நடவடிக்கை மூலம் அமெரிக்க சமஷ்டி அதிகாரிகள் எலியனைத் தூக்கிச் செல்லும் காட்சி.

இந்த மூன்று நிமிட அதிரடி நடவடிக்கையின் போது எலியன் தங்கியிருந்த வீட்டுக்கு வெளியே இடம்பெற்ற வன்செயல்களின் போது 249 பேர் கைது செய்யப்பட்டனர். ஆர்ப்பாட்டக்காரர்களின் தாக்குதல்களில் மூன்று பொலீஸார் காயமடைந்தனர்.

### எலியனின் தந்தைக்கும் நால்வருக்கும் விஸா

எலியனின் தந்தை, அவரது இரண்டாவது மனைவி, ஆறுமாதக் குழந்தை மற்றும் நெருங்கிய உறவினர்கள் இருவர் உட்பட ஐவருக்கு அமெரிக்கா வர விஸா வழங்கப்பட்டிருந்தது.

இவர்கள் வருவதற்கு முன்னர் எலியனின் பாட்டி முறையான இருவர் கியூபாவில் இருந்து அமெரிக்கா வந்து எலியனை கியூபாவுக்கு அழைத்துச் சென்று தந்தையிடம் ஒப்படைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். அது கைகூடவில்லை.

அதன் பின்னர் எலியனின் தந்தை உட்பட 31 பேர் அடங்கிய குழு ஒன்றை அமெரிக்காவுக்கு அனுப்ப காஸ்ட்ரோ முயற்சி செய்தார். இந்த 31பேர் அடங்கிய பட்டியலில் எலியனின் பாடசாலை நண்பர்களும் மற்றும் கியூப சட்டப் பேரவைத் தலைவர் ரிச்சர்ட்டோ அலார்க்கோன், டாக்டர்கள், ஆசிரியர்கள் ஆகியோரும் இடம்பெற்றிருந்தனர்.

ஆனால் இவ்வளவு பேருக்கும் விஸா வழங்க அமெரிக்கா மறுப்புத் தெரிவித்தது. இதனை அடுத்து 28 பேர் அடங்கிய மற்றொரு பட்டியல் கியூபாவினால் சமர்ப்பிக்கப்பட்டது. இதில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே எலியனின் தந்தையும் மற்றும் நால்வரும் ஆவர்.

### உலக உலா
**என்.பி.சீலன்**

### ஜனநாயகக் கட்சியை பாதிக்குமா?

அமெரிக்காவில் நவம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற இருப்பதால் எலியனின் விவகாரம் பெருமளவில் சர்ச்சையைக் கிளப்பி வருகிறது. இந்த விவகாரத்தில் வெள்ளை மாளிகையே பிளவுபட்டு நிற்கிறது.

தாயை இழந்த சிறுவன் ஒருவனுக்கு தந்தையை விட வேறு எவரும் பாதுகாப்பு வழங்க முடியாது என்பதில் கிளின்ரன் உறுதியாக இருந்தார். ஆனால் உப ஜனாதிபதியும் ஜனாதிபதித் தேர்தலில் கன்சர்வேட்டிவ் கட்சி வேட்பாளருமான அல் - கோர் சிறுவன் தந்தையிடம் ஒப்படைக்கப்பட்டு கியூபா கொண்டு செல்லப்படுவதைக் கடுமையாக எதிர்த்தார்.

அமெரிக்க நாடாளுமன்றத்தில் விசேட சட்டமூலம் ஒன்றைக் கொண்டுவந்து சிறுவனுக்கும் அவனது நெருங்கிய உறவினர்களுக்




எலியனை கியூபாவுக்கு அனுப்பவேண்டாம் என்று கோரி மியாமியில் உள்ள கியூபா பிரஜைகள் ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர்.

கும் நிரந்தர வதிவிட விஸா வழங்கும் நடவடிக்கைக்கு அல் - கோர் ஆதரவு வழங்கினார்.

அமெரிக்க நாடாளுமன்ற சபாநாயகர் மற்றும் புளோரிடா ஆளுநர் ஜெப் புஷ் ஆகியோரும் சிறுவன் தந்தையிடம் ஒப்படைக்கப்பட்டு கியூபாவுக்கு அனுப்பப்படுவதைக் கடுமையாக எதிர்த்தனர். இந்த விவகாரம் குறித்து நாடாளுமன்ற நீதி பரிபாலனக்குழு கூடி விவாதிக்க வேண்டுமென்று சபாநாயகர் கோரிக்கை விடுத்தார்.

### கிளின்ரன் மீது கண்டனம்

சிறுவனை மீட்டதில் கிளின்ரன் கையாண்ட நடவடிக்கை காஸ்ட்ரோவின் ஆயுத தந்திரோபாயங்களை ஒருபடி மிஞ்சிவிட்டது என்று குடியரசுக் கட்சியினர் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். இரண்டாவது உலகமகா யுத்தகாலத்தில் செயற்பட்ட ஜேர்மன் இரகசியப் பொலீஸ் படையான "கெஸ்ராபோ" (Gestapo) போன்று எலியன் விவகாரத்தில் அமெரிக்க சமஷ்டி அதிகாரிகள் நடந்து கொண்டதாகக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

எலியன் விவகாரம் பூதாகாரமாக உருவெடுப்பதற்கு மனிதாபிமான பிரச்சினையை விட அரசியல் பிரச்சினையே முன்நிற்பதாகக் கருதப்படுகிறது.

எலியனை மியாமியில் நிரந்தரமாகத் தங்க வைப்பது மூலம் அமெரிக்கப் பிரஜாவுரிமை பெறுவதில் தமக்கு இருந்து வரும் பிரச்சினைக்கு நியாயம் தேட முடியும் என்று மியாமியில் வாழும் கியூபப் பிரஜைகள் கருதினர்.

அதே சமயம் இந்த விவகாரத்தை அமெரிக்காவுக்கு எதிராக சர்வதேச மயப்படுத்துவதில் காஸ்ட்ரோ வெற்றிபெற்றிருந்தார். யுத்தம் தவிர்ந்த சகல நடவடிக்கைகளையும் அவர் எடுத்திருந்தார்.

இந்த விவகாரத்தில் கூடுதலாகப் பயன் பெற்றவர் கிளின்ரன்தான். சிறுவனைத் தந்தையிடம் ஒப்படைப்பதில் அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள் ஜனாதிபதித் தேர்தலில் அவரது கட்சிக்குச் சிறிது பாதிப்பை ஏற்படுத்தினாலும் சர்வதேச மட்டத்தில் கிளின்ரனின் செல்வாக்கை மேலும் உயர்த்தி விட்டுள்ளது.

சமீபகால வரலாற்றில் சிறுவன் ஒருவனால் ஏற்பட்ட பெரிய நெருக்கடியாக இந்த விவகாரம் கருதப்படுகிறது.

*

# வந்துற்றாள்!

கொட்டு மழையும் குளிர் பனியும் கட்ட விழ்க்கும்
கொடும்புயலும் வன்பிணியும் கொடுமை செய்யப்
பட்டதுயர் போதுமெங்கள் பரனே என்று
பங்குனிநாள் முடிவுவரை பார்த்தி ருந்தோர்
நெட்டுயிர்த்து நெகிழ்வுற்ற நிலைக்கு ளாக
நிலமகளும் அவள் வரவை நெடிது நோக்க
மட்டில்லா மகிழ்வினொடு மக்கள் வேண்டும்
வளங்கொழிக்க வந்துற்றாள் வசந்த மங்கை.

தென்றலிளங் காற்றசைப்பச் சிறந்த வேங்கை
தேன்சொட்டும் மலர்களினைச் சிந்தி நிற்பப்
பன்மரங்கள் செடிகொடிகள் பரிந்த ளித்த
பைந்தளிருள் குயில்களெல்லாம் பண்ணி சைப்ப
புன்மைதவிர் மருந்துநன்னீர் பொருத்திப் பின்னர்
புனலாடிப் புத்தாடை புனைந்து மிக்க
பொன்மைதரு கோலமேவிக் கோவில் சென்று
புத்தாண்டாய் அவள்வரவைப் போற்றி செய்வோம்!

- பொலிகை ச. திருப்பதி -

# வீரச்(ச்)சாவு

நூறிலும் சாகலாம் நோய்நொடி தாக்கினால்
ஆறிலும் சாகலாம் மூப்பினால் உடல்தடு
மாறியும் சாகலாம் வண்டி வாகனங்கள்
ஏறியும் சாகலாம் சாராயத் துளிகளில்
ஊறியும் சாகலாம் மயங்கிலைப் புகைவெறி
ஏறியும் சாகலாம் ஆயுதம் ஏதேனும்
கீறியும் சாகலாம் குருதியில் கொழுப்புப்படை
மீறியும் சாகலாம் கோப்பள வெடிப்புகள்
பீறியும் சாகலாம் உள்ளுக்குள் புழுத்துடல்
நாறியும் சாகலாம் உண்ணும்போதே எதுவும்
ஏறியும் சாகலாம் அடுக்கடுக்காக நாம்
கூறிய சாவுகள் அனைத்திலும் சிறந்தது
வீரிய நம்மீழ விடுதலை மறவனாய்
சீறிடும் சாவுதான் தாயகம் மீட்டிடப்
போரிடும் போதிலே நேரிடும் சாவுதான்

- எம். எஸ். சிவப்பிரியன் -

## மீண்டும் எய்ட்ஸ்.........

(VII ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிறது. இச்சந்தர்ப்பத்தில் வாயில் முத்தமிடுவதையும், காப்புறைகள் இன்றி உறவில் ஈடுபடுவதையும் எச்.ஐ.வியை கொண்டிருக்கும் சாத்தியம் உள்ளவர்கள் தவிர்ப்பது அவசியமாகின்றது. வாய் வழியான பாலுறவு (Oral Sex), மலவாயில் வழியான பாலுறவு (Anal Sex) என்பன இடம் பெறும்போது எச்.ஐ.வி தொற்றை காப்புறைகளால் தடுத்திடல் இயலாத காரியமாகிவிடுகின்றது. எனவே காப்புறை பாவித்துத் தப்பிவிடலாமென்று கண்ட கண்ட இடமெல்லாம் போய் சுதந்திரமாக உறவாடிவிட்டு வர இயலாது.

வெறுமனே மொட்டையாக காப்புறைகளை பாவித்து எய்ட்ஸை தடுக்கலாம் என விடுக்கப்படும் அறிவுறுத்தல்களை நம்பிப் பலர் மோசம் போய் விடுகிறார்கள். காரணம் ஆண், பெண் பிரதான பாலுறுப்புக்களின் தொடுகை மாத்திரமே எய்ட்ஸை கடத்துவதில்லை.

காப்புறை (Gloves) அணிந்து கொண்டு ஆய்வுகூடத்தில் கருமமாற்றும் எச்சரிக்கையுடைய ஒருவரைப் போல எங்கும் எதிலும் பட்டுக்கொள்ளாமல் காப்புறையுடன் (Condoms) செயற்பட இது என்ன ஆய்வுகூடக் கருமமா? காப்புறையே இடைஞ்சல் என நினைப்பவர்களுக்கு அங்கே இங்கே பட்டுக் கொள்ளாதே என்று விடுக்கும் அறிவுரைகள் அந்த நேரத்திலா காதில் ஏறும்?

இத்தகைய விடயங்களைக்கருத்தில் எடுக்காது அடிக்கடி பாலியல் துணையை மாற்றி மாற்றி உறவில் ஈடுபடுபவர்களிடையே ஒருவருக்கு எச்.ஐ.வி இருந்துவிட்டால் அது பலருக்கும் தாவிவிட ஏதுவாகின்றது.

அடிக்கடி துணையை மாற்றாமல் ஆயுட்காலம் முழுவதும் ஒரே துணையுடன் காலம் கழிக்கும்படியான போதனைகள் மேற்கு நாடுகளில் கொஞ்சமும் எடுபடமாட்டாது. இந்தியாவிலும் கூட நடுத்தர மற்றும் மேல்தர வர்க்கத்தினரிடையே கட்டுப்பாடற்ற உறவுகள் சுதந்திரம், முன்னேற்றம் என்றெல்லாம் கருதப்படுகின்றன. இதனால் அங்கும் நகரப்புறங்களில் பெருமளவிலும் ஏன் கிராமப்புறங்களிலும் நோய் பரம்பல் அதிகமாகவே காணப்படுகின்றது.

விபச்சாரம் பெருகியுள்ள நகரப் பகுதிகளில் பண்டைய மேகநோய் போன்ற பாலியல் நோய்களைப் போல ஓரளவுக்கு வெளிப்படையான குணங்குறிகளைக் கூடக் கொண்டிராமல் இது மறைந்திருப்பது மிகவும் ஆபத்தாக அமைகின்றது. அத்துடன் மேகநோய் போன்றவற்றிற்கு எய்ட்ஸுடன் ஒப்பிடும்போது ஓரளவுக்கு சுலபமாகவே சிகிச்சை அளித்துவிடலாம். எனவே அதனைச் சமுதாயத்திலிருந்து அறவே ஒழிக்க முடியாதபோதும் விட்டு வைத்தாலும் பாதகமில்லை என்றேபடுகின்றது.

வறுமை காரணமாகவும் அறியாமை காரணமாகவும் அடுத்தவர்களின் அழுத்தத்தினாலும் விபச்சாரத்திற்கு வரும் இளம்பெண்களின் தொகை பெருகி வருகின்றது. எனவே நோயைக் கட்டுப்படுத்தும் சாத்தியங்கள் அருகிவருகின்றன.

இளம் வயதினரின் கவனத்தைப் பாலியல் பக்கமாக ஈர்க்கும் சினிமாப் படங்களும், நீலப் படங்களும் பெருமளவில் அறிமுகமாகி உணர்வுகளைத் தூண்டிவிடும் சந்தர்ப்பங்கள் உலக நாடெங்கும் அதிகரித்தே வருகின்றன. தவிர அறிவியல் ரீதியாக எச்சரிக்கை உணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் கௌரவம் கருதி எடுக்கப்படுவது இல்லை. இதுவே இரகசியமாக நோய்ப் பரம்பலை ஊக்குவிக்கக் காரணமாய் அமைந்துவிடுகின்றது.

பாலியற் கல்வியைப் புகட்டப் போய் சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தமாதிரி ஆகிவிடுதலும் உண்டு. பாதுகாப்பான உறவுமுறைகளை விளக்கப்போனால் பேசாமல் இருப்பவர்களும் களத்தில் இறங்கிவிடுகிறார்கள். (தொடரும்)

## கார்ல் மாக்ஸ்......

(XVIஆம் பக்கத் தொடர்ச்சி)

**ஆராய வேண்டும். பொருளாதார சூழ்நிலைக்கேற்ப மக்களிடையே வகுப்பு வேற்றுமை உண்டாகிறது. பின்னர் இவ் வகுப்பினருள் ஒரு பிரிவினர் மற்றவர் மீது ஆதிக்கம் செலுத்த முயல்கின்றனர். நாளடைவில் தொழிலாளர்களுக்கு ஆதரவான சூழ்நிலை ஏற்பட்டதும் அவர்களுடைய அதிகாரம் மேலோங்கி முதலாளித்துவம் ஒழிக்கப்படும். பின்பு சோஸலிஸ சமுதாயம் அமையும்' என்பதே மாக்ஸின் கொள்கையாகும்.**

**இக்கருத்துக்களை மக்களிடையே அவர் பரப்பிவந்தார். இவரது சீடர்களில் ஒருவர் தான் சோவியத் ரஷ்யாவின் தந்தை என அழைக்கப்படும் லெனின் என்பது குறிப்பிடத்தக்கது. மாக்ஸின் கொள்கை ரஷ்யா, சீனா மற்றும் கொம்யூனிஸ நாடுகளில் பின்பற்றப்படுகிறது. பொதுவுடைமைக் கொள்கையை உலகெங்கும் பரப்பிய மாபெரும் சிந்தனையாளர் கார்ல்மாக்ஸ் - 1883ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14ஆம் திகதியன்று லண்டனில் காலமானார்.**

*இ.கபிலன்*
*நுணாவில் செங்குந்த இந்து.*

* * * * * * * * * *

## புத்தாண்டில் .......

(XIII ஆம் பக்கத் தொடர்ச்சி)

காண்பது இவர்களுக்குச் சிரமமாய் இருந்தது. உடம்பும் பெருத்து, தலையும் வெண்மண்டையாகி, ஆளும் சிவத்து நல்லாய் மாறியிருந்தார். அவர் பேசிய பிறகுதான் இவர்கள் அவரைக் கணநாதன் என்று கண்டு கொண்டார்கள். அவரைக் காரில் ஏற்றிக்கொண்டு புறப்பட்டார்கள். கார் ஓட ஓட அவர் முகத்தில் சந்தோஷம் மறைந்து விட்டது. கலகலப்பை அவரிடம் காணவில்லை. வழிமாறி வந்தவர் போல சோர்ந்து போயிருந்தார். கார் பெரிய தெருவிலிருந்து தோட்டப்புற வீதியால் சென்றது.

"அண்ணை, உதுதான் என்ரை தோட்டம், பாருங்கோ."

"உன்ரை தோட்டமா? நல்ல செழிப்பாயிருக்கு. காய்கறிப் பயிரெல்லாம் செய்திருக்கிறாய். வாழையும் நிக்குது". கணநாதனின் முகம் சிறிது மலர்ந்தது.

"அண்ணை, உதிலை தெரியிறது உங்கடை தோட்டக்காணி"

"அட உதா? ஒரே பத்தையும் புதருமாய்க் கிடக்கு".

"ஓமண்ணை. பாம்பு, பூச்சியும் இருக்கு. அதுக்கை போகேலாது" கணநாதனின் முகம் சோர்ந்து போயிற்று. குழந்தைகள் 'பெரியப்பா' 'பெரியப்பா' என்று கலகலப்பூட்டியும் அவர் மகிழவில்லை.

"வீடு கிட்டி வருகுது. சங்கர் சொன்னதை மறந்து போனியளே?" துர்க்கா சுவாமிநாதனுக்கு நினைவூட்டினாள். சுவாமிநாதன் சிரித்தபடி கார் சாரதியிடம் சொன்னான்.

"அந்த நூல் நிலையத்துக்கு முன்னாலை காரைநிப்பாட்டு தம்பி" கணநாதனுக்குப் புரியவில்லை. கார் நின்றதும் முன்னால் தெரியும் அந்த நூல்நிலையத்தைப் பார்த்தார். உண்மையில் அவருக்கு நினைவு வரவில்லை.

"அண்ணை, உது நீங்கள் கட்டின நூல்நிலையம்" என்று சுவாமிநாதன் சொன்னபிறகுதான் நினைவு வந்தது. அக்கம்பக்கத்திலிருந்த சில வீடுகள் முற்றாக உடைந்திருந்தன. தெருவின் தோற்றமே மாறியிருந்தது. பல வருடங்களுக்குப் பிறகு இவ்விடம் வருகின்ற அவருக்கு எப்படி நினைவிலிருக்கும்? சுவாமிநாதன் சொன்ன பிறகுதான் அந்த நூல் நிலையத்தைப் பார்த்தார். முகம் மலர, சந்தோஷத்தோடு காரிலிருந்து இறங்கினார். சங்கர் வாழை மடலுக்குள்ளிருந்து பூமாலையை எடுத்துக் கொண்டு கணநாதனை நெருங்கினான். அவருக்குப் புரிந்துவிட்டது. அவர் பின்வாங்கினார். கையால் தடுத்தார்.

"ஏன், நான் உங்களுக்குப் பூமாலை போட அருகதையற்றவனா?" சங்கர் கவலையோடு கேட்டான்.

"இல்லைத் தம்பி. உந்தப் பூமாலைக்கு நான்தான் அருகதையற்றவன்"

"ஏன் அப்பிடிச் சொல்லுறியள் அண்ணை?" சுவாமிநாதன் கேட்டான்.

"இந்தப் பூமாலையை எனக்கு எதுக்காகப் போட நினைச்சீங்கள்?"

"முந்தி நீங்கள் இந்த ஊரை முன்னேற்றப் பல பொதுச்சேவைகள் செய்தனீங்கள். இந்த நூல் நிலையத்தை உருவாக்கி நீங்கள் இன்னும் பல நன்மைகள் செய்தீங்கள். அதை நினைச்சுத்தான் பூமாலை போட்டு வரவேற்க ஆசைப்பட்டன்" என்று பதில் சொன்னான் சங்கர்.

"நான் செய்தது உண்மைதான் தம்பி. ஆனால் இங்கை பிரச்சினைகள் உருவானபோது, அசௌகரியங்கள் ஏற்பட்டபோது அதுக்கு நிண்டு முகம் கொடுக்காமல் சுகம் தேடி ஓடிவிட்டனே! என்ரை தோட்டக்காணியும், தம்பியின்ரை தோட்டக்காணியும் எப்பிடியிருக்கெண்டு வரேக்கை பார்த்துக் கொண்டுதானே வந்தனான். என்ரை தோட்டம் பத்தையும், புதருமாய்க்கிடக்கு. சுவாமிநாதன்ரை காயும், பிஞ்சுமாய் செழிச்சுக் கிடக்குது. என்ன கஷ்டம் வந்தாலும் தம்பி இஞ்சை இருந்து எங்கடை மண்ணை வாழ்விக்கப் பார்க்கிறான். இப்ப சொல் இந்தப் பூமாலைக்கு அருகதையுள்ளவன் நானா? இல்லை, என்ரை தம்பி, அல்லது இந்த மண்ணிலை பற்றுக்கொண்டு இங்கை வாழ்ந்துகொண்டிருக்கிற நீதான் இந்தப் பூமாலைக்கு அருகதையுள்ளவன் கொண்டுவா உனக்கே நான் போட்டுவிடுகிறேன்."

"வேண்டாம் உங்களுக்கென்று கட்டின மாலை இந்தாருங்கள்" சங்கர் கையில் கொடுத்தான்.

"பிரச்சினைகளுக்கு பயப்படாமல் இந்த மண்ணிலேயே தங்கியிருந்து இந்த மண்ணை தன்னாலான அளவு வளப்படுத்தியிருக்கின்ற சுவாமிநாதனுக்குப் போட்டுவிடுகிறன்" என்று தம்பியின் கழுத்தில் பூமாலை போட்டார் கணநாதன்.

(யாவும் கற்பனை)

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல.152

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ■ | 4 | | 5 | 6 |
| 7 | | | 8 | | ■ | 9 | |
| | ■ | 10 | | | 11 | | ■ |
| 12 | 13 | | | ■ | | ■ | 14 |
| ■ | 15 | | ■ | 16 | | | |
| 17 | | ■ | 18 | | | ■ | |
| 19 | | 20 | | | ■ | 21 | |
| | ■ | 22 | | ■ | 23 | | |

சொற்சிலம்பம் இல. 152

சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பெயர்: ............................................................

விலாசம்: ............................................................

............................................................

..............................இங்கே வெட்டுக..............................

முடிவுத் திகதி:- 05 - 05 - 2000

### இடமிருந்து வலம்

1. திருமணம். 4. செயற்கைக்கோள். 7. ஒன்றாகச் சேர்தல். 9.பசு. 10. பொருள். 12. பழையவை அல்ல. 15. மூன்று அடி. 16. குணப்பண்பு. 17. உள்ளே செல்ல. 18. புத்திரன். 19. இணக்கம். 21. வீர. 22. சூரியோதயவேளை. 23. குயில் இப்படிச் சத்தம் இடும்.

### மேலிருந்து கீழ்

1. பிரிவு. 2. இரண்டு. 3. மருத்துவர். 4. திருமணமாகாத பெண். 5.ஒரு நட்சத்திரம். 6. வரி. 8. வெறும் நிலப்பரப்பு. 11. சுறுசுறுப்புக்குப் பெயர் போன மக்களின் நாடு. 13. போராளிகள் செய்யும் அர்ப்பணம். 14. மிருகத் தோற்றம். 16. நலம். 17. தானிய அளவீட்டு அலகு 18. பிள்ளை. 20. பெரிய. 21. கடலால் சூழப்பட்ட நிலப்பரப்பு.

## சொற்சிலம்பம் 150 இன் விடைகள்

### இடமிருந்து வலம்

1. பாதரசம். 5. அவா. 7. தண்ணளி. 8. விரசு. 9. திறம். 10. சரசம். 11. பரதன். 12. சம்பூரணம். 15. சதம். 16. மடு. 17. காகம். 18. படம். 19.பாணன். 20. கரும்பு

### மேலிருந்து கீழ்

1. பாதத்திதேசம். 2. தண்டு. 3. ரணம். 4. சனி. 5. அரசன். 6. வாசம். 8. விரதம். 10. சரணம். 11. பரதம். 13. பூசகன். 14. உடும்பு. 16. மடம். 17. காண. 18. பரு.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்ட சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகள் வருமாறு:-

முதலாம் பரிசு:- தி. தர்மிகா,
10, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

இரண்டாம் பரிசு:- யோ. விக்டர் அரவிந்தன்,
மேர்சா யோ.யோ.நேசராசா,
எல்லை வீதி, சங்கானை கிழக்கு,
தொட்டிலடி.

மூன்றாம் பரிசு:- ப. சத்தியராகவன்,
4ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

புதிர்ப்போட்டிக்கு விடைகள் அனுப்பும்போது கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தை தவறாது குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் - சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்துகொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு: | ரூபா 150.00 |
| இரண்டாம் பரிசு: | ரூபா 100.00 |
| மூன்றாம் பரிசு: | ரூபா 50.00 |

புதிர்ப்போட்டி இலக்கம் 151 இன் முடிவுகள் அடுத்தவார சஞ்சீவியில்.




ஹங்கேரி நாட்டில் டெப்ரெகன் என்ற இடத்திலுள்ள ஓர் உணவு விடுதியில் உணவு பரிமாறுவதற்கு வைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு மேசையின் மீதும் ஒவ்வொரு கடிகாரம் வைக்கப்பட்டிருக்கிறது. எதற்காகத் தெரியுமா? உணவு உண்ண வருபவர் தனக்குத் தேவையான உணவு வகையைக் கொண்டுவரும்படி கூறியதிலிருந்து பத்து நிமிடங்களுக்குள் அவருக்கான உணவு வந்து சேராவிடில் அந்தக் கடிகாரம் அந்த வாடிக்கையாளருக்கே கொடுக்கப்படும்!

நமக்கு சாதாரணமாக கிடைக்கும் ஒரு வாழைப்பழம் - இருபது திராட்சைப்பழங்களுக்கும், நான்கு பேரிச்சம் பழங்களுக்கும், இரண்டு தோடம்பழங்களுக்கும்(அவற்றிலுள்ள சத்துக்களின் அடிப்படையில்) சமமானது.

பெரிய விலங்குகளில் இதயத்துடிப்பானது கூடிய அளவாக இயங்கிக் கொண்டிருக்கும் என்றுதான் பலரும் நினைக்கிறார்கள். ஆனால் இது உண்மையல்ல. அதற்குமாறாக பெரிய விலங்குகளில் இதயத்துடிப்பு வீதம் குறைவாகவே உள்ளது. உதாரணமாக யானையின் இதயத்துடிப்பு நிமிடத்திற்கு 25 தடவைகள்தான்!

விமானங்கள் பறக்கும் உயரம் - விமானத்திற்கு வெளியேயுள்ள அமுக்கத்தைக் கொண்டே அளக்கப்படுகின்றது. வளிமண்டலத்தில் உயரே செல்லச்செல்ல அமுக்கம் குறைகிறது என்ற தத்துவத்தைக் கொண்டு விமானத்தின் குத்துயரமானி (Altimeter) இயங்குகிறது.

## பிரபல நூல்களும் எழுத்தாளர்களும்

சீறாப்புராணம் - *உமறுப்புலவர்*
தேம்பாவணி - *வீரமாமுனிவர்*
கலிங்கத்துப்பரணி - *ஜெயங்கொண்டான்*
பாஞ்சாலிசபதம் - *சுப்பிரமணிய பாரதியார்*
சகுந்தலை வெண்பா - *க.நடேசபிள்ளை*
நன்னூல் - *பவநந்திமுனிவர்*
மணிமேகலை - *சீத்தலைச்சாத்தனார்*
குடியாட்சி - *பிளாற்றோ*
சிவநடனம் - *கலாஜோதி ஆனந்தகுமாரசுவாமி*
சத்தியபோதனை - *மகாத்மா காந்தி*

*அ. அனிதா*
*தரம் 7, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.*

## தலைநகரங்கள்

| நாடுகள் | தலைநகரங்கள் |
|---|---|
| இந்தியா | புதுடில்லி |
| இலங்கை | கொழும்பு |
| பாகிஸ்தான் | இஸ்லாமாபாத் |
| ஜேர்மன் | பேர்லின் |
| ஜப்பான் | டோக்கியோ |
| பிரான்ஸ் | பாரிஸ் |
| நைஜீரியா | ஆபூஜா |
| ஆஸ்திரேலியா | கன்பரா |
| எகிப்து | கெய்ரோ |
| பங்களாதேஷ் | டாக்கா |

*கு.கபேந்தன்*
*தரம் 9,யாழ்.வயாவிளான் ம.ம.வி.*

### *சிந்தனைக்கு.....*

பறவைக்கும் விலங்குக்கும்
மரம் தரும் உத்தரவாதம்
மனிதர் நாம் தருவோமா?

மனிதனின் முதல் நண்பன் -
மரம்
மரத்தின் முதல் எதிரி -
மனிதன்

ஆயுதங்களை மனிதன்
அதிகம் பிரயோகித்தது
மரங்களின் மீதுதான்!

- வைரமுத்து





தொகுப்பு:- நம்பி

## வீடுகட்டி விளையாடலாம்!

இந்த விளையாட்டும் சதுரங்கத்தைப் போன்று யோசிக்கும் - திட்டமிடும் - திறமைகளை வளர்க்கக் கூடியது. சதுரங்கத்தைப் போன்றே இதிலும் இரண்டுபேர் பங்குபற்றலாம்.

விளையாடப்போகும் இருவரும் தலா ஒன்பது காய்களை(புளியங்கொட்டை, சட்டைப் பொத்தான்கள் போன்றவை) எடுத்துக் கொள்ளவேண்டும்.

ஒன்பது காய்களையும் எடுத்துக் கொண்டு, முதலில் யாரேனும் ஒருவர் தனது ஒரு காயை இங்குள்ள 24 கட்டங்களில் ஏதாவது ஒன்றில் வைக்கவேண்டும். தொடர்ந்து அடுத்தவர் வேறு ஒரு கட்டத்தில் தனது காய் ஒன்றை வைக்க வேண்டும். இவ்வாறு மாறிமாறி இருவரும் தங்களுடைய எல்லாக் காய்களையும் கட்டங்களில் வைக்க வேண்டும்.



இனிக் காய்களை நகர்த்தலாம். ஒரு கட்டத்திலிருந்து அருகிலிருக்கும் கட்டத்துக்கு இணைப்புக் கோட்டின் வழியாகத்தான் காய்களை நகர்த்தவேண்டும். ஒருவர் ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு கட்டத்திற்கு மட்டுமே காயை நகர்த்தலாம்.

இவ்வாறு நகர்த்தி மூன்று காய்கள் ஒரே நேர்கோட்டில் வரும்படி அமைக்க வேண்டும். அவ்வாறு அமைத்தால் அவர் ஒரு வீட்டைக் கட்டிவிட்டார் என்று அர்த்தம். மற்றையவரும் அந்த முயற்சியை முறியடித்தபடியே தானும் மூன்று காய்களை நேர்கோட்டில் அமைத்து வீடு கட்ட முயற்சிப்பார்

நீங்கள் மூன்று காய்களை நேர்கோட்டில் அமைத்து வீடு ஒன்றைக் கட்டிவிட்டால் மற்றையவரின் ஏதேனும் ஒரு காயை கட்டத்திலிருந்து வெளியே எடுத்துவிடலாம். அந்தக்காய் வெட்டுப்பட்டதாக அர்த்தம். அப்படி அகற்றும் போது முதலிலேயே மற்றவர் கட்டியிருக்கும் வீட்டிலிருக்கும் காயை அகற்றக்கூடாது. எதிராளியின் தனிக்காய்களை எல்லாம் வெட்டி முடித்துவிட்டால் அதன் பின்னர் வீடு கட்டியிருக்கும் காய்களையும் வெட்டலாம்.


மற்றவரின் ஏழு காய்களை வெட்டிவிட்டாலோ அல்லது அவர் எந்தக் காயையும் நகர்த்த முடியாமல் பாதையை அடைத்துவிட்டாலோ நீங்கள்தான் வெற்றிபெற்றவர் ஆவீர்கள்.

நண்பரைச் சேர்த்துக் கொண்டு ஆட்டத்தை ஆரம்பியுங்கள்!

✪✪✪✪✪✪✪✪✪✪✪✪✪✪✪✪✪✪✪✪✪

அறிஞர்களை அறியுங்கள்-

## கார்ல் மாக்ஸ் (KAARL MARX)



1845இல் பாரீசிலிருந்து பெலிஜியம் நாட்டின் தலைநகரான பிறசல்சிற்குச் சென்ற பொழுது எங்கல்சும் மாக்ஸுடன் கூடச் சென்றார். அங்கிருந்து அவருக்குப் புகழ்தேடித்தந்த நூல்களில் ஒன்றான 'கொம்யூனிஸ்ட் மனிபெஸ்ரோ' என்ற நூலை எங்கல்ஸின் பங்களிப்புடன் வெளியிட்டார். இதில் இவரது சோஸலிஸ தத்துவம் பற்றி முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளது.

1848இல் ஜேர்மனியில் புரட்சிச்சிந்தனைகள் வேரூன்றத் தொடங்கியது. கார்ல் மாக்ஸ் மீண்டும் கோலோன் சென்று தனது பத்திரிகையை மீளப் பிரசுரிக்க ஆரம்பித்தார். ஆனால் 1849இல் ஜேர்மனியில் இருந்து மீண்டும் நாடுகடத்தப்பட்ட நிலையில் லண்டன் நகர் சென்று வாழ்நாளின் மிகுதி நாள்களை அங்கு கழிக்கலானார். 1867இல் 'டாஸ்கப்பிற்றல்' (மூலதனம்) என்ற நூலை வெளியிட்டார். இதில் முதலாளித்துவம் பற்றிய பல கருத்துக்கள் அடங்கியுள்ளன.

கார்ல் மாக்ஸ் நாட்டின் உற்பத்திச் சாதனங்கள் அனைத்தும் சமூகத்தின் பொதுவுடைமையாக இருக்கவேண்டுமென்ற சிந்தனைப்போக்கினை உடையவர். 'மக்களின் அரசியலும் சமூக அமைப்பும் அவர்களுடைய பொருளாதார வாழ்க்கையை பொறுத்திருக்கின்றன. எனவே ஒரு நாட்டின் அரசியலை அறிந்து கொள்ள மக்களின் பொருளாதார வாழ்க்கையை (XV ஆம் பக்கம் பார்க்க)

## நண்பர்கள் மூன்றுவகை

நமக்குக் கிடைக்கும் நண்பர்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவை:-

1. பனைமரத்தைப் போன்றவர்கள்.
2. தென்னைமரத்தைப் போன்றவர்கள்.
3. பாக்குமரத்தைப் போன்றவர்கள்.

### *பனைமரம்*

தானாக முளைத்து , தானாகவே தண்ணீர் குடித்து, வளர்ந்து நமக்குப் பயனைத்தரும். அது போல் நமக்கு வலியவந்து உதவி செய்பவர்கள் பனைமரத்தைப் போன்ற நண்பர்கள்.

### *தென்னைமரம்*

எப்பொழுதாவது தண்ணீர் விட்டால் போதும். வளர்ந்து நற்பலன்களைத் தரும். அதுபோல் எப்போதாவது உதவி செய்தால் அதனை நினைவில் வைத்து நமக்கு அடிக்கடி உதவுபவர்கள் தென்னை மரத்தைப் போன்ற நண்பர்கள்.

### *பாக்குமரம்*

தினமும் தண்ணீர்விட்டால்தான் வளர்ந்து பயனை நல்கும். அதுபோல் தினமும் உதவி செய்தால்தான் நம்மைச் சிலர் கவனிக்கிறார்கள். அவர்கள் பாக்கு மரத்தைப்போன்ற நண்பர்கள்.

*ந. இராமநந்தினி*
*தரம் 10 சுதுமலை சிந்மய பாரதி வித்தி.*

★★★★★★★★★★★★★★

## விடுகதையில் விலங்குகள்

1) இரு எழுத்தால் ஆன மிருகத்தின் பெயரில் ஓர் எழுத்து ஒரு மரத்தின் பெயரைக் குறிக்கும். அந்த மிருகம் எது?

2) மூன்றெழுத்து மிருகத்தின் பெயரில் முதலிரு எழுத்தும் குறிப்பது பசைப் பொருளை. மூன்றாவது எழுத்து தருவது எழுத உதவும் பொருளை. அந்த மிருகம் எது?

3) மூன்றெழுத்தில் உருவான மிருகத்தின் பெயரில் முதல் எழுத்தும் கடைசி எழுத்தும் சேர்ந்து 'பிடுங்கு' என்ற பதம் குறிக்கும். அம்மிருகம் எது?

4) நாலெழுத்தால் ஆன மிருகத்தின் பெயரில் இறுதி இரண்டெழுத்தும் ஒட்டும் பொருளைக் குறிக்கும். அம்மிருகம் எது?

*நிரோஷனா மகேந்திரலிங்கம்,*
*தரம் 6, யாழ் இந்து மகளிர் கல்லூரி.*

## தகவல் துளிகள்!

★ உலகில் பெரிய நதி -
**அமேசன் நதி**
★ உலகில் பெரிய பாலைவனம் -
**சகாரா பாலைவனம்**
★ உலகில் பெரிய கணவாய் -
**சிம்லன் கணவாய்**
★ உலகில் பெரிய வாசிகசாலை -
**லெனின் தேசிய வாசிகசாலை**

*ஜெயவீரசிங்கம் டயானா,*
*வட இந்து மகளிர் கல்லூரி.*

★ உடலில் வியர்க்காத பிராணி -
**சுண்டெலி.**

★ நான்குகால் இருந்தும் நான்குகாலில் நிற்காத விலங்கு -
**கங்காரு.**

★ உலகின் மிகப் பெரிய சுவர் -
**சீனப் பெரும் சுவர்.**

★ பென்சில் கூர் எதனால் செய்யப்பயன்படுவது -
**காரியம்.**

*இ.ஹரனீஸ்குமார்*
*தரம்-9,V.M.M.V*

## குருவி

சின்ன வண்ணக் குருவியொன்று
சிறகடித்துப் பறக்குதம்மா
சின்னச் சின்னப் பழங்களையும்
கொத்திக் கொத்தி உண்ணுதம்மா
இனிய மொழி பேசிப் பேசி
இயற்கைதனை இரசிக்குதம்மா
இதனைப்பார்த்து எனது மனம்
இனிய பாடல் பாடுதம்மா!

*வை.சசிகுமார்,*
*சாவகச்சேரி.*